பாரதி & பாரதிதாசன்

பேராசிரியரின் திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர்கள் (2017-2018)
மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்

EBOOK
மின்நூல்

“பாரதியார்” - பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் திறனாய்வு

‘பேராசிரியர் ந சுப்புரெட்டியார் கண்ட பாரதிதாசன்’



ந சுப்பு ரெட்டியார்100

Centenary Committee Publications

ISBN: 978-81-939835-7-7

ஆய்வேட்டின் நூல்வடிவு

பாரதி & பாரதிதாசன்
பேராசிரியரின் திறனாய்வு

ஆய்வியல் நிறைஞர்கள் (2017-2018)
மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்

ஆய்வேட்டின் நூல்வடிவு

<u>தொகுப்பு</u>
நூற்றாண்டுக்குழு

ந சுப்பு ரெட்டியார்100
Centenary Committee Publications

பாரதி & பாரதிதாசன் - பேராசிரியரின் திறனாய்வு

All rights are reserved. No part of the publication may be reproduced,
stored in a retrieval system(including but not limited to computers,
disks, external drives, electronic or digital devices, e-readers, websites),
or transmitted in any form or by any means(including but not limited to
cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical,
recording, electronic, digital versions) without the prior written permission of the publisher,
not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is
published and without a similar condition being imposed on the subsequent purchase.

Rs.375.oo

முதல் பதிப்பு — அக்டோபர் 2019

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

NA SUBBU REDDIAR 100 EDUCATIONAL TRUST
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939835-7-7

9 788193 983577 >

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்புப்படையல்

அன்னாரது 150ம் ஆண்டினை முன்னிட்டு

பொருளடக்கம்

மதுரை காமராஜ் பல்கலைக் கழக
ஆய்வியல் நிறைஞர்களின் (2017-2018) ஆய்வேடு

Compilation of Dissertations submitted by the Recipients of **'NSR100 Kamatchi Ammal Fellowship'** provided by **Na Subbu Reddiar 100 Educational Trust** in Department of Tamil, Senthamizh Kalluri, Madurai
Madurai Kamaraj University, Madurai

வ.எண்	ஆய்வியல் நிறைஞர், ஆய்வேடு, பேராசிரியரின் நூல்
01	**ச சரளாதேவி** **"பாரதியார்" - பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் திறனாய்வு** ***பாரதீயம்***
02	**செ திவ்யா** **'பேராசிரியர் ந சுப்புரெட்டியார் கண்ட பாரதிதாசன்'** ***பாவேந்தரின் பாட்டுத்திறன்***

பேராசிரியரின் நூற்றாண்டு நிகழ்வுகள்

பதிப்புரை

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015-2016) நூற்றாண்டுக்குழு தமிழகமெங்கும் நடத்திய 108 நிகழ்வுகள் அகில இந்திய சாதனையாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. நூற்றாண்டில் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்கள் வெளியிட்டப்பெற்றன. அவரது 100 நூல்கள், இந்திய அரசு நல்கிய ISBN எண்களுடன், மின் நூல்களாக மாற்றப்பெற்று http://tinyurla.com/y7n2z8pe என்ற இணைதளத்தில் அனைவரும் பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

பேராசிரியரின் படைப்பான ***"கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் – ஒரு மதிப்பீடு"*** எனும் நூலை பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது), இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது) நூற்றாண்டுக்குழு 2018ல் வெளியிட்டது.

பேராசிரியரின் நூட்களை அடித்தளமாக்கொண்டு சுமார் 15 முதுகலைப்பட்ட மாணாக்கர்கள், ஆய்வியல் நிறைஞர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை **NSR100 Kamatchi Ammal Fellowship** மற்றும் **NSR100 Research Fellowship** வழங்கி வருகின்றது.

தமிழ்த்துறை – உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி (மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்) பரிந்துரைத்த இரு ஆய்வியல் நிறைஞர்களுக்கு ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை **NSR100 Kamatchi Ammal Fellowship** வழங்கியது. அதன்கீழ், பேராசிரியரின் ஏதேனும் ஒரு நூலை ஆய்வுக்குரிய மையக்கருத்தாக தேர்ந்தெடுத்து திறனாய்வு செய்த ஆய்வியல் நிறைஞர்களுக்கு உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும்,

தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

திறனாய்வு செய்த ஆய்வியல் நிறைஞர்கள்:

ச சரளாதேவி

செ திவ்யா

ஆய்வேட்டின் தலைப்புகள்:

“பாரதியார்” - பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் திறனாய்வு

‘பேராசிரியர் ந சுப்புரெட்டியார் கண்ட பாரதிதாசன்’

தெரிவு செய்யப்பெற்ற பேராசிரியரின் நூல்கள்:

பாரதீயம்

பாவேந்தரின் பாட்டுத்திறன்

அவ்வாறு சமர்ப்பிக்கப்பெற்ற ஆய்வேடுகள் தொகுக்கப்பெற்று நூலாக வெளியிடப் பெறுகிறது. மாணாக்கர் மற்றும் நெறியாளர் ஆகியோர்கட்கு இந்நூலின் ஒவ்வொரு படியும், செந்தமிழ்க் கல்லூரிக்கு நான்கு படிகளும் வழங்கப்பெறுகின்றன.

நூற்றாண்டுக்குழு

பாரதீயம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015-2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பாரதியார் கவிதைகளனைத்தையும்
திறனாய்வு மூலமாக அவற்றின் சாரத்தை பிழிந்து
தமிழ் கூறும் நல்லுலகிற்கு
வழங்கும் பெருநூலே பாரதீயம்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-2-5

eBOOK ~ மின் நூல்

அணிந்துரை

பாரதீயம் 1983

வழங்கியோர்:

டாக்டர் ஔவை நடராஜன்



அணிந்துரை

டாக்டர் ஔவை நடராசன்,
(இயக்குநர், மொழியாக்கத்துறை, தமிழ்நாடு அரசு)

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே !

என்று பெருமிதத்துடன் - ஏன் எக்களிப்புடன் - கூறிக்கொண்ட பெருங்கவிஞர் பாரதியின் நூற்றாண்டு விழா மாநிலமெங்கும் கொண்டாடப்பெற்றது. தமிழக அரசே இதனைத் தன் பொறுப்பில் மேற்கொண்டது. கவியரசர் பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தையே நிறுவித் தன் புகழை நிலை நிறுத்திக்கொண்டது. பாரதியாருக்கு அறிவுலகம் சூட்டிய புகழ்மாலைகளின் நறுமணம் காற்றில் கலந்த கர்ப்பூரம் போலாகாமல், ஆற்றில் கரைத்த புளி போலாகாமல், அச்சு வடிவம் கொண்டு வெளி வந்துள்ளன. அவற்றுள் பாரதியாரை மிகுந்த ஆர்வத்தோடு பாராட்டி மகிழும் நூல்கள் பல ; ஆற்றலோடு ஆராய்ந்து போற்றும் நூல்கள் சில !....இரண்டாவது வகையைச் சார்ந்தது **பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்** அவர்களின் **பாரதீயம்.** பாரதியாரின் நூற்றாண்டில் அவர் தம் முப்பெரும் பாடல் களைப்பற்றித் தனித்தனியே மூன்று திறனாய்வு நூல்களைத் திறம்பட எழுதி வெளியிட்டுத் தம் போக்கில் கவிஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியவர் இப்பேராசிரியர். இவற்றிற்கும் மேலாக, பாரதியார் கவிதைகள் முழுவதையும் சாரமாகப் பிழிந்து வழங்கும் பெருநூலே **பாரதீயம்** என்னும் இந்நூல்.

'கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும்' கொண்ட **பேராசிரியர் ரெட்டியார்** தமிழுலகம் நன்கறிந்த பேரறிஞர். துறையூரில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நிறுவிஅதன் தலைமையாசிரிய ராகத் தம் கல்விப் பணியைத் தொடங்கிப் பத்தாண்டுகள் அதனைப் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' வளர்த்துவிட்ட பிறகு, காரைக்குடி வள்ளல் அழகப்பர் நிறுவிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யில் தொடக்கம் முதல் பத்தாண்டுகள் தமிழ்த்துறைத் தலைவ ராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி, அதன் பிறகு, திருப்பதி

சென்று, தம் விடாமுயற்சியால் பத்தாண்டுகள் தனி நின்று முயன்று, திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் (தமிழக அரசு மானியத்தைக் கொண்டு) தமிழ்த்துறையைப் புதிதாக நிறுவி, அதன் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி, அதனைப் பேரும் புகழும் பரவ அதனை நன்கு வளர்த்து, ஆய்வுப் பணிகள், கருத்தரங்குகள் முதலிய பல நற்பணிகள் புரிந்து, பதினேழு ஆண்டுகள் தமிழை அப்பல்கலைக் கழகத்தில் ஆல்போல் விரிந்து அருகுபோல் வேரூன்றச் செய்துவிட்டு ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்ற பிறகும் ஒன்றரை யாண்டுகள் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். உழைப்பின் உருவமாகத் திகழும் பேராசிரியர் ரெட்டியார் அறிவியலையும் அருளியலையும் இணைக்கும் பைந்தமிழ்ப் பாலமாக நிலவி இவர் படைத்துள்ள நூல்களின் எண்ணிக்கை இவர் வயதோடு ஐம்பத்தெட்டை எட்டிப் பிடித்துவிட்டது (இவர் வயது 66). தம் வாழ்வின் அநுபவங்களையும் தாம் பயின்ற நூல்களின் நுண்பொருள்களையும் இணைத்து ஆற்றொழுக்காக, படிப்போர் நெஞ்சைப் பிணிக்கும் வண்ணம், நேருக்கு நேர் நின்று பேசுவதைப் போல் எளிய இனிய தமிழில் விரிவாகவும், சுவையாகவும் எழுதுவது இவருக்குக் கைவந்த கலையாகும்.

'பாரதீயம்' என்ற இந்த நூலின் பெயர்க் காரணத்தை, எடுத்த எடுப்பிலேயே பொருத்தமுற எடுத்துரைக்கின்றார் இப்பெரும் பேராசிரியர்.

> "கொள்கை அல்லது கொள்கைகளைத் தமக்கே உரிய முறையில், பிறர் கூறாத வகையில் ஒருவர் கூறுவது அவர்தம் தனிச் சிறப்பாகும். மொழி, இலக்கியம்பற்றிய கொள்கைகளைத் தொகுத்தும் வகுத்தும் கூறினார் தொல்காப்பியர். அவர் கூறிய நூல் 'தொல்காப்பியம்' எனப் பெயர் பெற்றது. அந் நூலுக்குத் தமக்கே உரிய முறையில் உரை கண்டார் நச்சினார்க்கினியர்; அது 'நச்சினார்க்கினியம்' என்ற திருநாமம் பெற்றது. இங்ஙனமே சேனாவரையரின் அந்நூலுக்குரிய உரை 'சேனாவரையம்' என்ற பெயரால் வழங்குகின்றது. இத்தகைய மரபினைப் பின்பற்றிச் சில கொள்கைகளைப் பாரதியார் தமக்கே உரிய முறையில் கூறுவதைப் 'பாரதீயம்' என்று வழங்கலாமல்லவா ?" (பக். 1).

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் **'திருவாய் மொழி'** குறித்து ஆய்ந்து ஆங்கிலத்தில் எழுதி டாக்டர் பட்டம் பெற்ற

பேராசிரியர் ரெட்டியார் ஒரு சிறந்த வைணவத் தமிழறிஞராக விளங்குகின்றார்; வைணவத்தில் பல்வேறு ஆன்மிக நூல்களை எழுதியுள்ளார். இவருடைய வைணவ ஈடுபாடு இவர் எழுதியுள்ள எல்லா நூல்களிலும் வெள்ளிடை மலையாகத் தோன்றும். இந்நூலிலும் பாரதியாரின் விடுதலை வேட்கைக்கு உவமை கூறும்போது "நாயன்மார்கட்கும் ஆழ்வார்கட்கும் பக்தி அவர்தம் மூச்சாக இருந்தது போலவே, இவருக்கு விடுதலையே மூச்சாக இருந்தது" (பக். 7) என்று நயம்பட உரைக்கின்றார்.

'சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்கு
சேரும்ஐம் பூதத்து வியனுலகு அமைத்தாய்
அத்தனை யுலகமும் வண்ணக் களஞ்சிய
மாகப் பலப்பலநல் அழகுகள் சமைத்தாய்'

என்ற பாரதியாரின் பாடற்பகுதி விசிட்டாத்வைத தத்துவத்தை உள்ளடக்கி இருப்பதைப் பேராசிரியர் சுவைபட விளக்குகின்றார் (பக். 67).

இறைவனை அடைதற்கு 'வைணவ' தத்துவத்தில் முடிந்த முடிபாக, எளிய வழியாக, மேற்கொள்ளப்பெறுவது **பிரபத்தி நெறி** (சரணாகதி மார்க்கம்). எனினும், சற்றுக் கடினமாகவுள்ள பக்தி நெறியும் அங்கு மேற்கொள்ளப்பெறுகின்றது' 'என்று கூறி அவற்றைப் பாரதியார் கைக்கொண்டதாக எடுத்துக்காட்டுகின்றார் (பக். 57). பேராசிரியர் ரெட்டியாரின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் பன்னூல் ஆராய்ச்சியும், பழுத்த அநுபவமும் பாரதியார் பாடல்களைப் பாங்குடன் விளக்கப் பல இடங்களில் பயன்படுகின்றன :

> "'தன்னைக் கட்டுதல்' என்பது மனத்தைக் கட்டுதல். ஐம்பொறிகளை அடக்கி மனத்தைக் கட்டுதல் என்று ஞானியர் கூறும் பொருளில் அல்ல ஈண்டுக் குறிப்பிடப்பெறுவது. 'பாதரசமாய்ச் சஞ்சலப்பட்டுக்கொண்டே' (தாயுமானவர்) இருக்கும் மனத்தை, பல பொருள்களின்மீது சஞ்சலப்படுகின்ற மனத்தை அடக்கினால் போதும் என்பது பாரதியாரின் கருத்து" (பக். 83).

பாரதியாரின் கவிதைகளை விளக்கும்போது காலத்திற்கேற்ற கருத்துகளையும், குறிப்பாக அறிவியற்கருத்துகளையும் ஆங்காங்குப் (பக். 52—55; 191—92) பேராசிரியர் ரெட்டியார் விளக்கிச் செல்வது படிப்போரின் சுவையை மிகுவிக்கும் என்பதற்கு ஐயமில்லை.

"கலைச்சொற்களை உண்டாக்கிக்கொண்டு தாய்மொழியில் கற்பித்தலைத் தொடங்கவேண்டும் என்று நினைப்பது, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகு நீரில் இறங்கவேண்டும் என்று எண்ணுவது போலாகும். செயலில் இறங்கினால்தான் அனைத்தும் சீர்படும். தார் சாலை அமைப்பதற்கு முன்னர் மண்சாலை, மண்ணும் பெரிய சல்லிகளும் கலந்த சாலை, மண்ணும் சிறிய சல்லிகளும் கலந்த சாலை என்றிப்படிப் பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளதல்லவா? இந்நிலையைத் தாய்மொழி பயிற்றுமொழியாக அமைவதிலும் சந்திக்க நேரிடும்" (பக்.160).

பாரதியாரின் 'வசன கவிதைகளை' ஆராயும் போக்கில் பேராசிரியர் ரெட்டியார் கூறுவார் :

"நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பக் காலம். தட்டச்சுப்பொறி, அச்சுப்பொறி, அச்சுப்பொறிகளிலும் பல்வேறு நுட்ப வகைகள்—இவை எழுதுவதற்குத் துணையாக அமைந்துவிட்டன... .... செவிப்புலன் ஆட்சியைவிடக் கட்புலன் ஆட்சி மிகுந்துவிட்டது. எவற்றையும் நினைவில் நிறுத்தித் 'தலைக்கனம்' செய்யவேண்டிய இன்றியமையாமை இல்லாது போய்விட்டது. கல்வி முறையிலும் நெட்டுருச்செய்து நினைவிலிருத்த வேண்டிய முறை தளர்ந்துவிட்டது ; தகர்ந்தே போய்விட்டது என்றுகூடச் சொல்லலாம். வாய்விட்டுப் படித்தல் குறைந்து வாய்க்குட் படித்தல் செல்வாக்கு அடைந்துவிட்டது. ஒரே அறையில் - பெரிய மண்டபத்தில் - பலர் இருக்கைகளில் அமர்ந்து 'கல்லாலின் புடை அமர்ந்துள்ள தென்முகக் கடவுள் போல்' நூல்களிலும் வார; பிறை, திங்கள் இதழ்களிலும் ஆழங்கால் பட்ட நிலையில் அமர்ந்திருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருப்பதை நூலகங்களில் காணலாம். (பக். 116).

இந்நூலில் எடுத்துக்காட்டப்பெற்றுள்ள 'இலக்கிய ஆராய்ச்சிக்கு ஓர் அறிமுகம்' என்ற ஆங்கில நூலில் அட்சன் என்ற திறனாய்வுப் பேராசிரியர் கூறும் இலக்கியக் கொள்கைகள்பற்றிய மேற்கோள் 'பாரதீயம்' என்ற இந்நூலுக்கும் பொருந்தும் :

"கவிதையை ஆராயுங்கால், நம்முடைய முதற்கவனம் கவிஞன்பால் செல்லவேண்டும் ; அவன் ஆளுமையிலும் அவன் உலகைப்பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையிலும் செல்லவேண்டும்; வாழ்க்கையை எவ்வாறு நோக்கி விளக்கந் தருகின்

றான் என்பதைக் கவனித்தல் வேண்டும். இது வெளிப்படையாகவும் இருக்கலாம்; குறிப்பாகவும் இதனைப் பெற வைக்கலாம். கலை, வடிவம், வரலாறு போன்ற செய்திகளில் நாம் எவ்வளவு ஆழ்ந்திருந்த போதிலும், மேற்கூறிய கவிதையின் முதனிலைக் கூறுகள் எவ்விதத்திலும் நம் பார்வையினின்று நழுவாமல் காக்கவேண்டும்'' (பக். 150 - 151).

இந்த ஒளியின் அடிப்படையில் இந்த நூலை நோக்கவேண்டும். 'சமுதாயப் பார்வை' (கட்டுரை - 5) என்பதையாவது குறிப்பாக நோக்கவேண்டும். இலக்கியச் சுவைஞர்களும் இலக்கிய ஆய்வாளர்களும் **கட்டுரை - 9, கட்டுரை - 10** ஆகியவற்றைப் படித்துத் தம் சுவையையும் தம் ஆராய்ச்சி நோக்கையும் எடை போட்டுப் பார்த்துக் கொள்ளலாம்; இவற்றில் ஒருவிதப் புத்தொளி வீசுவதையும் காணலாம்.

'உலகை இன்பமயமாகக் கண்டு, உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்கள் கவிஞர்கள்' என்றால் அக்கவிதை தரும் இன்ப அநுபவங்களை எடுத்துரைக்கும் திறனாய்வாளருக்கும் அக்கவிஞர்களுக்கு இருக்கவேண்டிய உள்ளக்கனிவு கட்டாயம் இருக்கவேண்டும். அவ்வகையில் பாட்டரசர் பாரதியாரின் 'நவநீதம்' போன்ற கவிதைகளை நெய்யாக்கி உண்ணத் தந்துள்ளார் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் என்பதை இந்நூலைப் படித்து முடிக்கும் எவரும் ஒப்பி மகிழ்வர்.

'கவிதையின் உயிராற்றல் பகுதிகளை உரைநடையில்தான் வளமாகத் தருதல் இயலும்' என்ற வொர்ட்ஸ்வொர்த்தின் கருத்திற்கேற்ப, பல்வேறு உரைநடைச் செல்வங்களைப் படித்துத் தமிழுக்கு வளம் சேர்க்கும் தெய்வப் பணிபுரிபவர் பேராசிரியர் ரெட்டியார். இத்தனைக்கும் மேலாகப் 'புத்தம்புதிய நுட்பங்கள் கூறும்' அறிவியல் துறைகளில் பாடல் நூல்களின் பாணியில் 'அழுது வடியும் முறையில்' எழுதாது அழகான தமிழில் புதிய அறிவியல் பிடிப்புகளை ஆற்றலுடன் எழுத முடியும் என்று தமிழின் மொழியாண்மையைப் புலப்படுத்தும் பாங்கில் பதினான்கு நூல்களை எழுதித் தமிழன்னைக்கு அணிகளாகப் பூட்டி மகிழ்ந்த பேராசான். அறிவியலில் கல்லூரியில் பட்டப் படிப்புக்குப் படித்த மூன்று துறைகளைத் தவிர வேறு நான்கு துறைகளை அரிதின் முயன்று கற்று அவற்றில் ஆழ்ந்த புலமையை அடைந்தவர் என்பதற்கு இவர் தம் அறிவியல் படைப்புகளே சான்றுகளாக நின்று பேசும். உடல்

நலத்துடனும் மன வளத்துடனும் திகழும் இந்த '**நடமாடும் கலைக் களஞ்சியத்தை**' - உழைப்பின் உருவத்தை - தமிழ்ப் பல்கலைக் கழகமோ, தமிழக அரசோ தக்க முறையில் பொறுப்பினை நல்கிப் பயன்படுத்திக்கொள்வது அவர்தம் தலையாய கடமை. இந்தப் பேராசிரியர் தம் பணியால் அளவிடுபவரேயன்றி, பெறும் பொருளால்-ஊதியத்தால் - அல்ல. இத்தகைய பெரும் பேராசிரியர் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்மொழிக்கும் தமிழகத்திற்கும் நற்றொண்டாற்றிச் சிறக்க வாழ்த்துகின்றேன். வாழ்க நம் பேராசிரியர்! வளர்க இவர்தம் தமிழ்ப்பணி!!

நவம்பர் 2, 1983 **ஔவை நடராசன்**

NSR100

KAMATCHI AMMAL FELLOWSHIP

MPhil Students in Tamil

AWARDED TO :

ச சரளா தேவி

(பதிவு எண்: B7811505)

(பேராசிரியரின் ஒரு நூலை மையக்கருத்தாகக் கொண்டு ஆய்வு செய்த ஆய்வியல் நிறைஞர்)

உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

ஆய்வேட்டின் தலைப்பு: "பாரதியார்" – பேராசிரியர் ந சுப்புரெட்டியாரின் திறனாய்வு

பேராசிரியரின் நூல்: *பாரதீயம்*

கல்லூரி: தமிழ்த்துறை – உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி மதுரைப் பல்கலைக்கழகம்

நெறியாளர்: முனைவர் கோ சுப்புலெட்சுமி

வருடம்: 2017 – 2018

www.nasubbureddiar100.in

தேடி சோறு நிதம் தின்று
பலசின்னஞ் சிறு கதைகள் பேசி
மனம்வாடி துன்பம் மிக உழன்று
பிறர்வாட பல செயல்கள் செய்து
நரைகூடி கிழப் பருவம் எய்தி -
கொடும்கூற்றுக்கு இரையென மாயும்
பலவேடிக்கை மனிதரை போலே
நான்வீழ்வேனென்று நினைத்தாயோ?

facebook.com/Bharathiyar



பாரதீயம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

"பாரதியார்" – பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் திறனாய்வு

மதுரை காமராசர் பல்கலைக்கழக இளநிலை ஆய்வாளர் (எம்.ஃபில்.) பட்டத்தின் ஒரு பகுதியாக அளிக்கப்படும் ஆய்வேடு

ஆய்வாளர்

ச.சரளாதேவி பி.லிட்., எம்.ஏ., டி.பி.டி., பி.ஜி.டி.சி.ஏ.,

பதிவு எண்:B7811505

மேற்பார்வையாளர்

முனைவர் கோ.சுப்புலெட்சுமி எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,டி.ஜி.டி.,

துணைமுதல்வர்

தமிழ்த்துறை-உயராய்வு மையம்

செந்தமிழ்க் கல்லூரி

மதுரை– 625001.

2017– 2018

ஆய்வு முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் தமக்குத் தெரிந்தவாறு தமிழ்ப்பணிகளை செவ்வனே நிறைவேற்றியவர் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார். அவரைப்பற்றியும் அவரது படைப்புகளைப் பற்றியும் ஆய்ந்து உணர்வதே ஆய்வின் நோக்கமாகும்.

புதுமைக்கு வழிகாட்டியவர்களுள் இவரும் ஒருவர். புதுமையிலும் புதுமை காண முற்பட்டவர்களுள் ந.சுப்புரெட்டியாரின் பரம்பரையினரும் பங்கு கொண்டவர்கள். அவர்கள் பாரதியின் படைப்புகளைப் பற்றி கூர்ந்து நோக்கி அவரது வாயிலாக பாரதியின் கவிதைகளை முழுமையாக அறிந்து கொள்வதற்கு ஆய்வு உதவியாக அமைந்துள்ளது.

ஆய்வுத் தலைப்பு

“பாரதியார்“ – பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் திறனாய்வு என்பது இவ் ஆய்விற்குரிய தலைப்பாக அமைகிறது.

ஆய்வு எல்லை

ந.சுப்புரெட்டியார் பல்வேறு இலக்கிய தொகுப்பினை வெளியிட்டுள்ளார். அவற்றுள் பாரதியாரின் கவிதை வரிகளைக் கொண்டு மேற்கொண்ட திறனாய்வே நமது ஆய்வின் தொகுப்பாகும்.

இளநிலை, முதுகலைப் பட்ட ஆய்வேடுகளையும், ந.சுப்புரெட்டியார் அவர்களைப் பற்றியும், பாரதியினைப் பற்றி ந.சுப்புரெட்டியார்யார் அவர்களின்

கூற்றாக அமைந்த பாடல்களைப்பற்றிய தொகுப்பினையும் ஆய்வதற்கு ஆய்வு மேற்பார்வையாளர் உதவியுடன் இவ் ஆய்வேடு அமைந்துள்ளது.

ஆய்வு மூலம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள பதிப்புகளில் ஆய்வுப் பதிப்பு நூலில் இடம் பெற்றுள்ள கருத்துக்களும் பாரதீயம் என்ற ந.சுப்புரெட்டியார் அவர்களின் நூலும் மூலச்சான்றாக அமைகின்றன.

துணைமைச் சான்றுகள்

ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்துக்களும். பாரதி பற்றிய தொகுப்பினை ந.சுப்புரெட்டியார் அவர்களின் நடையில் அமைந்தனவும் துணைமைச் சான்றாகவும் அமைகின்றன.

ஆய்வு நோக்கம்

ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாரதியின் வாயிலாக இலக்கிய நயம், சுவை நயம், பொருள் நயம் போன்றவை செறியப்படைக்கப்பட்ட தொகுப்புகளை வாழ்க்கையோடு தொடர்புடைய சொல்லாட்சிகளை எடுத்துக்காட்டுகிறார். வாழ்க்கைக்கு தேவையானவையும் எடுத்து இயம்புகிறார். பாராட்டும் விதம் போன்றவையும் திறனாய்வு நோக்கிலேயே அமைத்துக் கொண்டுள்ளார் என்பதையும் வெளிக்காட்டுவது ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

கருதுகோள்

பெண்களுக்கு ஏற்பட்ட சமூகசிக்கல்களும் அவற்றில் இருந்து மீட்கொணரும் நிலையும் சிறப்பானதாகும். ஆன்மீக ரீதியில் ஏற்படும் மாறுபட்ட உறவுநிலைகளும் இதன் தனிச்சிறப்பாகும். சமுதாயப் பிரச்சினைகளை வெளியிட்டுள்ள இலக்கிய உத்திகளும் கவிநயமும் தனிச்சிறப்பாவை. தமிழுக்கு என அவர் ஆற்றிய இலக்கிய சுவையுடன் ஒன்றிய தமிழ்ப்பணியும் சிறப்பானவை என ஆராய்வதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

பாரதியார் பற்றியும் அவரது பாடல் வரிகளின் கருத்துக்கள் பற்றியும் ந.சுப்புரெட்டியார் அவர்களின் பார்வையில் அறிதல்.

ஆய்வில் அணுகுமுறை

"பாரதியார்" – பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் திறனாய்வு என்னும் இந்த ஆய்வு சமுதாயம், பெண்ணியம், அரசியல், கலை இலக்கியம், அறிவியல், ஆன்மீகம் முதலிய செய்திகளாய் பகுத்து காண்பதால் பகுப்பு முறையும் விளக்கி கூறுவதால், விளக்க முறையும் அணுகு முறைகளாக அமைகின்றன.

ஆய்வேட்டின் அமைப்பு

இந்த ஆய்வு முன்னுரை, இயல் பகுப்பு மற்றும் ஆய்வு முடிவுரை என பகுக்கப்படுகிறது.

1. ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும், படைப்புகளும்
2. ந.சுப்புரெட்டியாரின் நடையில் பாரதியின் பெண்ணியமும், சமூக உணர்வும்
3. ந.சுப்புரெட்டியாரின் நடையில் பாரதியின் இலக்கியமும், அறிவியல் சிந்தனையும்

என்று மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் விளக்கம்

ஆய்வு முன்னுரையில் ஆய்வு பொருள், ஆய்வு நோக்கம், முதன்மை ஆதாரங்கள், ஆய்வு எல்லை, ஆய்வு முன்னோடிகள், ஆய்வு அணுகுமுறை இவற்றை நவில்வதாக அமைந்துள்ளது.

முதல் இயலான **”ந.சுப்புரெட்டியாரின் வாழ்வும் படைப்புகளும்“** என்னும் இயலில் ந.சுப்புரெட்டியார் அவர்களின் இளமைக்கால நிகழ்வுகளும் அவரது படைப்புக்களைப் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இரண்டாம் இயலான ”ந.சுப்புரெட்டியாரின் நடையில் பாரதியின் பெண்ணியமும், சமூகஉணர்வும் என்னும் இயலில் பெண்களைப்பற்றிய பொதுவானக் கருத்துக்களும், சமூகம் பெண்கள் மீது கொண்ட பார்வையும், பெண்ணியத்திலும், நாட்டின் மீதும் நாட்டு மக்களின் மீதும் கொண்டுள்ள

உணர்வுகளை பாரதியின் வாயிலாக சமூக உணர்வின் மூலம் ஆராயப்பட்டுள்ளது.

மூன்றாம் இயலான” ந.சுப்புரெட்டியாரின் நடையில் பாரதியின் இலக்கியமும், அறிவியல் சிந்தனையும்” ந.சுப்புரெட்டியாருக்கு அறிவியல் மீது கொண்ட காதல் பாரதியின் வாயிலாக இலக்கிய நடையில் புலமைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவுரையைத் தொடர்ந்து ஆய்வுக்குத் துணைபுரிந்த ஆய்வுக்குத் துணைபுரிந்த நூல்களின் பட்டியல் இடம் பெறுகிறது.

இயல் – 1

ந.சுப்புரெட்டியார்யாரின் வாழ்வும் படைப்புகளும்

முன்னுரை

திறனாய்வு என்பது படைப்பாளர்களின் கருத்துக்களை உற்றுநோக்கி ஆழமாகப் பார்த்து ஆழ்நிலைப் பொருள் விளக்கத்தை கொணர்வது திறனாய்வாளரின் முக்கியப் பணியாகும். தமிழில் பல திறனாய்வுகள் தோன்றினும் ந.சுப்புரெட்டியார் அவர்களின் திறனாய்வுகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவையே. அவற்றுள் ந.சுப்புரெட்டியார் அவர்களின் பாரதியைப் பற்றிய திறனாய்வை ஆராய்வதாக இவ்வாய்வு தொடரப்பட்டுள்ளது.

தமிழ் மொழியின் பெருமையினை தமது திறமைகளின் மூலம் உலகுணர வெளிப்படுத்திய தமிழாளன் என்பதில் பெருமை கொள்ளும் விதமாக ந.சுப்புரெட்டியார்யார் அவர்கள் இருந்துள்ளார் என்பது இவ்வாய்வின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

இவர் மொழிப் புலமை உடையவராகவும், இனிய பேச்சாற்றல் உடையவராகவும், இனிய பண்பாளராகவும் இருந்துள்ளார்.

இவரது படைப்பு வாழ்வின், அனுபவங்களையும் பயின்ற நூல்களின் நுண்பொருளையும் இணைத்து ஆற்றொழுக்காக படைக்கப்பட்டவை. படிப்பவர்

நேரில் நின்று பேசுவதைப் போல் உணரக்கூடியதாக இருக்கும். எளிய இனிய தமிழில் எழுதுவது ந.சுப்புரெட்டியார் அவர்களுக்கு கைவந்த கலையாகும்.

பிறப்பு

ந.சுப்புரெட்டியார்யார் அவர்கள் ஞானியார் பரம்பரையைச் சார்ந்தவர். இவரது தந்தை ஞானி நல்லப்பரெட்டி கோட்டத்தூரைச் சேர்ந்தவர். இவரது தாய் காமாட்சி அம்மாள். இவர் ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி 1916ம் வருடம் பிறந்தார். தமது தாய்மாமன் பண்ணை நல்லப்ப ரெட்டியார் இல்லமான “பண்ணையார் வீடு“ என்னும் இல்லத்தில் பிறந்தார். 1926வரையில் பெரகம்பியல் பிறந்து வளர்ந்து கோட்டத்தூருக்கு குடிபெயர்ந்தார். இவர் தனது மூன்றாம் வயதை நிரம்பும் முன் தந்தை 30 வயதை எட்டும் முன் இறைவனடி சேர்ந்தார். “மருந்தனைய தங்கை“யின் வறுமைத் துயரைக் காண இயலாத பண்ணை நல்லப்ப ரெட்டியார் தமது இல்லத்திற்கு சுப்புரெட்டியை அழைத்துச் சென்று விட்டார். “பண்ணைச் செல்வம்“ சுப்புரெட்டி அவர்கள் செல்லப் பிள்ளையாய் வரை ஆரம்பித்தார். பாட்டியார் அவருக்காக அரிசிச்சோறு, பருப்பு குழம்பு, ரசம் ஆகிய உணவைச் சுவைபடச் சமைத்தார்.

வளர்ப்பு

பண்ணைநல்லப்பரெட்டியார் தம் மனைவியைப் பிரிந்து வாழ்ந்தார். 3வயதில் செல்லப் பாப்பா என்ற பெண் குழந்தை இருந்தது. தன்னைப் பிரிந்து வாழ்ந்த மனைவியை இழந்து மறுமணம் செய்து கொண்டார். தன்னுடைய 3

வயது மகள் அவள் பாட்டி செல்லாயம்மாளுடன் வீட்டில் வளர்ந்து வந்தாள். தாய்மாமன் திருமணமான இருமாதங்களில் ந.சுப்புரெட்டியாரும், செல்லாயம்மாளும் பெரகம்பி பண்ணை வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அதன்பின்னர் 4 வருடங்கள் செல்லாயம்மாள் மகள் காமாட்சி அம்மாளுடன் வாழ்ந்து வந்தார்.

கல்வி

5வயது நிறைவு பெறும் போது திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் இலிங்கச் செட்டியார், வைதீக சடங்குகளுடன் ந.சுப்புரெட்டியார் அவர்களுக்கு பண்ணை நல்லப்ப ரெட்டியார் இல்லத்தில் “வித்யாபியாசம்“ என்னும் சடங்கினைத் தொடங்கி வைத்து அவருக்கு தொடக்க நிலைக் கல்வியை ஊட்டினார். “மஞ்சள் தடவிய அளவுபடுத்தப் பெற்றுத் தயாரித்த நான்கைந்து பனையோலை அடங்கிய ஒரு சிறுகட்டில் “ஹனி நீ மோத்துசித்தம்“ என்று எழுதித் தந்ததும், சர்க்கரை கலந்த காய்ச்சிய பாலில் ஏதோ மந்திரம் எழுதிப்பருகச் செய்தலும், அதன் மேற்படி கூறியவற்றை மூன்றுமுறை தனித்தனியாகவும் மூன்று முறையும் சொல்லச் செய்தலும் சிறுவிநாயகர் வழிபாட்டிற்குப் பின்னரே நடைபெற்றதும் நினைவுக்கு வருகின்றன.[1]

1927–1930 கழகத் தொடக்கப் பள்ளியிலும், சாமுவேல் பிள்ளை என்பவரால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பள்ளியிலும் படித்துவந்தார். ஒரு சில ஆண்டுகளில் செல்லாயி அம்மாள் பாட்டி இறந்துவிட்டார். குடும்பத்துப் பொருளாதார நிலை

சிறப்புடையதாக அமையவில்லை. 1931ல் முசிறியல் 4ம் படிவம் படித்து வந்தார். கோட்டத்தூர் கழகத் தொடக்கப்பள்ளியில் வேலூர் வாத்தியார் தொடக்கநிலை ஆசிரியர். பழைய தமிழ்மரபை ஒட்டிக் கற்பித்தவர்.

சுப்பராய உடையார் – உயர்நிலை ஆசிரியர் தலைமை ஆசிரியராக பணிபுரிந்தார். மாலை வேலையில் வீட்டில் வந்து ஆங்கிலம் கற்றுக்கொடுப்பவர். இவர் மாறுதல் பெற்று செல்லவும், சாமுவேல் பிள்ளை தனியாக நடத்திய ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்தார். “அவர் துறையூர் உயர்நிலைத் தொடக்கக் கல்வியை 8வது படித்த 8மாத காலத்தில் தான் தசமபின்னக் கணக்குகளைக் கற்றுக் கொண்டார்.“ ந.சுப்புரெட்டியார்யார் அவர்கள் கல்லூரிக் கல்வியை முடித்துக் கொண்டு துறையூரில் ஒரு உயர்நிலைப் பள்ளியைத் தாமே நிறுவி அப்பள்ளியின் தலைமை ஆசிரியரானார்.

கல்லூரிக்கல்வி

- 1937–1939 திருச்சி சூசையப்பர் கல்லூரியில் படித்து இளங்கலைப் பட்டம் பெற்றார்.
- 1930–ஆகஸ்டில் முசிறியில் உள்ள கழக உயர்நிலைப் பள்ளியில் அவருடைய துறையூர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியரான வி.கே.ஆங்கநாத அய்யர் சேர்த்துவிட்டார்.

ந.சுப்புரெட்டியார் அவருக்கு நன்றிக் கட்டுப்பாடு உடையவராகத் திகழ்ந்தார். அவர் துறையூர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் 1944-ம் ஆண்டில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார்.

பணிகள்

கல்லூரிப் படிப்பிற்குப் பின் 9ஆண்டுகள் துறையூரில் பெருநிலக் கிழவர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளியைத் தாமே நிறுவி தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

“பள்ளியில் முதல் படிவம் முதல் இறுதிப் படிவம் வரை பொது அறிவியலும், நான்காம் படிவம் முதல் இறுதிப் படிவம் வரை தொடக்கக் கணிதமும், ஐந்தாம் படிவம் முதல் ஆறாம் படிவம் வரை இயற்கணிதமும் மற்றும் வடிவக் கணிதமும் இறுதி ஆறாம் பருவத்தில் ஆங்கில ஆசிரியராகவும் ஒன்பது ஆண்டுகள் பணிபுரிந்தார்.“[2]

பின்னர் காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் பத்து வருடம் பணிபுரிந்து “தமிழ்ப்பயிற்றும் நூல்“[3] இயற்றியுள்ளார்.

திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகம் முதுகலை மற்றும் ஆய்வு மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கவும் ஆராய்ச்சி பட்ட வழிகாட்டியாகவும் 17வருடங்கள் பணிபுரிந்துள்ளார்.

தமிழ் ஈடுபாடு

குழந்தைகளுக்கு அன்பு வழியில் அறிவுரை பகரவேண்டும் என்பதற்காக,

"காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு

கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு,

மாலை முழுவதும் விளையாட்டு – என்று

வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!"[4]

என்று தொடக்கக் கல்விக்கு ஒரு பாடத்தையே வகுத்துக் காட்டுகின்றார். எழுத்து, படிப்பு, கணக்கு, இலேசான சரித்திரம் பாடங்கள், பூமி சாஸ்திரம் (புவியியல்), மதப்படிப்பு (சமயக்கல்வி) ராஜ்ய சாஸ்திரம், பொருள் நூல், பௌதீக சாஸ்திரம் (இயற்பியல்), கைத்தொழில், விவசாயம், தோட்டப் பயிற்சி, யாத்திரை.

இவற்றை "அனுபவ அடிப்படையில் கற்க வேண்டும் என்றும் தாய்மொழிக் கல்வி மூலம் பயிற்சி பெறுதல் வேண்டும்"[5] என்பதும் இவரது உயரிய கொள்கையாகும்.

தாம் கற்ற கல்வியை தாய்மொழியில் கற்பிக்க வேண்டும் என்பதே ந.சுப்புரெட்டியார் அவர்களின் கொள்கையாக இருந்தது.

வழிவழியாக முன்னோர் தேடி வைத்த அறிவுச் செல்வத்தை பின்னால் வரும் இளைஞர்களும் பயன்பெற வேண்டும். தாமும் வளர வேண்டும். நாடும்

உயர வேண்டும். வறுமையால் கல்வி தடைபடக் கூடாது. இதற்கு அரசும் செல்வர்களும் வழிவகை செய்தல் வேண்டும் என்பது பேராசிரியரின் கருத்தாகும்.

"விலைப்பாலை விட முலைப்பால் சிறந்ததல்லவா? கல்லூரிகளிலும் பல்கலைக் கழகத்திலும் தாய்மொழி வாயிலாகக் கற்பிக்கும் நிலை ஏற்பட்டால் தான் எத்தனையோ முறையில் வீணடிக்கும் ஆற்றல் சரியான முறையில் பயன்படும்"[6] என்பது ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்து.

"தாய்மொழியிலும், வடமொழியிலும் உள்ள சமயக் கருத்துக்களையும், கல்வெட்டுக்களையும் ஆங்கிலத்தில் படிப்பது தான் சிறப்பு என்று கருதும் குறுகிய எண்ணம் நீங்கும்.

தாய்மொழி சிறப்புடன் மிளிர்வதற்குக் கம்பனும், வள்ளுவனும், இளங்கோவும் ஏனையோரும் படைத்துள்ள இலக்கியங்கள் மட்டும் போதாது."[7]

"இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்

இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்

ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்னருள் உள்ள தருமங்கள் யாவும்

பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்

அன்ன யாவினும் புண்ணியம் கோடி

ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வத்தல்!"[8]

என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப கல்விப் பணியை ஏற்றுக் கொண்ட நாள்முதல் கல்வியைப் பற்றிய சிந்தனையிலேயே ஊறிக் கிடப்பார் என்பது அறிஞர்களின் கூற்று.

மேலும் ஏழைச்சிறுவர்களை முன்னேற்றும் சிந்தனைக்கு பாரதியின் பாடல் வரிகள் தூண்டுதலாக அமைந்துள்ளது.

“காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கலைக்கல்லூரியில் ஏராளமான விண்ணப்பங்கள் வந்தன. ஆசிரியர் பயிற்சி பட்டப் படிப்பு, பொறியியல் கல்லூரி, பல துறை நுண்கலை பயிற்சி நிலையம், மின்சார வேதியியல் ஆய்வு நிறுவனம் இவை எல்லாம் படித்து முடித்த பின் படிப்பிற்கேற்ப வேலை வாய்ப்பிற்கும் இடம் கிடைக்கும்“[9] என்பதை அறிந்து இத்தகைய வள்ளல் அமைத்த பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றார் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப வள்ளல் அழகப்பா பாரதியின் இதயத்தை நன்கு அறிந்தவர் ஆகவே கல்வித் தொண்டில் தம் கருத்தைச் செலுத்தினார். அரசு செய்ய வேண்டிய பணியைத் தாமே பொறுப்பேற்று செய்து வந்தார்.

“பயிற்சிப் பலகல்வி தந்து – இந்தப்

பாரை உயர்த்திட வேண்டும்“[10]

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப தம் கல்வித்தொண்டை ந.சுப்புரெட்டியார் அவர்களும் தம்மால் முடிந்த அளவு தமிழ் வழியிலேயே பணியாற்றினார்.

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

தமிழ்மொழியின் பெயர்த்தல் வேண்டும்

இறவாத புகழுடைய புதுநூல்கள்

தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்“[11]

என்பதற்கேற்ப தமிழ்மொழி மென்மேலும் வளம் பெருகும். “பிற கலைகளைத் தமிழ்மொழியில் வடித்துத் தரும் பணியில் ஈடுபடுவோர்கள் தாம் தமிழ்மொழி அனைத்திற்கும் வளைந்து கொடுக்கும் என்ற உண்மையை அறிவர். அப்பொழுதுதான் சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை என்ற வசையும் நீங்கும்.“[12]

படைப்புகள்

ந.சுப்புரெட்டியார் பல்வேறு வகையான நூல்களைப் படைத்துள்ளார். அவை,

ஆசிரியம் தொடர்பான நூல்கள்

தமிழ் பயிற்றும் முறை, கவிதை பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை, கல்வி உளவியல் கோட்பாடுகள், யுனஸ்கோ, அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

இலக்கியம்

கவிஞன் உள்ளம்

காலமும் கவிஞர்களும்

காதல் ஓவியங்கள்

அறிவுக்கு விருந்து

முத்தொள்ளாயிர விளக்கம்

பரணிப் பொழிவுகள்

அறிவியல் தமிழ்

திருக்குறள் கருத்தரங்கு மலர் – 1974

கம்பனில் மக்கள் குரல்

காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது

திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

தமிழ் இலக்கியத்தில் – அறம், நீதி முறைமை

புதுவை(மை)க் கவிசுப்பிரமணிய பாரதியார் ஒருகண்ணோட்டம்"

சமயம் தத்துவம்

முத்தி நெறி

சில நோக்கில் நாலாயிரம்

வைணவமும், தமிழும்

சைவ சமய விளக்கு

ஆண்மீகமும், அறிவியலும்

வைணவ உரைவளம் (ஆதிகம், இதிகாசம், சம்வாதம்)

கலியன் குரல்

கீதைக் குறள்

கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில்

கண்ணன் துதி

இராமர் தோத்திரம்

கீதைப் பொழிவுகள்

ஆண்டாள் பாவையும் அழகு தமிழும்

திருத்தலப் பயண நூல்கள்

மலைநாட்டுத் திருப்பதிகள்

தொண்டை நாட்டுத் திருப்பதிகள்

பாண்டி நாட்டுத் திருப்பதிகள்

வட நாட்டுத் திருப்பதிகள்

சோழ நாட்டுத் திருப்பதிகள் – முதற் பகுதி

சோழ நாட்டுத் திருப்பதிகள் – இரண்டாம் பகுதி

தம்பிரான் தோழர்

நாவுக்கரசர்

ஞான சம்பந்தர்

மாணிக்க வாசகர்

திறனாய்வு

கவிதை யனுபவம்

பாட்டுத் திறன்

கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்

அகத்திணைக் கொள்கைகள்

புதுக்கவிதை போக்கும் நோக்கும்

கண்ணன் பாட்டுத் திறன்

பாஞ்சாலி சபதம் – ஒரு நோக்கு

பாநீயம்

குயில் பாட்டு – ஒரு மதிப்பீடு

உயிர் தந்த உத்தமன்

ஆழ்வார்கள் ஆரா அமுது

விட்டுசித்தன் விரித்த தமிழ்

சடகோபன் செந்தமிழ்

பரகாலன் பைந்தமிழ்

தன்வரலாறு

நினைவுக் குமிழிகள் – முதற்பகுதி

நினைவுக் குமிழிகள் – இரண்டாம் பகுதி

நினைவுக் குமிழிகள் – மூன்றாம் பகுதி

நினைவுக் குமிழிகள் – நான்காம் பகுதி

நினைவுக் குமிழிகள் – ஐந்தாம் பகுதி

மலரும் நினைவுகள்

சி.ஆர்.ரெட்டி

தாயுமான அடிகள்

பட்டினத் தடிகள்

வடலூர் வள்ளல்

பிரதிவாதி பயங்கரம்

அறிவியல்

மானிட உடல்

அணுவின் ஆக்கம்

இளைஞர் வானொலி

இளைஞர் தொலைகாட்சி

அதிசய மின்னனு

தமது உடல்

இராக்கெட்டுகள்

அம்புலிப் பயணம்

அணுக்கரு பௌதிகம்(செ.பல்கலைக்கழகப் பரிசு பெற்றது)

இல்லற நெறி

வாழையடி வாழை

அறிவியல் விருந்து(தமிழ் வளர்ச்சி கழகப் பரிசு பெற்றது)

வானமண்டலக் காட்சி

ஆராய்ச்சி

- வடவேங்கடமும், திருவேங்கடமும்
- கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி
- Religion and Philosophy of Nalayiram with special Reference to Nammalvar.
- Studies in Arts and Science (61st Birthday commemoration Volume)
- Collected Papers.

பாரதியாரால் ந.சுப்புரெட்டியாா்க்கு ஏற்பட்ட தாக்கங்கள்

- பாரதியார் சொல்ல வேண்டியனவற்றை தமக்கே உரிய முறையில் கூறுவது.
- கவிதை படைப்பாற்றல் திறன்
- கவிதைகளில் பொதிந்துள்ள சமூகயதார்த்தங்கள்

“செய்யும் கவிதை பராசக்தி

யாலே செயப்படுங்காண்“[13]

“பாட்டினிலே சொல்வதும்

அவள் சொல்லாகும்“[14]

என்று பாரதியார் கருதுவதுபோல் “பல நூல்களை எழுதி வெளியிட்டதற்கு என்னுள்ளே அந்தர் யாமியாக இருக்கும் திருவேங்கடமுடையானே காரணம் ஆவான்.“[15] என்பதும் ந.சுப்புரெட்டியார்யின் எண்ணமாக இருந்தது.

பாரதிக்கு எப்படி அனைத்தும் சக்தியாலே என்று உணரமுடிந்ததோ அதுபோலவே ந.சுப்புரெட்டியார் அவர்களுக்கும் திருவேங்கடமுடையானே அனைத்துமானவன் என்பதும்ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்தாகும்.

ஒருவர் உயர்கல்வி பெறுவதற்கு கலைமகளை பக்தியுடன் அணுகி எல்லாவிதமான உழைப்பும் கொடுக்க வேண்டும். இளம் வயதில் இருந்தே இவர் வறுமையால் சூழப்பெற்றார். எந்த நிலை இருந்தாலும் கடின உழைப்பின் மூலமே வெற்றியும் கண்டவர் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

“திருமகள் பாரதியாரைப் புறக்கணித்தது போலவே என்னையும் புறக்கணிக்கின்றாள். அவர் வாக்காலேயே

என்ன பிழைகள் கண்டோ – அவள்

என்னைப் புறக்கணித் தேகிடுவாள்

என்று நானும் நைந்து கூறுகின்றேன்“[16] என்று ந.சுப்புரெட்டியார் அவர்களும் தமது வறுமை நிலையை பாரதியின் போக்கிலேயே வெளிப்படுத்தியுள்ளார்.

- பாரதி பிறர் கூறாத வகையில் தமக்கே உரிய முறையில் கூறுவது.

- ♣ பாரதி கவிதைகளில் காலத்திற்கு ஏற்ற கருத்தும் காலத்திற்கு ஏற்ற அறிவியல் கருத்துக்களும் ந.சுப்புரெட்டியார் அவர்களை பெரிதும் கவர்ந்தவையாகும்.

“மணிவாசகப் பெருமான், தேவார மணிகள், ஆழ்வார்கள், அருணகிரியார், தாயுமானவர், இராமலிங்க அடிகள் ஆகியோரின் பாடல்களின் மூலம் பக்தி கலந்த கவிதைச் சுவையை அனுபவிக்கின்றோம். அவரவர் மனநிலைக்கு ஏற்ப பக்தியோ, கவிதைச் சுவையோ மீதூர்ந்து நிற்கும் பாரதியார் தமிழ் உலகிற்கு புதிய பேரொளியையும், ஆற்றலையும், தற்காலச் சுவையையும் தேடி அளித்தார். தற்கால இளமை ததும்பும் நாகரீகத்தின் கலைப்போக்கையும் கருத்துப் போக்கையும் சுவையுறக் கலந்து பாமாலைகள் சூட்டித் தமிழன்னையைக் களிப்புறச் செய்தார். தமிழ்க்கவிதையின் நறுமணம் வாழப்போய் செய்யுள்களை இயற்றுவதைச் செப்பிடு வித்தையைச் செய்வது போல் பயின்று, ஏட்டுக் கற்பனையை வைத்துக் கொண்டு சத்தும் தற்காலப் பண்புமற்ற கவிதையை அளவுகோல்களால் ஆக்கும் மெய்ப்புலமையற்ற தமிழ்ப்புலவர்கள் திண்டாடிக்கொண்டிருந்த காலத்தில் பாரதியார் உண்மைக் கவிதையின் ஒளியைத் தமிழகம் காணச் செய்தார்.“[17]

காலத்திற்கு ஏற்ப கருத்துக்கள் சுவைப்பட அமைவது பாரதியின் தனிச்சிறப்பாகும். கற்பனைகலந்த கவிதையை அழகுபட மொழியும் புலவர்களுள் பாரதியின் உண்மை நயத்தினை திறம்பட தமிழுலகிற்கு வெளிச்சம் போட்டுக்

காட்டுவனவாக ந.சுப்புரெட்டியார்யின் படைப்புக்கள் அமைந்துள்ளமை சிறப்புடையதாகும்.

“பாரதியின் கனிந்த கவிதை படைக்கும் ஆற்றலும் பெருமித தோரணையுடன் திகழும் கற்பனை ஆற்றிலும், உள்ளத்தைப் பறிகொடுக்கச் செய்ய வல்லது“[18].

கவி படைக்கும் திறனும் அவை ஒவ்வொன்றும் எவருக்கும் அஞ்சாத தோரணையுடன் மிறுக்குடன் திகழும் கற்பனையும் ந.சுப்புரெட்டியார் அவர்களை கவர்ந்தவையாகும்.

“தனிச் சொற்கள் சிறப்புடன் ஆளப்பெற்றிருப்பதைப் பாட்டைப் படிக்கும் போதே உணர்ந்து அனுபவிக்கலாம்“[19] “சொற்கள் ஒன்றோடொன்று காதல மணம் புரிந்து கலந்து வாழும் காட்சியே பாரதியாரின் கைவண்ணத்தில் காணலாம்.“[20]

கவிஞரின் கற்பனைக்கு ஏற்ப மொழி இயைந்து வருவதைப் பாடல் எங்கும் காணலாம் என்பது ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்தாகும்.

“பாரதியார் தம் காலத்துப் பாரத மக்களின் நிலையை “நெஞ்சு பொறுக்குதிலையே“ என்ற கவிதையில் அற்புதமாக எடுத்துக் காட்டுகின்றார் அவர் காலத்து மக்களின் நிலையை நினைத்து

“என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?

என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்!

என்று பாடுகிறார். தீண்டாமை பற்றிய பாடல்களே இல்லை. நாடு விடுதலையடைந்த பிறகு இது தீவிரமாகக் கவனிக்க வேண்டிய பிரச்சினை என்று விட்டுவைத்தனர் போலும்”[21]

பாரதியார் வாழ்ந்த காலம் நாட்டில் பெரும் குறைகள் நிலவிய காலம். நாட்டுப்பற்று, விடுதலை வேட்கை, தாய்மொழிப்பற்று, சமுதாய முன்னேற்றம், பழமையல புதுமை, பெண்விடுதலை, அறிவுத்தெளிவு இவற்றை பாரதி தம் கவிதையில் சுட்டியுள்ளமைகண்ட ந.சுப்புரெட்டியார் அவர்கள் தம் தெளிவினையும் புலப்படுத்தி விளக்கியுள்ளார்.

புத்த கயையில் முதற்கடமை

நமது பெற்றோருக்கு திதி கொடுக்க வேண்டி காசி சென்று அங்கிருந்து கலை என்ற திருத்தலப் பயணம் மேற்கொண்டால் தமது கடமையை முறையே நிறைவேற்றினார். ஆசிய ஜோதியாகிய புத்தபிரான் தோன்றிய நாடு புத்தருடைய தியாகம், அவர் போதித்த அறிவுரைகள் வெளிநாட்டு அறிஞர்களின் மனதை மிகவும் கவர்ந்தது. அவரையும் அறியாத புத்துணர்ச்சி எழுந்தது. ஒருசிலா் அங்குமிங்கும் நடமாடினாலும் அவர்கள் நடையிலும், பேச்சிலும் அமைதி காணப்பட்டது. முதன் முதலாக கூச்சல், குழப்பம், கேளிக்கை முதலியன ஒன்றும் இல்லாத அமைதியான இயலாகத் திகழ்ந்தது. அந்த இடம் தியானத்தின் திருவுருவாக விளங்கியது என்பது ந.சுப்புரெட்டியார்யின் கருத்தாகும்.

தமது கடமையை முறையே நிறைவேற்றினார். ஆசிய ஜோதியாகிய **புத்தபிரான் தோன்றிய நாடு**

“பூரண ஞானம் பொதிந்த நன்னாடு

புத்தப் பிரான்அருள் பொங்கிய நாடு

பாரத நாடு பழம்பெரும் நாடே”[22]

என்ற பாரதியின் பாடல் வரிகள் மட்டுமே நினைவு கூறும்படி அமைந்தது.

எளிமை நோக்கு

ந.சுப்புரெட்டியார் அவர்கள் எதையும் எளிமை நோக்குடன் அணுகுபவர். நகைச்சுவை ததும்ப எதையும் வெளிப்படுத்தும் விதமும் கொண்டவர்

“கூத்தாட் டவைகுழாத் தற்றே பெருஞ்செல்வம்

போக்கும் அது விழிந் தற்று“[23]

என்பது வள்ளுவப் பெருந்தகையின் பொய்யாமொழி செல்வத்தின் பெருமையை அருமையான உவமையினால் விளக்கப்பெற்றது.

செல்வம் சேர்வதற்கு அதிகக்காலம் ஆகும். அது முதல் நான்கடியிலும் அவை செலவு ஆகும். காலம் குறைவு என்பதை அடுத்த அடியிலும் வெளிப்படுத்தியதாக கூறுவார்.

“சினிமா கொட்டகை நிரம்ப எடுத்துக் கொள்ளும் காலமும் அது குறைய எடுத்துக்கொள்ளும் காலமும் போன்று செல்வம் சேர்வதற்கும், போவதற்கும்

ஆகும்“[24] உவமையக் கூறும் ரசிக மணியின் ரசிக உள்ளத்தை வியந்து பாராட்ட முடிகின்றது.

பரிசுச் சீட்டுகள் நடமாடும் இக்காலத்தில் திடீர் குபேரர்கள் ஆவதற்கு புதிய குறள் தான் எழுத வேண்டும் என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் கூறுகிறார்.

சிறப்புப் பெயர்கள்

ந.சுப்புரெட்டியார் அவர்களின் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் “அருங்கலைக்கோன்“ என்ற விருதையும், பண்ருட்டி வைணவ சபை இவரது சமயப்பணியைப் பாராட்டி “ஸ்ரீசடகோபன் பொன்னடி“ என்ற விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. மேலும் இவருக்கு “தமிழ்ச்செம்மல்“, கலைமாமணி“, “ஆய்வுத் தமிழரசு என்ற சிறப்புப் பட்டங்களும் உள்ளன.“[25]

பேராசிரியர் அவர்களின் இலக்கிய நயமும், அறிவியல் பணியும் வியக்கத்தக்க வகையில் அமைந்தவை. அவை உரிய சிறப்புக்களை அடைவதற்கு இதுபோன்ற விருதுகளும், பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளது சிறப்பிற்குரியன.

அடிக்குறிப்புகள்

1. நினைவுக் குமிழிகள் -1.
2. மேலது.,
3. நினைவுக் குமிழிகள் 3 – ப.154.
4. பா.பா.6 – ப.224.
5. பாரதீயம் – ப.104.
6. நினைவுக் குமிழிகள் 3.
7. பாரதீயம்ப-105.
8. பாரதியார் கவிதைகள் தோ.பா. வெள்ளைத்தாமரை 9 ப.-19.
9. நினைவுக் குமிழிகள் 3 ப.-138
10. பாரதியார் கவிதைகள் பாப்பா பாட்டு ப.-224.
11. தேசிய கீதம் – 3 ப-141
12. பாரதீயம் ப-107
13. வி.ந.மா
14. தோ.பா.பேதை நெஞ்சை
15. ந.சுப்புரெட்டியார்யின் நூல்களுள் முடிவுரை
16. நினைவுக் குமிழிகள் 4 (ப.-89)
17. பாரதீயம் (ப-17)
18. குயில் பாட்டு 1 மதிப்பீடு ப-83.
19. மேலது., ப.-85.

20. மேலது.,

21. பாரதீயம் ப.-82.

22. நினைவுக் குமிழிகள் 1

23. குறள் 332.

24. நினைவுக் குமிழிகள் 2

25. நினைவுக் குமிழிகள் 4 அட்டைப்பட விளக்கம்

இயல் – 2

ந.சுப்புரெட்டியார் நடையில் பாரதியின் பெண்ணியமும், சமூக உணர்வும்

முன்னுரை

ந.சுப்புரெட்டியார் நடையில் பாரதியின் பெண்ணிய சிந்தனை என்னும் இந்த இரண்டாவது இயலில் பெண்ணியம் சார்ந்த பழக்கங்கள், சமூகக் கட்டுப்பாடுகளால் தவிர்க்கப்படும், மறுக்கப்படும் பெண்கள் நிலை இருந்தது. அவர்களுக்கான உரிமைகளையும், சுதந்திர நிலையினையும் விளக்குவதாய் பாரதியின் கூற்றாகவும் இவ்ஆய்வு உள்ளது. அதே சமயம் பெண்களின்நிலையும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவதையும்தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பாரதிவாயிலாக கடவுளிடம் கொண்டஉறவுமுறைபோன்றவையும் ந.சுப்புரெட்டியார் அவர்களின் கூற்றாக ஆராய்ந்து விளக்கப்படுகிறது.

பாரதியின் நாட்டுப்பற்று உணர்வும் மக்கள் மீது கொண்ட சகோதர உணர்வும் ந.சுப்புரெட்டியார் அவர்களை பெரிதும் கவர்ந்தவையே. விடுதலை என்ற ஒன்று கிடைக்க தம் பாடல் வரிகள் மூலம் அனல் துளிகளை தெறிக்கவிட்டவர் பாரதியார். மக்களிடையே வீர உணர்வை வளர்ப்பதும். எல்லோரும் ஒன்றே என்ற உயரிய கொள்கையை மக்களிடையே ஏற்படுத்தியவர். பாரதி நாடும், மக்களும் விடுதலை பெற்று சதோதர உணர்வுடன்

பழக பெரும் பங்கு ஆற்றியவர். பாரதியின் சமூக உணர்வினை ந.சுப்புரெட்டியார் அவர்களின் ஆய்வின் மூலம் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

பெண்ணுரிமை

பெண்ணுரிமை பற்றி பாரதியார் பல்வேறு கோணங்களில் பேசுகின்றார். சமூகத்தில் ஆணும் பெண்ணும் சமம். இருவரும் இருகண்களை ஒத்தவர்கள் என்பது கவிஞனின் கருத்து.

“பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் – புவி

பேணி வளர்ந்திடும் ஈசன்

மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல

மாத ரறிவைக் கெடுத்தார்

கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்திக்

காட்சி கொடுத்திட லாமோ

பெண்க ளறிவை வளர்த்தால் – வையம்

பேதைமை யற்றிடுங் காணீர்“[1]

“சமுதாயத்தில் பாதிப்பேரை அறிவுக் கேடராக்கினால் ஏனைய பாதியும் இருளில் மூழ்கிவிடும்“[2] என்பது இவரின் நம்பிக்கை. பெண் இனத்தை புதிய பார்வையுடன் எடுத்துக் காட்டுபவர் நம் புதுமைக்கவிஞர். பராசக்தியே தன்னுள் இருந்து “புதுமைப்பெண்ணை“ வாழ்த்துவதாகக் கருதுகின்றார்.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்

எட்டு மறிவினில் ஆணுக்கிங் கேபெண்

இளைப்பில்லை காணென்று கும்மியடி“[3]

“புதுமைப் பெண் இக்காலத்திற்குப் பயன்படும் சாத்திரங்கள் பல கற்க வேண்டும்“[4] எனக் கூறுகிறார். எதனைக் கூறினாலும் புதுப் போக்கில் புதிய சந்தம் அமைந்த எளிய பாடல்கள் மூலம் கேட்போர், படிப்போரின் சிந்தனையை தூண்டுவதாய் பாரதியின் பாடல் அமைந்துள்ளது.

பெண்ணுரிமை பற்றிய சிந்தனை பாரதியிடம் மிகுதியாகவே இருந்தது. இது பெண்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும் என்று வற்புறுத்துவார்.

“வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா!

மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்“[5]

என்று அன்னையும், மனைவியும் முக்கியம் என உயர்த்திப் பேசுவார். “காதல் செய்யும் மனைவியே சக்தி என்றும் அவளால் கடவுள்நிலை“[6] எய்த வேண்டும் என்றும் கூறுவர்.

“புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்

பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்

சதுமறைப்படி மாந்தர் இருந்த நாள்

தண்ணிலே பொதுவான வழக்கமாம்“[7]

என்று புதுமைப்பெண்ணை வைத்துப் பேசுவர்.

“இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால் ஆடவருக்

கொப்பில்லை மாதர், ஒருவன்தன் தாரத்தை

விற்றிடலாம் தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம்

முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை”[8]

என்ற உரை திரௌபதி சபையிலே நீதிகேட்டு அழுகின்றாள். அதற்கு வீட்டுமாசார்யன் உரைநிகழ்த்தும் கூற்றாய் அமையும்.

பெண்களை தம் விருப்பம் போல் ஆண்கள் அடக்கியாள்வதைப் பாரதியார் விரும்பவில்லை மாட்டை மாடுகளை வசக்கித் தொழுவத்தில் அடைப்பது போல் பெண்களையும் வீட்டினுள் அடக்கி வைப்பதை பாரதி விரும்ப வில்லை. “நாயை விற்பதைப் போல் பெண்களின் கற்பபைப் பற்றி ஆண்கள் எப்போதும் ஈரமின்றிக் கதைப்பதையும் அதனைப் பெண்களுக்கு எடுத்துக் காட்டுவதையும் இவர் விரும்புவதில்லை.“[9] கற்பு என்பது ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவானதாகும் என்பது கவிஞரின் கொள்கை.

கடவுள் கொள்கை

பாரதியாரின் கவிதைகளை மேலோட்டமாகப் பார்த்தாலும் அவர் ஒரு “சக்திவழிபாட்டாளர்“ என்பது அனைவருக்கும் தெரிந்ததே. “சர்வம் விஷ்ணு

மயம்“ என்ற பண்டைய மரபு “சர்வம் சக்தி மயம்“ என்ற புது மரபாக இவரிடம் காணப்பட்டது. சக்தியைப் பற்றிய அதிக எண்ணிக்கையில் பாடல்கள் இவர் பாடியுள்ளார்.

”எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்

விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம் – பண்ணியதோர்

சக்தியே நம்மைச் சமைத்தது காண்“[10]

சக்தி என்ற பாடலில் எங்கும் சக்தி வடிவாம் என்ற கருத்தை காட்டுகின்றார். பிறிதோர் இடத்தில்,

“கனியிலே சுவையும், காற்றிலே இயக்கமும்

கலந்தாற் போலநீ அனைத்திலும், கலந்தாய்,

உலகெலாந் தானாய் ஒளிர்வாய் போற்றி!

அன்னை, போற்றி! அமுதமே போற்றி!

புதியதிற் புதுமையாய் முதியதில் முதுமையாய்

உயிரிலே உயிராய் இறப்பிலும் உயிராய்

உண்டெலும் பொருளில் உண்மையாய் என்னுளே

நானெனும் பொருளாய், நாளையே பெருக்கித்

தானென மாற்றும் சாகாச் சுடராய்

கவலைநோய் தீர்க்கும் மருந்தின் கடலாய்

பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிறாய்”[11]

பாரதியார் எல்லாத் தெய்வத்தையும் சக்தியின் வெளிப்பாடாகவே கருதுகின்றார். இதனை "கண்ணம்மா என் குழந்தை என்ற பாடலில் "பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு" என்றும் "கண்ணன் என் தாய்" என்ற பாடலில் "தாய்" என்பது "பராசக்தியே" என்றும் குறிக்கின்றது.

பெண்கல்வி

> **"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
>
> **அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்"[12]**

ஆணும் பெண்ணும் கல்விகற்று அறிவில் சிறந்து விளங்குவார்களானால் இப்புவி, சிறப்படையும் என்பது பாடலின் பொருளாகும்.

> **"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்**
>
> **ஓது பற்பல நூல்வகை கற்கவும்**
>
> **இலகு சீருடை நாற்றிசை நாடுகள்**
>
> **யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே**
>
> **திலக வாணுத லார்நங்கள் பாரத**
>
> **தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்**
>
> **விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை**
>
> **வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்"[13]**

என்ற கவிதை வரிகள் மூலம் மேல்நிலைக் கல்வி கற்ற பெண்களின் குலமே தழைக்கும் என்று வலியுறுத்துகின்றார்.

பாரதியாரின் கவிதைகளையும் பிறவற்றையும் ஊன்றிப் பயலுங்கால் அவர் ஏதோ ஒரு புதுமுறைக் கல்வியைப் பற்றிச் சிந்தித்தாக ஊகம் செய்யத் தூண்டுகிறது. இதனால் பண்பாடு, புதுமுறையான சமய நம்பிக்கை, பக்திவளர்ச்சி, மூடபழக்க வழக்கங்களை ஒழித்தல் போன்ற வகையில் சீர்திருத்தமுறை மக்களிடம் அமைய வேண்டும் எனக் கருதினார்.

பாரதியின் காலத்தில் மக்களிடம் மூடப் பழக்கங்கள் நிறைந்திருந்தன. பேய்கள், மந்திரங்கள், சூனியங்கள், பொய் சாத்திரங்கள் மீதான நம்பிக்கைகள் நிறைந்திருந்தன. இவற்றைக் கண்டு

“நெஞ்சு பொறுக்குதிலையே“[14]

என பாரதியின் பாடல் மூலம் தன் மனக்குமுரலை ந.சுப்புரெட்டியார் அவர்களும் வெளிப்படுத்தியுள்ளார்.

பெண் விடுதலை

பெண் உரிமை மிகவும் இன்றியமையாதது, பெண்ணுரிமை பற்றிய சிந்தனை பாரதியிடம் மிகுதியாகவே இருந்தது. இவற்றைப்பற்றி பாரதி தம் சுயசரிதையில் மக்களிடம் வற்புறுத்தியுள்ளார்.

“பெண்ணுக்கு விடுதலை யென் றிங்கோர் நீதி

பிறப்பித்தேன் அதற்குரிய பெற்றி கேளீர்

மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்

மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட் டீரோ!

விண்ணுக்குப் பறப்பது போற் கதைகள் செல்வீர்

விடுதலையென் பீர்கருணை வெள்ள மென்பீர்

பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்

பின்னிந்த வுலகினிலே வாழ்க்கை யில்லை“[15]

“நம்மை பிறப்பித்துப் பாலூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த தாய் உமையவளுக்கு ஒப்பாவாள் என்பது கவிஞரின் அதிராக் கொள்கை“[16] தாய்கது மேல் இவ்வுலகில் வேறு தெய்வமில்லை. ஔவைகாலத்தில் இருந்தே அவரது வாக்கிலும் அன்னைக்கு தானே முதல் இடம். “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்“ என்ற ஔவை பாட்டியின் வாக்கிலும் இது மெய்பிக்கப்படுகின்றது.

“போற்றித் தாய் என்று தோள்காட்டி யாடுவீர்

புகழ்ச்சி கறுவீர் காதற் கிளிகட்கே!“

காதல் செய்யும் மனைவியே சக்தி என்று அன்னையும், மனைவியும் உயர்வாகவே தெளிவுபடுத்துகின்றார்.

ஆணும் பெண்ணும் சமம் என்று முற்கால நூல்களில் கூறப்பட்டாலும்,

“புதுமை பெண்ணிவள் சொற்களும் செய்கையும்

பொய்மை கொண்ட கலிக்கும் புரிதன்றி“[18]

புதுமைப் பெண் வாயில் வைத்து வீட்டுமன் பேசுவதாய்க் காணலாம். ஆணே உயர்வு, பெண் அடிமை என்பது தற்கால நூல்கள் புரட்டிப் பேசுவதை பாரதி பாடல் வாயிலாக அறியமுடிகிறது.

எல்லாம் சக்தி மயம்

பராசக்தியே ஒரு கன்னிகைாய் இருந்து “புதுமைப் பெண்ணை! வாழ்த்துவதாய் பாரதி கருதுகிறார்.

“அன்னை வடிவமடா! – இவள்

ஆதிபராசக்தி தேவியடா! – இவள்

இன்னருள் வேண்டுமடா! – பின்னர்

யாவும் உலகில் வசப்படும் போமடா![19]

அன்னை பராசக்தியின் மீது கொண்ட பக்தி அவள் கன்னி வடிவாய் இரவில் வரும்போது கூறும் பாடலாய் அமைந்துள்ளது.

“யாது மாகி நின்றாய் – காளி!

எங்கும் நீ நிறைந்தாய்!

தீது நன்மை யெல்லாம் – காளி

தெய்வ லீலை யன்றோ?“[20]

“யாது மாகி நின்றாய் – காளி!

எங்கும் நீ நிறைந்தாய்!

தீது நன்மை யெல்லாம் – நின்றன்

செயல்க ளன்றி யில்லை“[21]

“என்னிற் கடங்காமல் எங்கும் புரந்தனவாய்

விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம் – பண்ணியதோர்

சக்தியே நம்மைச் சமைத்ததுகாண், நூற்றாண்டு

பக்தியுடன் வாழும் படிக்கு“[22]

போன்ற பாடல்வரிகளில் அகிலத்தின் காட்சியைத் தொகுத்து வடிகின்றார். “எல்லாம் சக்தி மயம்“ என்ற கருத்தும் தெளிவாக அறியப்படுகிறது. சக்தியின் பரிணாமம் பல்வேறு விதமாகக் காட்டப்படுகிறது. எல்லாத் தொழில்களும், செயல்களும் சக்தியின் அருளால்தான் செய்யப்படுகிறது.

“பாட்டுத் திறத்தாலே – இவ்வையகத்தைப்

பாலித்திட வேண்டும்“[23]

பாடல் பாட நினைப்பதும் பாடுவதும் சக்தியின் அருளாலே என தன் பேராசையை வெளிப்படுத்தியுள்ளார்.

பாரதியின் மகள்

வசன கவிதை

பாரதியாரின் வசன கவிதைகள் அனைத்திலும் கவிதையைக் காணலாம். வசன கவிதைகள் அனைத்தும் கவிதை நடையை அழகுற அமைக்கப்பட்டவையாகும். அவை ஒவ்வொன்றும் இலக்கிய ரசிகர்களுக்கே புலப்படுவனவாக இருக்கும்.

“புராணத்தில் வரும் மன்மதனை ஓவியத்தில் எழுதிக் காட்டுவதற்கு ஒப்பானதாகும். சிவனால் எரிக்கப்பட்ட மன்மதன் ரதிதேவியின் கண்களுக்கு மட்டுமே தென்படுவானாம்.“ அதுபோல் இலக்கணத் தெய்வத்தின் நெற்றிக்கண் நெருப்புக்கு இரையான புதுக்கவிதையின் உண்மையான இலக்கிய ரதிகளுக்கே தென்படக்கூடும்.“[24] என்று கூறிய வசன கவிதைகளுக்கே புலப்படும்.

மரபுக்கவிதைகளையே படித்துப் பழகியவர்கள் யாப்பு முறையில் அமைந்த புறவாழ்க்கையும், செய்யுளையும் கவிதை என்கின்றனர். வார்த்தைகளில் கொடுக்கும் சொல் அடுக்குகளையும் கவிதை என்கின்றனர். உண்மையான கவிதை எது என்பதை சோதித்து அறியும் சுவைஞருக்கும், திறனாய்வாளருக்கும் மட்டுமே புலப்படும். வசன கவிதையிலும் கவிதை உள்வன்பதை அறிய இயலும்.

பாரதியின் வசனகவிதைகள் யோகநிலையில் கண்ட பேரின்பக் கனவுகள். “கவிதையின் உள்ளத் தீயை இம்சையின்றி வசன காவிய நடையில் தன் பிரதிபலிக்கச் செய்ய முடியும்........ பாரதியாரின் “ஞானரதமும்“ காட்சிகளும் வசன கவிதை நடையிலேயே அமைந்திருக்கின்றன.“[25] என்பது தாகூரின் ஆங்கில நூலான கீதாஞ்சலியை தமிழில் மொழிபெயர்த்த வி.ஆர்.எம். செட்டியாரின் கூற்றாகும்.

“பாட்டினிலே சொல்லுவதும் அவள்சொல் லாகும்!

பலனின்றி உரைப்பாளோ? பாராய், நெஞ்சே![26]

பாரதியார் வசனத்தில் இருந்தாலும் திருமூலர் சொறகளின் வேகத்தை காட்டுகின்றன.

“பாரதியார் முதன்முதலில் வசன கவிதைகளை எழுதினவராதலால் வசன கவிதைகள் தந்தையாகிறார்.“ வசன கவிதை புதுக்கவிதை பிறக்கக் காரணமாக இருந்ததால் “வசன கவிதை“ என்ற பாரதியின் மகள் புதுக்கவிதையின் தாயாகின்றாள். ஆகவே பாரதியார் புதுக்கவிதையின் பாட்டன் பிதாமகன் ஆகின்றார் என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.

விப்ரலம்ப நிலை

சம்போக சிருங்காரம் விப்ரலம்ப சிருங்காரம் என இருநிலைகளில் பிரிக்கப்படுகிறது. சம்போக சிருங்காரம் தலைவன், தலைவி சேர்ந்திருக்கும்

நிலை, விப்ரலம்ப சிருங்காரம் தலைவன், தலைவி பிரிந்திருக்கும் நிலை, முதலாம் நிலையை விட இரண்டாம் நிலையே கவிஞர்களால் அதிகம் பாடப்பட்ட சிறப்பிற்குரியனவாகும். தலைவன் தலைவியின் ஊடல், வேறுபாடு செல்லுதல், சாபம் போன்ற திருமணத்திற்கு முன் நிகழும் இடையூறுகள் அனைத்தும் இரண்டாம் நிலையைச் சேர்ந்தவையே. இதனைக் கவிஞர்கள் வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் இன்புறத்தக்க முறையில் விரிவாக சித்தரித்துள்ளனர்.

"கனவு கண்டதிலே – ஒருநாள்

கண்ணுக்குத் தோன்றாமல்

இனம் விளங்க வில்லை"[27]

கனவில் கண்ட காதலன் மறைந்துவிட்டான். இருந்தாலும் அவன் வருகை புரியதோர் மகிழ்வை ஏற்படுத்திச் சென்றது. தன்னுடைய மகிழ்வை தன் தோழிக்கு தலைவியின் வாயிலாக தெரிவிக்கும் பாடல் கவிஞரின் கற்பனை திறனை எண்ணி பாராட்டச் செய்கிறது.

கருண ரஸம்

முறையான சடங்கு சம்பிரதாயங்கள் நடந்து மணம் செய்து கொண்டமை இந்த கொடிய அவமானம் நேரிடவா? என தன் கணவனைக் கண்ட பெண் நீதி கேட்டு அழுவது இப்பாடலாகும்.

“விம்மி யழுதாள் – விதியோ கணவரே!

அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டியெனை

வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணஞ்செய்து

பாதகர்முன் இந்நாள் பரிசழித்தல் காண்பீரோ“[28]

துச்சாதனனால் தலைவிரிகோலமாக அவைக்கு இழுத்துவரப்பெற்ற திரௌபதி நீதிகேட்டு அழுகின்றாள். பண்டைய நிலை கெட்டவளாய் வேறுநிலையை அடைந்தவளாய் நினைத்து அழுகின்றாள். இந்நாளில் தான் அவமானம் கொள்ள நேரிடவா மணம் செய்து கொண்டீர்? என அழுது புலம்புகிறாள். காண்போர்க்கு துக்க உணர்ச்சியே அதிகம் எழுகிறது. சோகம் என்ற ஸ்தாயி பாவத்தை பாரதி தம் கவி நயம் வெளிப்படுத்தியுள்ளார்.

பாரதி நாயகி

காதலி ஒருத்தி தன் காதலனை நினைத்து,

“எவனோ

என்னகந் தொட்டு விட்டான்

வினவக் கண்விழித்தேன் – சகியே

மேனி மறைந்து விட்டான்”[29]

பாரதியாரின் பாடல்வரிகள் விப்ரலம்ப நிலையைச் சித்திரிக்கின்றது. பாரதி நாயகி தன்னுடைய பிரவு நிலையை அற்புதமாகப் புலப்படுத்துகின்றாள். கண்ணன்

பாட்டில் கண்ணனை காதலனாக பாவித்து தன்னை காதலியாகவும் நினைத்து பாடிய பாடலாகும். எவரும் முன்வர இயலாத ஒரு நிலை பெண்மை கொண்ட எண்ணமுடன் கண்ணனை நினைத்து பாடப்பட்டவையாகும். பாரதியின் காதல் வரிகள் அழகுபட பாடப்பட்டவையாகும்.

பிறிதொரு நாயகிநிலை

முருகன் மீது தமக்கிருக்கும் பக்திப் பெருக்கைக் காட்டுகின்றார். “கிளிவிடு தூது“ என்ற பாடலில் தாம் நாயகி நிலையை அடைந்து முருகனுக்கு தூது விடுகின்றார். “முல்லைச் செடியதன்பால் நடந்த வினையை“[30] நினைவுக் கூரச் செய்யுமாறு கிளிக்குப் பணிக்கின்றார்.

“முல்லைச் செடியதன் பால் – செய்தவினை

முற்றும் மறந்திடக் கற்றதென் னேஎன்று

சொல்ல வல்லாயோ – கிளியே![31]

“பாலை வனத்திடையே – தனைக்கைப்

பற்றி நடக்கையிலே தன்கை

வேலின் மிசையனை – வைத்துச் சொன்ன

விந்தை மொழிகளைச் சிந்தைசெய் வாயென்று

சொல்ல வல்லாயோ – கிளியே!“[32]

நின்னைப் பிரியேன் என்று வேலின்மீது ஆணையிட்டுச் சொன்ன மொழிகளை சிந்தனை செய்யும்படி முருகனிடம் சொல் என்று கிளிக்கு உரைக்கின்றார்.

மூன்று காதலி

முதல் காதலி கலைமகள் மீதும், இரண்டாம் காதல் திருமகள் மீதும், மூன்றாவது காதல் பராசக்தி மீதும் கொண்டுள்ளார்.

சிறுவயதிலேயே நாமகளின் அருள் பெற்றமையால் “கன்னிக்கவிதை“ இயற்றும் கவிபாடும் ஆற்றல் கிட்டியது என்பது கவிஞரின் கருத்து.

“என்ன பிழைகள் கண்டோ – அவள்

என்னை புறக்கணித் தேகிடவாள்![33]

என்று நைந்து பேசுகின்றார். கலைமகளின் பார்வை பட்டும் திருமகளின் பார்வை படவில்லையே என நைந்து பேசுகின்றார்.

அன்னை பராசக்தி கன்னி வடிவமாக வருகின்றாள். அந்த களிப்பில் மகிழ்ச்சிப் பெருக்கை வெளியிடுகின்றார். வாணி, சீதேவி, பார்வதி மூன்று தேவியரும் ஒன்றாக விளங்குபவள் பராசக்தி என்பது கவிஞரின் தீராத நம்பிக்கையாகும்.

“அன்னை வடிவமடா! – இவள்

ஆதி பராசக்தி தேவியடா – இவள்

இன்னருள் வேண்டுமடா! – பின்னர்

யாவும் உலகில் வசப்பட்டுப் போமடா!“[34]

தான் படைக்கும் கவிதைகளும் அன்னை பராசக்தியின் அருளால்தான் படைக்கப்படுகின்றன. பராசக்தியைத் தமிழ் வாணியாக பாவித்து பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

எழில் வர்ணனை

“எல்லையற்ற பேரழகே!

எங்கும் நிறை பொற்சுடரே

முல்லைநிகர் புன்னகையாய்

போதுமின்பமே! கண்ணம்மா“[35]

“அலை

எற்றிநுரை சுக்கியொரு பாட்டிசைக்கும்

ஒல்லெனுமப் பாட்டினிலே – அம்மை

ஓமெனும் பெயரெனும் ஒலித்திடுங் காண்“[36]

“செவிப்புல உருக்காட்சிப் பாட்டின்பத்தை மிகுவிக்கத் துணை புரிகின்றன.“ தாய் தன் குழந்தைக்கு விரிந்த கடலை மொம்மையாக உருவகித்துக் கூறுகின்றாள். கடல் பாடல் இசைப்பதையும், அப்பாட்டில் ஓம் என்ற மந்திர ஒலி நிறைந்து இருப்பதையும் இப்பாடல் விளக்குகிறது. தாய் தன் குழந்தைக்கு விரிகடல்

பொம்மையின் பாட்டிசைக்கும் திறன் விளக்குவனவாக இயற்கை நடை சொட்ட அழகுற அமைந்த பாரதியின் பாடல்வரிகளாகும்.

பாஞ்சாலி சபதம்

“பெண்மைக்கு தாய்க்குலத்திற்கு – ஏற்றங்காட்டிய தமிழ் இலக்கிய மரபினை நன்கு கருத்தில் கொண்டவர் பாரதி. “மணிமேகலை, சிலப்பதிகாரம் என்ற பெண் தொடர்பால் பெயர் பெற்ற காப்பியங்களை மனத்திற்கொண்டு இதற்கு “பாஞ்சாலிசபதம்“ என்று பெண்ணின் பெயரையே இட்டுள்ளார் என்று கருதுவது பொருத்தமாகத் தோன்றுகிறது. அதற்கேற்றவாறு காவியப் போக்கையும் அமைத்துள்ளார் என்று கருதவும் இடந்தருகின்றது.

“பெண்மை வாழ்சென்று

கடத்திடுவோ மடா!“[37]

என்று பெண்மையைப் போற்றுபவர் பெண் பெயரால் காவியத்தை வழங்கினார் என்று கொள்வதும் பொருத்தமாகும்.

மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற இரட்டைகாப்பியங்கள் பெண்களை மையமாகக் கொண்டு பெயர்வைக்கப்பட்டவை. இதனையே கருத்தில் கொண்டு பாரதியும் “பாஞ்சாலி சபதம்“ என்று பெண்ணின் பெயரையே அதிகம் போற்றும் கவிஞராதலால் காவியப் போக்கும் அதன்நடையிலேயே பெண்மையை

மையமாகக்கொண்டே வடிவமைத்துள்ளார் என்பது சிறப்பானதாகும். திரௌபதி "ஐவர் பூவை"[38] என்றும் மதிக்கப்படுகிறாள்.

"டாக்டர் சி.ஆர்.ரெட்டியவர்கள் பற்றுதி, பொறுமை, குடிப்பண்பு, துன்பம் அனுபவிக்கும் திறன் போன்ற சீதையின் நற்குணங்களில் தனி ஈடுபாட்டைக் காட்டுகிறார். ஆனால் திரௌபதி தான் தன்னுடைய துணிவாலும் விரைந்து மாறும் இயல்பாலும் டாக்டர் ரெட்டி அவர்களின் இதயத்தை அதிகமாகக் கவர்கின்றாள்"[39]

பல்லாண்டுகளாக ஆந்திரப் பல்கலைக்கழகத்தை நிறுவக் காரணமாக இருந்தவரும், அதன் துணைவேந்தர் பதவியைப் பல்லாண்டுகள் அணி செய்தவருமான டாக்டர்.சி.ஆர்.ரெட்டியவர் கட்குத் தெலுங்கு மகாபாரதத்தில் தனி ஈடுபாடு உண்டு. அதனால் திரௌபதி இவருக்கு தனிப்பற்றுடையவளாகவே திகழ்ந்தாள். தமது 5 கட்டுரைகள், கொண்ட நூலில் சேர்க்கப்பட்டுள்ளன திரௌபதி, சீதை இருவரின் அறிவுக்கூர்மையை ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார்.

புதுமைப்பெண் திரௌபதி

துரியோதனின் ஏவல் கேட்டு சோகமே வடிவாய் தழுதழுத்த குரலில் திரௌபதியிடம் உரைக்கின்றான். அவனை திருப்பி அனுப்பும் நிகழ்வாய்,

"நல்லது, நீ சென்று நடந்தகதை கேட்டுவா

வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர் தாம்

என்னை முன்னேகூறி இழந்தாரா? தம்மையே

முன்னமிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?

சென்று சபையில் இச்செய்தி தெரிந்துவா“[40]

என்று திரௌபதி திருப்பி அனுப்புவதில் இவளது சிக்கல்களை எதிர்கொள்ளும் மதிநுட்பமும் காண முடிகிறது.

“நாயகர் தாந்தம்மைத் தோற்றபின் – என்னை

நல்கும் உரிமை அவர்க்கில்லை“[41]

“நிலை

சாயப் புலைத் தொண்டு கார்ந்திட்டால் – பின்பு

தாரமுடைமை அவர்க்குண்டோ?“[42]

பின்னர் தேர்ப்பாகன் திரும்பி வந்து சபையை அடைந்து நடந்தவற்றையும் அவள் மாதவிடாயிலிருப்பதையும் குறிப்பிடுகின்றான். அண்ணனின் வேண்டுகோலுக்கிணங்க தம்பி துச்சாதன் செல்கின்றான். திரௌபதி மைத்துனனைக் கண்டதும் தீண்டலை எண்ணி ஒதுங்குகின்றான். செய்தியை விரைவில் சொல்லி நீங்குக என துணிவை வருவித்து உரைக்கின்றாள். “மன்னர் கூடியிருக்கும் அவையில் உன்னைக் கட்டிவருமாறு அண்ணன் பணித்தனன். ஏதும் சொல்லாது என்னோடு ஏகுவாய். பேடி மகன் பாகனுக்கு உரைத்த பேச்சுக்கள் வேண்டா“ என உரைக்கின்றான். திரௌபதியின் நீண்ட கருங்கூந்தலை துச்சாதனன் பற்றி இழுத்துச் செல்கின்றான்.

“பேயரசு செய்தால் பிணந்தின்னும் சுத்திரங்கள்!

மாய முணராத மன்னவனைச் சூதாட

வற்புறுத்திக் கேட்பது தான் வஞ்சனையோ? நேர்மையோ?“[44]

என்று துணிவுடன் அவள்கூறும் மறுமொழி உருக்கும் தன்மை உடையவை. இந்த இடத்தில் திரௌபதி கண்ணகிக்கு ஒப்பாக விளக்குகிறார். கவிஞர். பாண்டியன் அவையில் நீதி கேட்டழுத கண்ணகியைப் போலாகின்றாள். கதை நடந்த காலத்தில் நாமும் உடனிருந்ததைப் போன்ற உணர்வு ஏற்படுகின்றது. காவியத் தலைவியைக் கண்டு இரக்கம் கொண்டாலும் அவளிடம் சீறிப்பாயும் வார்த்தைகள் நெஞ்சத் துணிவை வெளிப்படுத்துகின்றன. திரௌபதியை மனதில் கொண்டு தான் பாரதி “புதுமைப்பெண்“ என்னும் கவிதையைத் தொடுத்தாரோ? என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் கூறுகின்றார்.

கண்ணம்மா என் குழந்தை

மக்களைப் பெற்றவர்களுக்கு இவ்வுலகிலும் புகழ் உண்டு. மறுமை உலகின் வாழ்வையும் குற்றமின்றி முன்னேற்றுவர் என்பது பாரதியின் கருத்தாகும்.

“இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி

மறுமை உலகமும் மறுவின்று எய்துப

செறிநறும் விழையும் செயிர்தீர் காட்சிக்

சிறுவர் பயந்த செம்ம லோர் என“[46]

இது வழிவழியாக வரும் பழமொழி என்று கவிஞர் குறிப்பிடுவதில் இருந்து இக்கருத்து மக்களிடையே நிலவிவரும் கருத்தாகும் என்பதையும் ந.சுப்புரெட்டியார் வாயிலாக அறிகின்றோம். சிறு குழந்தைகள் உண்ணும் காட்சிகளும் பெற்றவர்களை மகிழ்வடையச் செய்யும் அதை "பிள்ளைகள் தம் இரு கைகளையும் இட்டும் தொட்டும் கவ்வியும் தம் உடலெங்கும் சிதறியும் "சிறுகையான் அளாவித்" தொழில் புரிகின்றதையும்". இச்செயல் செவிக்கும், கண்ணுக்கும், உடலுக்கும் மகிழ்ச்சிதந்து அறிவை மயக்குவதாய்க் காட்டுவதை இப்பாடல் உணர்த்துகிறது என பேராசிரியர் விளக்குகின்றார்.

பாரதி பராசக்தியைக் கண்ணம்மா என்ற பெண் குழந்தையாக்கி பேசுகின்றார்.

"சின்னஞ் சிறுகிளியே – கண்ணம்மா!

செல்வக் களஞ்சியமே

என்னைக் கலிதீர்த்தே – உலகில்

ஏற்றம் புரிய வந்தாய்![47]

பாடலை தொடங்கும் போதே தாலாட்டுப்பாணியில் தொடங்குகின்றார்.

"கட்டுப்பாடில்லாமல் இங்குமங்கும் ஓடும் அழகிய குழந்தை தாய்க்கு செல்வக் களஞ்சியமாகத் தென்படுகின்றது."[48] செல்லப் பிராணியாக வளரும் கிளி இங்குமங்கும் ஓடுவது போன்று குழந்தையின் குறும்பு தாயின் கெஞ்சுதல் பூரிப்பு

களிப்பு போன்றவற்றை வெளிப்படையாக விளக்குவதாக புலப்படுகிறது. அதே போல்,

“ஓடி வருகையிலே – கண்ணம்மா

உள்ளம் குளிருதடீ!

ஆடித் திரிதல் கண்டால் – உன்னைப்போய்

ஆவி தழுவுதடீ!“[49]

என்று ஓடிவரும் குழந்தையைக் கண்டவுடன் தாயின் உயிர், ஆவி அணைத்தும் அக்குழந்தையை தூக்கி தழுவிக்கொள்ளும். பின்னரே தாய் அள்ளி அணைத்திடுவாள்.

குழந்தையின் பண்பை ஒரு தாய் மட்டும் அறிந்தல் போதுமா? ஊரார் மெச்சிப் புகழும் போது அவள் மேனியெல்லாம் சிலிர்கின்றதாம். இத்தகைய பேரானந்தத்தை அளிக்கக் கூடியவன் குழந்தைக் கண்ணன் என்கிறார் பாரதியார்.

“ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்“[50]

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப தாய்யின் உணர்வு அமைந்துள்ளது.

மேலும் குழந்தையைத் தழுவி கன்னத்தில் முத்தமிடுகிறாள் என்று தாய் தன் குழந்தையிடம் மகிழ்ச்சி வெள்ளத்தை கொட்டித் தீர்க்கின்றாள் என்று கூறுகிறார்.

“கன்னத்தில் முத்தமிட்டால் – உள்ளந்தான்

கள்வெறி கொள்ளுதடீ!

உன்னைத் தழுவிடினோ – கண்ணம்மா!

உன்மத்த மாகுதடீ!“[51]

என்று கண்ணம்மா என்ற சொல்லால் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றாள். அந்த சொல்லால் “கற்கண்டைச் சுவைப்பது போன்ற இன்பப் பெருக்கு“[52] அவளிடம் ஏற்படுகிறது என்கிறார் கவிஞர். அத்தனையும் இனிமையிலும் இனிமை என்பதை தெரிவிக்கின்றது அந்த கொஞ்சும் வார்த்தைகள், தாயின் மகிழ்ச்சி வெறியை எட்டி விடுகின்றது என்பதையும் தெரிவிக்கின்றார்.

பெண்களுக்கு குழந்தை ஆசை என்பது நகைஆசை என்பதை விடவும் அதிகம். இத்தகைய இன்பம் தரும் கவிதைகளை பாரதி வாயிலாக தெளிவுபடுத்தகின்றார்.

குழந்தையின் மழலைச் சொற்களைக் கேளாதவர்க்குத் தான் மற்ற இசையின் ஓசை இனிமையாக இருக்கும்.

“குழல் இனிது யாழி இனிது என்பதம் மக்கள்

மழலைச் சொல் கேளா தவர்“[53]

“சொல்லும் மழலையிலே – கண்ணம்மா!

துன்பங்கள் தீர்த்திடுவாய்”[54]

மழலைச்சொல்லோ அன்னையின் துன்பங்களை போக்குகின்றது. முல்லைச்சிரிப்பு மனச்சுமையை அகற்றி விடுகின்றது. குழந்தையின் கண்ணில் நீர்வடிந்தால் எந்தத் தாயும் நொடிப் பொழுது கூட காண சகிக்க மாட்டாள். பாரதியின் சொல்லோவியங்கள் இவற்றை விளக்குகிறது.

தாயின் கண்மணிபோன்று இனிய காட்சியாக குழந்தையின் உயிரும், தாயின் உயிரும் பிணைக்கப்படுகிறது. "குழந்தையைப் போல் அன்பு ஊற்றெடுக்கும் தெய்வம் இல்லை"[55] என்பது கவிஞரின் அனுபவம். குழந்தை தரும் இன்பமும், தாய் அடையும் மகிழ்ச்சியும் அழகுற வெளிப்படுத்தியமை பற்றி ந.சுப்புரெட்டியார் அவர்கள் விளக்குகிறார்.

சாதிவெறி

தம் காலத்தில் சாதி வெறியைக் கண்டு வெகுண்டெழுந்தார் பாரதியார். நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல் சாதிவெறி தலைவிரித்து ஆடுகின்றது என,

"ஆயிரம் உண்டிங்கு சாதி – எனில்

அன்னியர் வந்து புகலென்ன நீதி – ஓர்

தாயின் வயிற்றிற் பிறந்தோர் – தம்முட்

சண்டைசெய் தாலும் சகோதர ரன்றோ?"[56]

என்று புதுக்குறைகளைப் புதிய நடையில் பாடுகின்றார். பாரதியார் சாதிக் கொடுமையைத் தகர்த்தெறியக் குழந்தையை அடிப்படையாக வைத்து பிஞ்சு மனங்களில் அறிவுரைகளை விதைக்க ஆரம்பித்தார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்

தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்!

நீதி உயர்ந்தமதி கல்வி – அன்பு

நிறைய உடையவர்கள் மேலோர்!"[57]

நாள்தோறும் சாதிப்பிரிவினை நிரந்தரமாகவே இருக்கும். சூழ்நிலை தான் வளர்ந்துவருகிறது. இப்பாடல் வரிகள் குழந்தைகளின் உள்ளத்தில் ஆழப்பதியத் தக்கவகையில் தான் உணர்ச்சி நயம்மிக்க வகையில் பாரதியார் இயற்றியுள்ளார்.

மேற்குலத்தோர்

"பிறப்பால் உயர்வு என்ற கொள்கைகளை விட்டு ஒழித்தனர் ஆழ்வார்கள் "பிறப்பால் பார்ப்பனரல்லாத நம்மாழ்வாரைப் பார்ப்பனகுலத்தில் பிறந்த வேறு ஆழ்வார்கள் தம் தலைவராகவே கொண்டனர்."[58] "வேளாளர் குலத்தில் உதித்த நாவுக்கரசர் பார்ப்பன குலத்தில் பிறந்த சம்பந்தராலும், நம்பியாரூராலும் போற்றப்பெற்றார்."

"ஜாதிக் குழப்பம்" என்ற தலைப்பில் பாரதியார் குறிப்பிடும் நிகழ்ச்சி ஒன்று சாதிக்கொள்கை எவ்வளவு ஆழத்தில் வேரூன்றி யுள்ளது என்பது தெரியவரும்.

செல்வந்தர் வீட்டு சிறப்பு நிகழ்ச்சிக்கு 18வயதே ஆன குட்டி யானை அழைத்துவரப்பட்டது. அதை பிராமணன் ஒருவர் இரக்க மின்றி அடிப்பதைக் கண்ட பாரதி உபதேசம் செய்ய, அவனோ ஜாதிக் கட்டுகளை அவிழ்க்கத் தொடங்கினான். “இந்த யானை கீழ்ஜாதி யானை; யானைகளில் பிரம்ம, ஷத்தியை, வைசிய, சூத்திரர் என்ற 4 முக்கிய ஜாதிகளுண்டு ஒவ்வொரு ஜாதியாலும் கிளை வகுப்புகளிருக்கின்றன. அவற்றுள் இது சூத்திரஜாதியைச் சேர்ந்த யானை. மனிதர்களில் சூத்திரர்களுக்குள்ளே ஈழுவர் என்ற ஜாதி யார் இருக்கிறார்களே, அதே மாதிரி இந்த யானை “வீரன்“ வகுப்பைச் சேர்ந்தது“[59] என்பதை பாரதியார் எடுத்துரைக்கின்றார். ந.சுப்புரெட்டியார் அவர்கள் இக்கற்றுக்கு ஜாதிக்கொள்கை எத்தனை ஆழமாய் வேரூன்றியுள்ளது என்பதற்கு இந்நிகழ்வான பாரதியார் கூற்றை எடுத்துரைக்கின்றார்.

சாதிக் கொடுமைகளை பாரதி வகுத்துக் காட்டியுள்ளார்.

“வெள்ளை நிறத்தொரு பூனை – எங்கள்

வீட்டில் வளருது கண்டீர்

பிள்ளைகள் பெற்றதப் பூனை – அவை

பேருக் கொருநிற மாகும்

சாம்பல் நிறமொரு குட்டி, – கருஞ்

சாந்து நிறமொரு குட்டி

பாம்பு நிறமொரு குட்டி – வெள்ளைப்

பாலின் நிறமொரு குட்டி

எந்த நிறமிருந் தாலும் – அவை

யாவும் ஒரேதர மன்றோ?

இந்த நிறம்சிறி தொன்றும் – இஃது

ஏற்ற மென்றும் சொல்ல லாமோ?"[60]

வண்ணங்கள் வேறுபட்டாலும் எண்ணங்களும், செயல்களும் வேறுபடவில்லை. மனிதர்களுக்குள்ளே வேற்றுமையில்லை என பாரதி வாயிலாக சாதிப் பிரிவினையைக் கண்டித்துக் கூறுகிறார்.

மனிதர்கள் தொழில் அடிப்படையில் 4குலங்களாக பிரிவு இருந்தால் தான் பார்ப்பான், செட்டி, நாயக்கன் தொழிலாளி என்று இருந்தால்தான் உலகம் வளர இயலும். ஆனால் இந்த சாதிப்பிரிவு தொழில் மூலம் ஏற்பட்டது அல்ல. பிறப்பினால் ஏற்பட்டது. எல்லா சாதியினரும் எல்லா தொழிலும் செய்கின்றனர்.

"இந்தக் குலப்பிரிவு இறைவனால் வகுக்கப்பட்டதாகவும் பிற் காலத்தில் மனிதர்கள் அந்த அமைப்பை நாசமுறப் பண்ணிவிட்டதாகவும் கவிஞர் கருதுகின்றார்."[61]

இறைவன் படைக்கும் போதே ஒவ்வொரு குலத்திலும் படைத்துவிடுகின்றான். மனிதர்கள் அதை காலப்போக்கில் குலப்பிரிவு, சாதிப்பிரிவு என வகுத்தும் வெறிகொண்டும் பிரிவினை ஏற்படுத்துகின்றனர்.

“நாலு குலங்கள் அமைத்தான் – அதை

நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்கள்“[62]

“தொழிலை மேற்கொள்ளும் தகுதி பிறப்பினால் ஏற்பட்டது.“[63] என்ற கொள்கை தானாகவே தகர்ந்து போகின்றது.

பிறப்பின் அடிப்படையில் தான் தொழில் செய்ய வேண்டும் என்ற கருத்தினால் தான் இந்தக் கவலை பாரதிக்கு எழுந்தது என்பது ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்தாகும். “பெரியார் பாணியில் நாட்டில் தாண்டவமாடும் சாதி வெறியைக் கண்டு வெகுண்டுரைக்கின்றார்“[64] என்று கருதலாம் என்பதும் பேராசிரியரின் கருத்தாகும்.

நவீன கீதை

சாதி, சமயம், இனம், மதம், மொழி என்ற பிரிவினைக்கு உட்படுத்தப் படும் சமூகத்தைக் கண்டு,

“நெஞ்சு பொறுக்குதிலையே – இந்த

நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்

கொஞ்சமோ பிரிவினைகள் – ஒரு

கோடியென் றால்அது பெரிதாமோ?“[65]

ஒவ்வொரு நிகழ்வும் பிரிவு நேரிட வகைசெய்கிறது. மனிதர்கள் ஒவ்வொருவரும் ஏதேனும் சிறு காரணம் கண்டு பிரிவினைக்கு தள்ளப்படுகின்றனர்.

“ஐந்து தலைப் பாம்பென்பான் – அப்பன்

ஆறுதலை யென்று மகன் சொல்லிவிட்டால்

நெஞ்சு பிரிந்திடுவார் – பின்பு

நெடுநா ளிருவரும் பகைத்திருப்பார்“[66]

என்று ஒற்றுமையின் அவசியத்தையும் ஒற்றுமையின்மையின் கேட்டையும் விளக்குகிறார்.

“வடக்கில் இமயமலை பாப்பா! – தெற்கில்

வாழுங் குமரி முனை பாப்பா

கிடக்கும் பெரிய கடல் கண்டாய் – இதன்

கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா![67]

என்று சிறு குழந்தைகள் முதல் அறிய குழந்தைப் பாடல்களிலேயே அடிமைத் தனத்தை ஒழித்து ஒருமைப்பாட்டையே விரும்புகிறார். “அடிமைத் தளையை அகற்ற வேண்டும் என்று அவாவி நிற்கும் கவிஞர் இந்திய ஒருமைப்பாட்டையே நாடுகின்றார். இதனால் குழந்தைப் பாடலிலேயே பஞ்சு மனங்களுக்கு நாட்டின் எல்லையை வரைந்து காட்டுகிறார்.“

நாட்டுப்பற்றை மக்களுக்கு ஊட்டும் முறையில் பல பாடல்கள் அமைந்துள்ளன. மக்களிடையே விழிப்புணர்ச்சியை எழுப்புவதில் இவை பங்கு கொள்கின்றன.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில்

ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே“[68]

என்று நவீன கீதையின் வாக்காகக் கவிஞர் ஒலிக்கின்றார். ஒற்றுமையின் இன்றியமையாமையையும் விளக்குவது பற்றி ந.சுப்புரெட்டியார் எடுத்துரைக்கின்றார்.

பொதுவுடைமை கருத்து

பாரதியின் உள்ளம் எப்பொழுதும் சமூகத்தைப் பற்றிய எண்ணமாகவே இருக்கும்.

“உழுது விதைத் தறுப்பாருக் குணவில்லை

பிணிகள் பல உண்டு பொய்யைத்

தொழுகுடிமை செய்வார்க்குச் செல்வங்கள்

உண்டு, உண்மை சொல்வோர்க் கெல்லாம்

எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு“[69]

என்று சமூகத்தின் கொடுமைகளும் அதற்கு ஏற்படும் தீர்வையும் பற்றிய எண்ணமுடையவராக மட்டுமே கவிஞர் இருந்துள்ளார். பாரதி எதைப்பற்றிப் பாடினாலும் அதிலும் சமுதாயத்தைப் பற்றிய பிரதிபலிப்பு இருக்கக் கூடும். “நாட்டில் பொய்சூது தீமையெல்லாம் ஆரணியத்தில் பாம்புகள் போல் மலிந்து வளர்ந்தோங்கின“[70]

கவிஞர் வறுமைத் துன்பத்தில் வாழ படிக்கப்பட்டவர். இதனால் "பசிப்பிணி" என்பது அவருக்கு அனுபவமான ஒன்றாகும். சமுதாயத்தில் பலா் உணவின்றி வாடுதலைக் கண்டு மனம் பொறுக்க முடியவில்லை. எதாவது தொழில்செய்து பிழைக்க வேண்டும் என்பது கவிஞரின் அதிராக் கொள்கை என்பது ந.சுப்புரெட்டியார்யின் கருத்து. பிறரிடம் இரந்து வாழ்தல் என்பது பாரதியாரின் பிடிக்காத செயல்களுள் ஒன்றாகும்.

"இரந்து உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகியற்றி யான்"[71]

இனிய எழில் வளங்கள் நிறைந்த நாட்டில் அத்தனை இயற்கை வளங்களும் கணிக்கின்றி கிடக்கின்றன. மனிதர்களின் உணவையே மனிதர்கள் பறிக்கும் இழிநிலை ஏற்படாதிருக்கவும் வழிகளையும் தெரிவிக்கின்றார்.

"இனியொரு விதிசெய் வோம் – அதை

எந்த நாளும் காப்போம்

தனியொருவனுக் குணவிலை யெனில்

ஜகத்தினை அழித்திடு வோம்"[72]

என்று வழியினையும் பாரதி குறிப்பிடுகின்றார். பாரதியின் தாசனாகத் தம்மைச் செய்து கொண்ட பாவேந்தர் பாரதிதாசன்.

"ஓடப்ப ராயிருக்கும் ஏழை, யப்பர்

உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொ டிக்குள்

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மொறி

ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பார்“[73]

என்ற வேகத்தில் இப்பாடலின் வரிகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறார். பாரதி மீது கொண்ட தன்னுடைய சொல்லிலும், செயலிலும் பாரதியைப் போலவே உணர்ச்சி மேலோங்கிடச் செய்கிறது என்பதை இப்பாடல் வாயிலாகவும் அறியலாம்.

சமயக் கருத்து

சமயத்தைப் பற்றியும் சில கருத்துக்கள் பாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ளன. பராசக்தியே இவரது தாரகமந்திர தெய்வமாக வழிபடுவதை இவரது பாடல்கள் வாயிலாகவும் அறியலாம்.

“நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி

அஞ்சிஉயிர் வாழ்தல் அறியாமை – தஞ்சமென்றே

வையமெலாம் காக்கும் மகாசக்தி நல்லருளை

ஐயமறப் பற்றல் அறிவு“[74]

என்ற வெண்பா இக்கருத்திணை அரண் செய்யும். விநாயகர், முருகன், காளி, முத்துமாரி, கோமதி, நான்முகன், கண்ணன், திருமகள், கலைமகள், அல்லா, யேசு முதலிய தெய்வங்கள் சிறப்பாகப் பேசப் பெறுவதால் இவர்தம் சமரச

நோக்கம் புலனாகும். பாரதியின் தோத்திரப் பாடலிலும், ஞானப் பாடலிலும் இக்கருத்திற்கு அரணாகும்.

“ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி

அலையும் அறிவிலிகாள்! – பல்

லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுன்

டாமெனல் கேளீரோ?“[75]

என்ற பாடல் ஒன்றே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பல சமயங்களைப் பற்றிக் கூறினாலும் அனைவரிடமும் சமரச மனப்பான்மை வெளிப்படுத்தும் விதமும் ந.சுப்புரெட்டியார் அவர்கள் எடுத்துரைக்கின்றார்.

மக்கள் முன்னேற்றம்

“கவிதை கவிதைக்காக“, “கலை கலைக்காக“ என்று கூறும் உலகில் பாரதி கவிதைகளை நோக்கினால் “கவிதை வாழ்க்கைக்காகவே“ என்பது தெளிவாகப் புலனாகும். அதே போல் பாரதி மக்கள் முன்னேற்றத்தை நாடுபவர் என்பதை அவரது பாடல் வாயிலாகவே அறிய முடிகின்றது.

“பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்,

கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்,

மண்மீ துள்ள மக்கள், பறவைகள்

விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்

யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே

இன்புற் றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே

செய்தல் வேண்டும், தேவ தேவா!

பூமண்டலத்தில் அன்பும் பொறையும்

விளங்குள துன்பமும் மிழமையும் நோவும்

சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்

இன்புற்று வாழ்க என்பேன்“[76]

என்று சமுதாய வாழ்வின் குறைகளை தெளிவாகக் காணலாம். தேசிய கீதங்கள் கூடத் தற்கால சமுதாய வாழ்வினையே எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன. சமுதாய வாழ்வின் குறைகளை நீக்கும் முறைகளைப் “புதுமைப்பெண்“, “பெண்மை” என்ற பாரதியின் பாடல் வரிகளில் விளக்கியுள்ளார் என ந.சுப்புரெட்டியார் அவர்கள் விளக்குகிறார்.

சமரசநிலை

எல்லா சமயங்களும் கொண்டுள்ள கருத்து ஒன்றே என்பது பாரதியின் தெளிந்த கருத்தாகும்.

“யாமறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே

யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே!”[77]

வேற்றுமையிலும் ஒற்றுமையை பாரதிவாயிலாக உணர்த்துகிறார். மேலும்,

“பூமியிலே வழங்கிவரும் மதத்துக் கெல்லாம்

பொருளினை நாம் இங்கெடுத்துப் புகலக் கேளாய்“[78]

“சமயச்சான்றோர்களுள் “தாயுமான அடிகள்“, “இராமலிங்க அடிகள்“ இவர்களே சமயங்களுள் ஒரு சமரச நிலையை நிலை நாட்ட முற்பட்டவர்கள் அந்த வரிசையில் எண்ணப்படாவிட்டாலும் மேற்கூறிய இரு பெரியோர்களை – அடுத்து சமயங்களுள் ஒரு சமரச நிலையை ஏற்படுத்த முயன்றவர் பாரதியார் என்று மதிப்பிடுவதில் தவறில்லை“[79] எத்தனை அடியார்கள் சமயங்களைப் பற்றி வலியுறுத்தி இருந்தாலும் பாரதி அவை அனைத்தும் ஒன்றே என்று வற்புறுத்திக் கூறுவார் என்பது அவரது பாடல்கள் வாயிலாகவும், கவிநயத்தில் விளக்கப்பெற்றுள்ள அவரது சமய கருத்துக்களையும், ஒற்றுமையை நிலைநாட்டுவதை விளக்குவதும் பேராசிரியர் குறிப்பிடுவனவற்றுள் ஒன்றாகும்.

இடும்பைக்கு தீர்வு

உடலுடன் சேர்த்து மனத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் அவசியமாகும். தீயஎண்ணங்களை விட்டொழித்து பகைவனுக்கும் அருள வேண்டும் என்பது பாரதியின் கட்டளையாகும்.

“மண்ணி லார்க்கும் துயரின்றிச் செய்வேன்

வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்“[80]

என்று பிறர் துயர் தீர்ப்பதைக் கடமையாகக் கொள்வதைக் காணலாம். பிறர் நலனைக் கருத்தில் கொண்டே கவிஞரும் பல பாடல்களை பாடியுள்ளார்.

“பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்

கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்

மண்மீ துள்ள மக்கள், பறவைகள்

விலங்குகள் பூச்சிகள், புல்பூண்டு, மரங்கள்

யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே

இன்புற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே

செய்தல் வேண்டும் தேவ தேவா!“[81]

என்று இடும்பை தீர்ந்து இன்பமுடன் வாழ சக்திகுமாரனிடம் வேண்டுவதைக் காணலாம்.

“பூமண்டலத்தில் அன்பும் பொறையும்

விளங்குக, துன்பமும், மிழமையும், நோவும்

சாவும் நீங்கிச் சார்ந்த பல் லுயி ரெலாம்

இன்புற்று வாழ்க“[82]

பல குடும்பங்கள் அடங்கிய சமூகம் சீர்படும், பல சமூகங்கள் அடங்கிய சமுதாயமும் சிறந்து விளங்கும்.

“தனி மனிதனின் கடமைகளாக தன்னைக் கட்டுதல் என்பது மனத்தை கட்டுதல் ஐம்பொறிகளை அடக்கி மனத்தை கட்டுதல் என்று கவிஞர் கூறுவார். பல பொருட்களின் மீது சஞ்சலப்படும் மனதை அடக்கினாலே போதும்“[83] என்பது பாரதியின் கருத்தாகும். மனம் போன போக்கில் வாழ்கின்றோம். கவலை பெருகும் போது துன்புறுவதும், இயல்பான வேலைகளை ஏற்றும் கடந்தவற்றை எண்ணி வருந்துவதும் மனித இயல்பாகும்.

“நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி

அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை“[84]

என்று மேலும் பாதுகாப்பு செய்வர். ஆன்மாவின் இயல்பைத் தெரிந்து கொண்டால் மனத்தெளிவு உண்டாகும்.

மனம் பல வகைகளில் சஞ்சலப்படும். அவற்றை கட்டுப்படுத்தி தீய எண்ணங்களை விடுவித்து, தீய எண்ணங்கள் தோன்றுவதற்கு இடம் கொடுக்காது, மனத்தெளிவினை அடைவதால் இடும்பை தீர்ந்து இன்புற்று வாழும் வழிநிலையை பாரதி கூற்றாக ந.சுப்புரெட்டியார் அவர்கள் எடுத்துரைக்கின்றார்.

நாட்டுப்பற்று

நாம் பிறந்த நாடு தமிழகமே. ஆனால் பாரதி கண்டநாடு பாரதநாடு. பாரதியின் பார்வை மிக விரிவடைந்தது. அவர் பார்வை பாரதத்தின் அகப்பார்வையாகவே இருந்தது. பாரத நாடு முழுமையும் அடிமைப்பட்டு கிடந்த

நிலையில் விடுதலையை மட்டும் பாடாது பாரத மாதா இந்தியத்தாய் என பரந்த நோக்குடன் பாடினார்.

“எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி

இருந்ததும் இந்நாடே – அதன்

முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து

முடிந்ததும் இந்நாடே – அவர்

சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து

சிறந்ததும் இந்நாடே!“[85]

என்று நாட்டை வணங்குவதுடன் கொடிவணக்கப்பாடலில் பல காரணங்களைக் காட்டி பிரிந்து வாழும் மக்களை “அறகவி“ அழைப்பதாகப் பாடியுள்ளார்.

“தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்

தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்“[86]

என்று கொடியின் கீழ் வந்து திரளுமாறு அனைவரையும் பணிக்கின்றார். தமிழ்மொழியைக் ஆற்றல் மிக்க மொழியாகவே காண்பவர். அனைவருக்கும் விடுக்கும் அழைப்பாக இப்பாடல் அமைந்துள்ளது. அடிமைத்தளையை அகற்ற வேண்டும். இந்திய ஒருமைப்பாட்டையே நாடுகின்றார் என்றும் பேராசிரியர் கருத்துரைக்கின்றார்.

பாரத நாடு

பாரதியாரின் பாரதப் பாடல்கள் தமிழ்மொழிக்குப் புதியவை. எந்த மொழியிலும் உயர்சிந்தனை உடைய பாடல்கள் மற்றைய மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்று நாட்டின் பொதுச் சொத்தாக ஆக்கப் பெறுதல் வேண்டும் – “திருக்குறள் தமிழ் மொழியில் இருப்பினும் அது உலக மொழிகளுக்கெல்லாம் மொழிபெயர்க்கப் பெற்று உலகப் பொதுச் சொத்தாகிவிடவில்லையா“[87] அதுபோலவே பாரதியின் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டு குறிப்பாக “தாயின் மணிக்கொடி“ பாடலும் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பெற்று இசை ஏற்றம் செய்ய வேண்டும்.

“பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள்

பாரத நாடு“[88]

“பாரத நாடு பழம்பெரு நாடே

பாடுவோ மி:தை யெமக்கில்லை யீடே“[89]

என்ற பாடல் நாட்டுப்பற்றை மக்களுக்கு ஊட்டும் முறையில் பல விடுதலை உணர்ச்சியை மக்களிடையே எழுப்புவதில் பெரும் பங்கு கொள்கின்றன என்பது பாரதியின் வாயிலாக ந.சுப்புரெட்டியார் அவர்களின் கூற்றாகும்.

“வந்தனை கூறி மனத்தில் இருத்தி

வாயுற வாழ்த்தேனோ – இதை

வந்தே மாதரம், வந்தேமாதரம்“

என்று வணங்கேனோ?“[90]

பாரத மாதாவை நோக்கி கவிஞன் நம் நாட்டினருக்கு அடிமை என்பது புதிது ஆனால் விடுதலை புதிதன்று என்று கூறுவதாக அமைந்த பாடல் நாட்டுப் பற்றைப் போலவே வந்தே மாதரம் என்பதுவும் ஒரு தாரக மந்திரம் ஆகும். “நாயன்மார்களுக்கும் ஆழ்வார்கட்கும் பக்தி அவர் தம் மூச்சாக இருந்தது சிட்டுக்குருவியைப் போலவே எப்போதும் விடுதலையை வேண்டுபவர்“[91]

சமயப்பற்று

கல்லையும் மண்ணையும் கடவுள்களாகப் பாடிப்பாவித்து வழிபடுவதை நேரில் கண்டவர். பாரதி இந்திய நாட்டை பாரத மாதாவாகவும், சுதந்திரத்தை சுதந்திர தேவியாகவும் பாடிப் பரவி இம்மரபினைத் தழுவிக்கொள்ளுகின்றார். “பாரத தேவியின் திருத்த சங்கம்“ பாடுவதுடன் “பாரதமாதா நவரத்தினமாலையைப் பாடி மகிழ்கின்றார்.

“சிங்களம் புட்பகம் சாவக – மாதிய

தீவு பலவினும் சென்றேறி – அங்கு

தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் – நின்று

சால்புறக் கண்டவர் தாய்நாடு“[92]

தமிழ்ப்பற்று

நாட்டுப்பற்றைப் போல் தமிழ்ப்பற்றும் பாரதியிடம் அதிகமிருந்தது. சீனம், மிசிரம், யவனம் முதலிய மேல்திசை நாடுகளில் புகழ்பரப்பிய தமிழ்நாடு என்ற பெருமை பேசுகிறார். இப்படி பழைய மரபினை பேசுவதுடன் இது என் நாடு என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

"சீன மசிரம் யவனரகம் – இன்னும்

தேசம் பலவும் புகழ்வீசிக் – கலை

ஞானம் படைத்தொழில் வாணிபமும் – மிக

நன்று வளர்ந்த தமிழ்நாடு"[93]

என்ற புகழ்மலையை சூட்டிக் கொள்ளும் சிறப்பிற்குரிய நாடு என்று கூறுகிறார்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"[94]

என்று வள்ளுவனைப் பற்றிய புகழ்மாலை ஒப்புயர்வற்றது. வள்ளுவன் தமிழ் நாட்டின் கொடை, வள்ளுவனை மொழியோடும், தமிழோடும் சிறப்பித்த பெருமை பாரதி ஒருவரையேச் சாரும். இது பாரதியின் ஒப்பற்ற புதுமையை வெளிப்படுத்துகிறது.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்

இனிதாவ தெங்கும் காணோம்"[95]

என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப தமிழாராயிருக்கும் ஒவ்வொருவரும் உணர்ச்சி பொங்க தமிழுக்கு தமது பணியினை செய்ய வேண்டும். தமிழ் வரை உறுதுணை புரியவேண்டும். மொழியை வளப்படுத்தி இலக்கியம், கலைச் செல்வத்தைப் பெருக்குதல் வேண்டும்.

வைணவ தத்துவம்

பாரதியார் வைணவ தத்தும் அறிந்தவர். ஆதலால் வைணவ கருத்துக்களை நன்கு அறிந்து தெளிந்தவர். "பாரதியார் பிறந்து வளர்ந்த எட்டயபுரமும், கல்விகற்ற நெல்லையம் பதியும் ஆழ்வார் திருவவதறித்த குருகூருக்கு எட்டாத ஊர்களன்று"[96] இறைவா! என்ற இசைப்பாடல் வைணவ தத்துவத்தை நன்கு அறிந்தவர் என்பதற்கு அரணாக அமைகின்றது.

"எத்தனைகோடி இன்பம் வைத்தாய் – எங்கள்

இறைவா! இறைவா! இறைவா!"[97]

என்ற பாடலில் இறைவா என்னும் நாமம் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தகுந்தது.

பாரதியார் கண்ணனைப் பற்றிய கண்ணன் பாட்டில் இருபத்து மூன்று பாடல்களை பாடியுள்ளார். இவை தவிர "தோத்திரப் பாடல்கள்", "வேதாந்தப் பாடல்கள்" என்ற தலைப்புகளில் பாடிய பாடல்கள் காணப்படுகின்றன. "தருமங்களை எல்லாம் அறவே ஒதுக்கித் தள்ளிவிட்டு என்னைச் சரணடைக,

பாவங்கள் அனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன் வருந்தாதே“[98] என்பது கீதா உபதேசமாகும். இவற்றை அடிப்படையாக வைத்து கண்ணன் பாட்டில் தனிப் பாடல்களைப் பாடியுள்ளார். “எம்பெருமானை விட்டுப்பிரிந்து சம்சாரமாகிய பிறவிப்பெருங்கடலை அடைந்து தத்தளிக்கின்றோம், துன்புறுகின்றோம் என்பதை திருமழிசை ஆழ்வார், பெரியாழ்வார், நம்வாழ்வார், திருமூலர், ஆண்டாள், பாரதியாரின் கண்ணன் பாட்டு ஆகியவற்றில் இருந்து கூறித் தெளிவுப்படுத்துகின்றார்.“[99] வைணவ தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சில பாடல்களை பாரதியார் பாடியுள்ளமை என்பது தெளிவாகிறது.

பாரதியாரின் பக்திச்சுவை சமய வேட்கையிலிருந்து தோன்றியதல்ல. அவருடைய உணர்ச்சி ஆற்றலில் இருந்து கனிந்தது. கவிஞரும் அவற்றை உள்வாங்கிக் கொண்டு கண்ணனை பல உறவுமுறைகளில் பாவித்து பாடியுள்ளார். மாயோன் குழலிசை தமிழ் கவிஞர்களை தம்முத்திரை பதியச் செய்தது. அந்த வகையில் பாரதியும் கண்ணன் பாட்டுத்திறன் சுவை பட அமைந்தது இதன் சிறப்பாகும்.

“செய்தலுன் கடனே – அறம்

செய்தலுன் கடனே – அதில்

எய்துறும் விளைவினில் எண்ணம்வைக் கதே

என்று அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்திய மக்களை கிளர்ந்தெழுந்து சுதந்திரப் போரில் குதிக்குமாறு கவிஞரின் அறைகூவலே இது

என்று இதனைக் கருதலாம். அன்றாடம் வாழ்வே சதம் என்று மயங்கி நிற்கும் மக்களுக்குப் புதிய வாழ்வில் புகுவதற்கு மக்கள் யாவரும் சுதந்திரப் போரில் பங்குபெற வேண்டும் என்பதே பாரதியின் கீதாபதேசம்.“[100]

அறத்தின் வழியல் பணிசெய்ய வேண்டும். தடைவரினும் நிறுத்தாது செய்ய வேண்டியவற்றை செய்வது கடமை என்பது கிருஷ்ணன் அர்ஜீனனுக்கு பாரதப் போரில் நிகழ்த்திய உபதேசமாகும். அதன் வழியிலேயே நாட்டுமக்களிடம் நமது உணர்வுகளுக்கு விடுதலை கொடுத்து சுதந்திரப் போரில் பங்கு கொள்ளுமாறு அறைகூவல் விடுக்கிறார். மக்களிடம் அடிமை வாழ்வை விடுத்து சுதந்திர வாழ்வை அடைய மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பாரதியின் உபதேசமாகும் என்பது ந.சுப்புரெட்டியார் அவர்களின் கூற்றாகும்.

மனக்குமுறல்

அத்தினாபுர நகர வருணணை நாட்டு வளமும், பெருமையும் காட்டப்படுகின்றன. விதுரன் தன் மனப் போக்குக்கு எதிராக பாண்டவர்களை அழைப்பது “நாட்டின் வளத்தை நோக்கியும் அஃது அமர்க்களமாகப் போவதையும் நினைத்து வருந்துதுல்“[101]

“தொல்லுலகின் குடிமணிபோல் தோன்று நாடு

பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்

பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே!“[102]

என விதுரன் தனக்குள்ளே கூறி வருந்துதல் பற்றிய பாடலாகும். "அறமே வடிவெடுத்தாற் போன்ற தருமன் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு சும்மா இருக்கின்றான். பாண்டவரை மின்செய் கதிர்விழியால் வெந்நோக்குகிறாள் திரௌபதி"[103] அறம் என்ற ஒன்றை கையிலெடுத்து தம் மானம் அவமானப்படுவதை அவமதித்த தருமன் முதலிய பாண்டவர்கள் ஐவரையும் திரௌபதி கடுஞ்சினத்துடன் நோக்குகிறாள். பெண் என்றும் பாராது சபைநடுவே நடக்கும் அவமானத்தை கண்டும் கேளாமல் இருக்கும் கணவனா இவன் என கோபக் கனலெடுத்து வீசுகிறாள். பாரதியின் கவித்துவத்தை ந.சுப்புரெட்டியார் அழகுற வடிவமைத்துள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. தேசிய கீதம் – தமிழ் 3
2. பாரதீயம் ப–12.
3. பெண்கள் விடுதலைக்கும்மி ப.பா–5,6.
4. புதுமைப் பெண் – 8.
5. பெண்மை 50.
6. பாரதி 66–50.
7. புதுமைப்பெண்–6.
8. பா.க. பா.ச–64 (ப.34)
9. பாரதீயம் ப–98.
10. தோ.பா. மகாசக்தி வெண்பா –4.
11. தோ.பா. போற்றி அகவல்
12. ப.பா. புதுமைப்பெண்–4 (பாரதீயம் –97)
13. புதுமைப்பெண் –8.
14. தேசிய கீதம் பா.நாடு 15 (ப.131)
15. பாரதி 45–66 (ப.458)
16. பாரதீயம் (ப–97)
17. ப.பா. (ப.97)
18. பாஞ்சாலி சபதம், வீட்டுமன் உரை
19. பாரதீயம் ப–46.

20. பா.க. தோ.பா-37 ப-53.

21. தோ.பா. 38 (ப-54.)

22. தோ.பா. (ப-47)

23. காணிநிலம் - 46 (ப.65)

24. காணிநிலம் பாரதீயம் ப-134

25. பாரதீயம் ரெட்டியார் கூற்று ப-134

26. தோ.பா. நெஞ்சொடு சொல்வது 21(5) ப-103

27. தோ.பா. க.பா-10, க.என் காதலன் (ப.259)

28. பாஞ்சாலி சபத், 63-1 (ப.-348)

29. க.எ.காதலன் 10-5 (ப-259)

30. பாரதீயம் ப-37.

31. கிளிவிடுதூது

32. கிளிவிடுதூது பாரதீயம் ப-37

33. தே.பா. திருமாலைச் சரண்புகுதல்

34. தே.பா. மூன்றுகாதல் -8 (ப.26)

35. கண்ணம்மா என் காதலி 6 (ப-271)

36. க.என் தாய் (5) ப-240.

37. பா.ச.1 நோக்கு (ப-37)

38. பா.ச.1 நோக்கு (ப-39)

39. பா.ச. 1 நோக்கு (ப.-40)

40. பா.க. பா.ச. (ப-342)

41. பா.க. பா.ச. (ப-343)

42. பா.க. பா.ச. (ப.344)

43. பா.ச.1 நோக்கு (ப-45)

44. பா.க. பா.ச. ப-349

45. பா.ச. நோக்கு ப-46

46. க.பாட்டுத்திறன் ப-107

47. பா.க கண்ணம்மா என் குழந்தை (ப-255)

48. க.பா திறன் 9 (3) ப-111

49. பா.க. (ப-255)

50. குறள் 69

51. பா.க. 8(5) ப-256.

52. க.பா.திறன் ப-115

53. குறள் 66

54. பா.க. 8(8) ப-256

55. க.பா.திறன் (ப-116)

56. பா.க. தே.கீ-3 ப.112

57. பா.பா 15 ப-226

58. பாரதீயம் ப-91.

59. பாரதீயம் ப-92

60. ப.பா. 14

61. பாரதீயம் 95

62. க.பா.க.என் தந்தை 8 ப-243.

63. பாரதீயம் ப-95

64. பாரதீயம் ப-2

65. தே.கீ. பாரத மக்களின் தற்கால நிலைமை ப-131

66. தே.கீ. பாரத மக்களின் தற்கால நிலைமை ப-131

67. பா.பா ப-226

68. பாரதீயம் ப-4

69. தே.கீ வந்தேமாதரம் 4 ப-112

70. தே.கீ. புதிய ருஷியா 3 ப-186

71. பாரதீயம் ப-99

72. குறள் – 106

73. பா.க. தே.கீ பாரத சமுதாயம் 17 ப-135

74. பாரதிதாசன் கவிதைகள் உலகப்பன்பாட்டு

75. தோ.பா 47 மகாசக்தி வெண்பா 2 ப-65

76. வேதாந்தப் பாடல்கள் 4 அறிவே தெய்வம் ப-89

77. தெ.பா.-1 வி.நா.ம. மாலை 32 ப-9.

78. பாரதி அறுப்பதாறு – 65 ப-463

79. பாரதி அறுபத்தாறு – 66 ப-464

80. சுப்ரமணிய பாரதியார்1 கண்ணோட்டம் ப-85

81. பா.க. 39 ஹேகாளீ 2 ப-56

82. பா.க. ப-9

83. பா.க. ப-10

84. பாரதீயம் ப-83.

85. பா.க. 47(2) ப-65

86. பா.க 3(1) ப-113

87. பா.க. 14 பல்லவி ப-129

88. பாரதீயம் ப-4

89. பா.க 4 பல்லவி ப-114.

90. பா.க. 8(3) ப-118.

91. பா.க. 3(1) ப-113

92. பாரதீயம் ப-7

93. பா.க.(2) தமிழ்நாடு 20(8) ப-139

94. பா.க 20 (10) ப-139

95. பா.க. 20 (17) ப-138

96. பாரதி பாட்டுத்திறன் ப-214

97. பா.க. 36 (பல்லவி ப-53

98. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் திறனாய்வு

99. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் திறனாய்வு

100. கா.பா.திறன் ப-206

101. பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு ப.16.

102. பா.க. 17-118 (ப-305)

103. பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு ப.103.

இயல் – 3

ந.சுப்புரெட்டியார்யின் நடையில் பாரதியின் இலக்கியமும் அறிவியல் சிந்தனையும்

முன்னுரை

எண்ணற்ற புதுமையான கவிதைகளைத் தமிழுலகுக்கு அளித்தவர். கலைப்போக்கையும், கருத்துப் போக்கையுமு் சுவையுறக் கலந்து பாமாலைகள் சூட்டி தமிழன்னைக்கு களிப்புநச் செய்தவர் பாரதி. தமிழப்புலவர்கள் திண்டாடிக் கொண்டிருந்த காலத்தில் பாரதியார் உண்மைக் கவிதையின் ஒளியைத் தமிழகம் காணச் செய்தார். “இயற்கை யாகச் சுவையை நாக்கின் மூலமே உணர்கிறோம். காதின் மூலம் இந்தச் சுவையை உணரலாம் என்பது இயற்கைக்கு முரண்பட்டது“[1] என்று பாரதியார் கூற்றாக பாரதியைப் பற்றிய திறனாய்வை ஆராய்வதாக இவ்ஆய்வு தொடரப்பட்டுள்ளது.

கவிதையின் நிலை

உணர்ச்சியே கவிதையின் உள்ளமாகவும், கற்பனை வடிவம், கருத்து முதலியவை உடலாகவும் உள்ளது. இவையே கவிதைக்கு இன்றியமையாமை என ந.சுப்புரெட்டியார் அவர்கள் கூறுகிறார். கவிதையின் சொல்லிலும், பொருளிலும் உணர்ச்சி அமைந்திருப்பதே கவிதையின் சிறப்பு என்பது கவிஞரின் கூற்று. இத்தகைய இன்பமே சுவை எனப்படும். வடமொழியாளர் இதனை நலம் என்பர். “மனஉணர்ச்சியால் பூரிப்படையும் போது அதில் வீசும் ஒளியே இன்பமாகும்.“[2] நம்முடைய பேச்சும் எழுத்தும், உணர்ச்சியுடன் நின்றுவிடுகின்றன.

“சுவை மிகுந்த மாம்பழத்தைத் தின்ற ஒருவன் அதன் சுவையைப் பற்றிப் பலவாறு வருணிக்கலாம். ஆனால் அதன் சுவையைப் பிறர் உணரச் செய்வது இயலாது. நலமும் அந்த வகையைச் சார்ந்தது. நலம் ஒருவருடைய அனுபவம், பிறருக்கு எடுத்துக்கூற இயலாது“[3]

கவிதையின் தத்துவமாக கற்பனை, சொல்வளம், ஒலிநயம், யாப்புமுறை, அணிகலன், தொடை, குறிப்புப்பொருள், படிமம், சுவை, உண்மை போன்றவை கவிதையின் உள்உறுப்புக்கள் பகுத்து வெளிப்படுத்துவதாகும். “பாட்டுத்திறன் என்னும் கவிதைத் திறனாய்வு நூலினை 1988ல் எழுதியுள்ளார். இந்நூல் பாட்டுத்திறன், உணர்ச்சித் தத்துவம், கவிதைத்தத்துவம். புதுக்கவிதைத் திறன் என்று நான்கு பிரிவுகளாய் உள்ளது.“[4] இவற்றில் பாட்டுத்திறன் என்பது மற்ற மூன்று தத்துவம் குறித்த அறிமுகப் பகுதியாகும்.

புதுக்கவிதையின் தோற்றம்

சி.சுப்பிரமணிய பாரதியார் தம்முடைய அனைத்துக் கவிதையிலும் மாறுபட்ட கருத்தினை கொண்டிருப்பதால் அவற்றை “நவகவிதை“ என்றே குறிப்பிடுவார். “புதுமை என்ற ஒரு தனித்துவத்தைக் காண்டல் அரிது. தனிப்புதுமை என்பது குதிரைக் கொம்பு. பழயவற்றைப் புதுக்கின பிறகு அவற்றைப் புதுமை என்று புகழாரம் சூட்டுகின்றோம்.“[5] சுவை புதிதாகவும், பொருள் புதிதாகவும் அமைக்கப்படும். இதுவே புதிய கவிதைகள் பிறக்கக் காரணமாக அமைந்தவையாகும். பாரதியாரையே நாடு புதுமைக்கவிஞர் என்று

போற்றுகின்றது. அவரும் சுவை புதிது, பொருள் புதிது என்று பெருமைப்பட்டுக் கொள்கின்றார். ஆழச்சென்று நோக்கினால் பாரதி காட்டும் புதுமைகள் யாவும் பழமையின் அடிப்படையிலேயே அமைந்தவை.

வசன கவிதை

யாப்பு முறைகளுக்கு கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்கு சுதந்திரமான எழுத்து வடிவம் கொடுக்கும் இப்படைப்பு முயற்சி வசனகவிதை “கவிதைப் பண்பு மறைத்து யாப்பே முந்திரிக் கொட்டை போன்று முன்னின்று தரிசனம் தந்தது. பாரதியார் புலவர்களின் கடுமையான நடையை தேர் வடம் போன்ற விறைப்பனை தமிழ் நடையை இவ்வாறு கண்டனம் செய்வார்“[6] செய்யுளின் யாப்பு பெற்று உரைநடைபோல் இருந்துவிட்டால் அது வசன கவிதை? என்பதைத் தெளிவு பெறு“[7] உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் வேறு வசனகவிதை வேறு செய்யுளில யாப்பு அணி இடம்பெற்று உரைநடை போல் அமைவதால் அவற்றுள் வசன கவிதையா என்பதை கண்டறிய வேண்டும். அனைத்தும் வசன கவிதை யாகாது.

“பாரதியார் தான் முதன் முதலாக மேனாட்டார் பாணியில் வசன கவிதையைத் தோற்றுவித்தவர். இவரைத் தமிழில் வசன கவிதையின் தந்தை என்று கூறுவதும் தவறில்லை“[8] என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் கூறுகிறார்.

சுவைப்பாகுபாடு

நம்முடைய எழுத்தும், பேச்சும் உணர்ச்சியுடன் நின்று வருகின்றன. சுவையை ரஸத்தைப் பாகுபாடு செய்வது நின்று விடுகின்றன. சுவையை ரஸத்தைப் பாகுபாடு செய்வது இயலாததாகும். ஒரு உணவை சுவைக்க முடியாமல் சுவையை உணர முடியாது. ஒருவருடைய அனுபவமே ரஸமாகும். அதைப் பிறருக்கு எடுத்துக் கூற இயலாது. சுவை இலக்கண நூலார் ரஸத்தை முன்னிலையாகக் கூறாது, அதனால் ஏற்படும் உணர்ச்சிகளை முன்னிலைப்படுத்தி அவற்றை ஒன்பது நிலையாகப் பிரிக்கின்றனர். அவை,

1. சிருங்காரம் (உவகை)
2. கருணம் (அழுகை)
3. வீரம் (பெருமிதம்)
4. ரௌத்திரம் (வெகுளி)
5. ஹாஸ்யம் (நகை)
6. பயானகம் (அச்சம்)
7. பீபத்ஸம் (இளிவரல்)
8. அற்புதம் (மருட்கை)
9. சாந்தம் (நடுவுநிலை)

என்பனவாகும்.

ரஸம் காண்போரை நடிகன் செய்யும் அபிநயம் மூலம் உணரச் செய்ய இயலும்.

பாரதியார் வடமொழி அல்கார நூல்களின் அடிப்படையில் தமது பாடல்களில் ரஸங்களைப் புகுத்தியுள்ளார். அவற்றுள்,

சிருங்காரம் என்பது வடமொழி வாணர்கள் சிருங்காரத்தை இருவகையாகப் பிரிக்கின்றனர்.

சம்போக சிருங்காரம்

(காதலன் காதலி சேர்ந்திருக்கும் நிலை)

காதலியைக் கண்டு உள்ளம் பூரித்து அவளை தழுவுதல்.

விப்ரலம்ப சிருங்காரம்

அவளது செயல் இனிய சொல் கண்டு மகிழ்வது.

மற்றொரு நிலை,

(காதலன் காதலி பிரிந்திருக்கும் நிலை)

இரண்டாம் நிலை முதனினும் மேலான மனநிலை, இரண்டாம் நிலையே உயர்வு பெற்று விளங்கும்.

கருணம் துக்க உணர்ச்சியே அதன் நிலைக்களமாதலால் அதனை மேலை நாட்டினர் போல் சிறப்பாக வளர்க்கவில்லை.

வீரம் எந்த சிக்கலான சந்தர்பத்திலும் மனம் குன்றாமல் விடாமுயற்சியைக் கடைபிடிப்பவனே வீரணாவான். தவிர ஆயுள் முழுவதும் தன் புலன்களை அடக்கப்பாடுபடுவதும் வீரத்தின் அடையாளமாகும்.

ரௌத்திரம் பகைவன் செய்த தீச்செயல்களை நினைத்து மனம் கொதிக்கும் நிலையைக் குரோதம் என்று வழங்குவர்.

ஹாஸ்யம் இயற்கைக்கு மாறாக நாம் எதையாவது உணர்ந்தால் அது நகைப்பினை விளைவிக்கும்.

பயாநகம் மாந்தகட்கு உடன்பிறந்த சொத்த. பயம் என்ற உணர்ச்சியற்றவர்களே இல்லை என்றே கூறலாம். பீபத்ஸம் அருவருப்பு அல்லது இழிவு தோன்ற நிற்கும் செயல்கள் அனைத்தும் இளிவரல் சுவையை நல்கும்.

அற்புதம் வியப்புச் சுவை என்றே வழங்குவர் மக்கள் பல பொருட்களைக் கண்ணுறுங்கால் அவற்றோடு தன்மனநிலையை சேர்த்தே சிறப்பாக அனுபவிக்கும் பழக்கமாகும். சாந்தம் சுவைகளுள் எட்டு என்று அறுதியிட்டுக் கூறினாலும் அவற்றிற்கு அப்பாலும் ஒன்று உண்டு என்பதாக பண்டைய அறிஞர்கள் சித்தரித்துள்ளனர்.

“புலன்களை நன்னெறிப் படுத்தி இயற்கை அன்னையுடன் சற்று உறவாட்டம் வைத்துக் கொண்டாலும் இலக்கியக்கியங்களைப் படித்து

அனுபவிக்கக் கற்றுக் கொண்டாலும் அந்த உறவும், அனுபவமும் நமக்கு அளிக்கும் ஆறுதல் மிகப்பெரியது“[9]

நமது புலன்களை அடக்கப் பழகிக் கொண்டாலும் இயற்கையோடு ஒத்த உறவும், அனுபவமும் நம் உணர்வைத் தூண்டுபவையாக அமைந்தவையே. அவையே நமக்கு அளிக்கும் ஆறுதலுமாகும் என்பது ந.சுப்புரெட்டியின் கருத்தாகும்.

அறிவியல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவர் ந.சுப்புரெட்டியார் அவர்கள். பாரதியாரின் அறிவியல் புலமையும் பேராசிரியர் அவர்களுக்கு வழிகாட்டியாக உள்ளது.

வழிவழியாக முன்னோர் தேடி வைத்த அறிவுச் செல்வத்தைப் பின்னால் வரும் இளைஞர்களும் பயன்பெற வேண்டும். தாமும் உயர வேண்டும். நாடும் உயர வேண்டும். வறுமையால் கல்வி தடைபடக்கூடாது. இதற்கு தங்களால் ஆன அறிவியல் புலமையை வெளிக்காட்டியுள்ளார் என்பதை இவ்வியலின் மூலம் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

தொழில் கல்வி

தொழில்கல்வி பற்றியும் பல்வேறு தொழில்கள் மூலம் உற்பத்தி பெருகி தொழில்கல்வியும் பெருக வேண்டும் என்பது பாரதியின் கனவாய் இருந்தது.

“பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

தமிழ்மொழியில், பெயர்த்தல் வேண்டும்

இறவாத புகழுடைய புது நூல்கள்

தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்“[10]

எந்த கல்வியாயினும் அவை தமிழ்மொழியில் மொழிபெயர்ப்பு செய்து தமிழுக்கே உரிய சிறப்பினை இழக்கவிடாது காக்க வேண்டும் என்பது பாரதியின் பாடல்வாயிலாக அறியலாம்.

இளைஞர் வானொலி

“காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்

காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்“[11]

என்று வானொலி மூலம் தகவல் பரிமாற்றம் நடைபெறுவதையும் அறிவியல் கல்வி வளர்ச்சியினை மேம்படுத்தல் பற்றியும் பாரதி பாடல் வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.

சிறுவர்களுக்கு விளக்கமாக இருக்கும் பொருட்டு “இளைஞர் வானொலி“ என்ற ஒரு சிறிய நூலை எழுதத் தொடங்கினார். தொடகத்தில் காரைக்குடியில் தொடங்கிய அறிவியல் பணியை பின்னாளிலும் தொடர்ந்தார். அவருக்கு தேவையான அறிவியல் நூல்களை சென்னை அமெரிக்க நூலகம் அனுப்பி

உதவியது. உட்கார்ந்த இடத்தில் இருந்தே பல்வேறு அறிஞர்களின் உரையாடல்களை அறிய வேண்டிய அற்புதமான கருவி. பல நாடுகளுடன் உறவு கொள்ளவும், உலக முன்னேற்றத்திற்கும் உதவும் வியத்தகு ஆற்றல் படைத்தது. "இவ்வுலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இருந்த இடத்தில் இருந்தே அவ்வப்போத கேட்டு மகிழவும், அறிவு பெறவும், பல நாடுகளுடன் உறவு கொள்ளவும் உறுதுணை செய்வது வானொலியாதலால் இதனை முதலில் ந.சுப்புரெட்டியார் அவர்கள் விளக்கத் துணிந்தார்."[12]

பாரதியார் கண்ட கனவு நனவாகி விட்டதை முதலில் எழுதத் துணிந்தது பொருத்தமானது என்பதையும் தெளிவுபடுத்திகின்றார்.

அதிசய மின்னணு

பல நாட்களாக செய்ய இயலாத பணிகளை மின்னணுக்கள் செய்கின்றன. பிணி நீக்கும் முறையில் பரந்த விண்வெளியின் தொலைவு, இருண்ட நள்ளிரவு போன்றவையும் அறிய முடிகிறது.

"கனந் தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்

கனந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்

கனந் தோறும் நவநவமாங் களிப்புத் தோன்றும்

கருதிடவுக் சொல்லிடவு மெளிதோ?"[13]

என்ற பாரதியின் பாஞ்சாலி சபதப் பாடல் வரிகள் அறிவியல் காலத்திற்கு அரிய நூல்களை வெளியிட்டு வரும் கழகம்“ இந்நூலை மனமுவந்து ஏற்றுக் கொண்டமை இவரை பெருமை கொள்ளச் செய்தது.

இப்பாடல் வரிகளுக்கு ஏற்ப “அதிசய மின்னணு“ என்ற நூலை அமைத்துள்ளார். அவற்றுள் விடுதலை மின்னணுக்கள், மின்னணுக்குழல்கள், மின்னணுக் குழல்களின் பணிகள், தொழில் துறையில் மின்னணு புரியும் வியத்தகு செயல்கள், ஒளிக்குழல்கள், ஊர்க்காவலர்கள் போல் பணிபுரியும் முறைகள் உடல் நலப்பாதுகாப்பில் மின்னணுவின் பணி, அறிவியல் ஆராய்ச்சியில் அதுபுரியும் அற்புதப் பணிகள், பாதுகாப்புத் துறையில் அது கொள்ளும் பங்கு போன்ற செய்திகள் எல்லாம் அடங்கிய ந.சுப்புரெட்டியார் அவர்களின் படைப்புகளுள் ஒன்றாகும்.

“அண்டங்கள் யாவும் ஒரு கதிரவனைச் சுற்றி இயங்குவதைப் போலவே மின்னணுக்களும் கதிரவன் போலுள்ள உட்கருவைச் சுற்றி இயங்குகின்றன. நம்முடைய பூமியைச் சூரியனிடமிருந்து தனியாகப் பிரிக்க முடியாது. உட்கரு என்ற கதிரவனிடமிருந்து மின்னணுக்களைப் பிரிக்கலாம். ஆனால் பிரிக்கும் முறையை அறியப் பன்னெடுங் காலம் ஆயிற்று.“[14]

“நேர்மின் துகள்களும், எதிர்மின் துகள்களும் பிணைந்துள்ள ஆற்றல் புவிஈர்ப்பு விசையைவிட இலட்சக்கணக்கான மடங்கு வலுவுடையது. அவற்றைப் பிரித்து இனங்கான வில்லை. செயல்பாடுகளைக் கொண்டே அவை இருப்பது

அறிந்து கொண்டுள்ளனர். அணுவினை சிதைத்து “உட்கரு ஆற்றல்“, “அணுவாற்றல்“ என இருப்பதும் அவற்றை விளக்கும் முறையிலம் இந்நூல் அமைக்கப் பெற்றது“[15] என்பதும் ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்தாகும்.

கதிரவனைச் சுற்றி இயங்கும் ஆற்றலும் அதன் உள் இருக்கும் உட்கரு என்ற மூலக்கூறும் அவை ஒவ்வொன்றும் தனித்தனியே செயல்படும் விதம், சேர்ந்து செயல்படும் விதம், அதன் எதிர்வினை, அவை எவ்வெவற்றிற்கு பயன்படும் எவ்வாறு பயன்படும் என்பதுவும் குறிப்பிப்படும் வடிவமாகும்.

“ஆதித் தாய்தந்தை நீவிர் உமக்கே!

ஆயிரந்தரம் அஞ்சலி செய்வேன்!“[16]

என்ற பாரதியின் பாடல் வரிகளில் ஞாயிறு வணக்கத்தினை வெளிப்படுத்தியமை பற்றி ந.சுப்புரெட்டியார் அவர்கள் விளக்குகின்றார்.

“ஒருவருடைய உயிர்ப்பு ஆற்றல் தடைபடாத அவருடைய இதயத் துடிப்பில் இருப்பதைப் போலவே இந்த அகிலத்தின் ஆற்றலும் உள்ளது. அகிலத்தின் ஆற்றல் சிவமாக கதிரவனிலும், சக்தியாக உட்கருவிலும் உள்ளது“[17]

கதிரவனே ஆற்றல் மூலம் என்பது இன்றைய அறிவில் உண்மை. ஆற்றல் முழுவதும் அணுவின் உட்கருவில் தேங்கிக்கிடக்கின்றது என்பது இன்றைய அறிவியல் உண்மையாகும்.

அம்புலிப் பயணம்

நம் புவியில் வாழும் எல்லா நாட்டுக் கவிஞர்களும் அம்புலியின் வனப்பில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்து அதன் மீது பாடல்கள் பல இயற்றியுள்ளனர்.

> **“சுந்திர மண்டலத்தியல்**
>
> **கண்டு தெளிவோம்“[18]**

என்று பாரதியும் கனவு காணச் செய்தார்.

விண்வெளிப் பயணம் பற்றி ஆங்கிலத்தில் பல சிறிய, பெரிய நூல்களும் வெளிவந்து கொண்டிருந்தன. சென்னை, அமெரிக்க நூலகத்தின் துணைகொண்டு இந்த நூல்களைப் பெற்றுப் படித்து வந்தேன். “அறிவியல் சம்பந்தமான நூல்களின் தொகுப்பினை ஆர்வமுடன் வாங்கிப் படித்து வந்தார். 1961–ல் அமெரிக்க மக்கள் இறங்குவதை நமது இலட்சியமாகக் கொண்டு உழைப்போம் என்று விட்ட அறைகூவல் அறிவியலறிஞர்களின் இதயத்தைத் தொட்டது. இதனைத் தான் நம் பாரதியும் கனவாய்க் கண்டார். குறிப்பாக அமெரிக்கா மற்றும் உருசியாவும் பல திட்டங்களை வகுத்துக் கொண்டு அதனை நனவாக்கி வந்தன.“[19] அவற்றை படிப்படியாக வெற்றியுடன் நிறைவேற்றி வந்தன. விண்வெளி வீரர்களின் பாதுகாப்பான பயணம் போன்ற செய்திகள் அடங்கிய தொகுப்பாக “அம்புலிப் பயணம்“ என்ற நூல் எல்லா செய்திகளும் அடங்கிய ஒரு கருவுலமாக ஆயிற்று.

மன உளவியல்

பல இன்னல்கள் ஏற்பட்ட போதிலும் இறை நம்பிக்கை ஒன்றே அவருக்கு உதவியாக இருந்தது என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். மன ரீதியாக சோர்வு ஏற்படின் அதற்கு ஏற்ற தீர்வாக இறை உணர்வு ஒன்றே என்பது பேராசிரியரின் கருத்தாகும். உடல் சோர்வு ஏற்படின் மருத்துவம் மூலம் சரியாகும். ஆனால் மனசோர்வு பல வேலைகளில் தடை ஏற்பட்டுவிடும். இதற்கு தீர்வு என்பது ந.சுப்புரெட்டியார் அவர்கள் கொண்ட இறைநம்பிக்கை ஒன்றேயாகும்.

"கண்ணிரண்டும் இமையாமல் செந்நிறத்து
மெல்லிதழ்ப்புங் கமலத் தெய்வப்
பெண்ணிரண்டு விழிகளையும் போக்கிடுவாய்
கோவிந்தா! பேணி ணோர்க்கு
கண்ணிரண்டு பொற்பாதம் அளித்தருள்வாய்
சராசத்து நாதா! நாளும்
எண்ணிரண்டு கோடியிலும் மிகப்பலவாம்
வீண்கவலை எளிய னேற்கே"[20]

"எளியனேன் யானெனலை எப்போது
போக்கிடுவாய்! இறைவ னே! இவ்
வளியிலே பறவையிலே மரத்தினிலே
முகிலினிலே வரம்பில் வான

வெளியிலே, கடலிடையே மண்ணகத்தே

வீதியிலே வீட்டி லெல்லாம்

களியிலே, கோவிந்தா! நினைக்கண்டு,

நின்னொடு நான் கலப்ப தென்றோ?”[21]

”என் கண்ணை மறந்துஉன் இரு கண்களையே

என்னகத்தில் இசைத்துக் கொண்டு

நின் கண்ணால் புவியெல்லாம் நீயெனவே

நாள்கண்டு நிறைவு கொண்டு

வன்கண்மை மறதியுடன் சோம்பர் முதல்

பாவமெலாம் மடிந்து, நெஞ்சிற்

புன்கண் போல் வாழ்ந்திடவே! கோவிந்தா!

எனக்கமுதம் புகட்டு வாயே!”[22]

கோவிந்த ராஜனை சேவிக்கும் போது பாரதியின் பாடல் வரிகளை பாடிச் சேவிப்பார்.

“நெஞ்சுருகப் பாடிக் களிப்பேன் யான் இங்ஙனம்பெறும்

இறையநுபவத்தை என் சொற்களால் எடுத்துக்காட்ட வேறில்லை“[23]

மனமுறுகிப் பாடும் பாடல் வரிகளும் தன் கோவிந்தனை சேவிக்கும் போது பாடிக் களிக்கின்றார். ஏதேனும் மனக்குறை ஏற்பட்டால் அதற்கு திருமாலையே

சரணடைகின்றார். திருமாலை பிடித்துக் கொண்டால் தம்மிடம் எந்த வித குறைகளும், சிக்கல்களும் நேராது என்பது ஆணித்தனமான நம்பிக்கை.

பல இன்னல்கள் ஏற்பட்ட போதிலும் இறை நம்பிக்கை ஒன்றே அவருக்கு உதவிக்கரமாக இருந்தமை புலனாகின்றது.

சமயமும், அறிவியலும்

சிந்தித்து மட்டுமே தெளிவுபெறல் வேண்டும். இறைவன் உலகைப் படைத்து அழிக்கின்றான். மண், பொன் போன்ற காரணப் பிரபஞ்சம் குடம், அணி போன்ற காரியப் பிரபஞ்சமாகின்றது. நுண்ணிய நிலையை அடைதல் "பிரவியம்" பரு நிலையை அடைதல் "படைப்பு" என்பதாக சிந்தித்து உணர்தல் வேண்டும்.

"எத்தனை கோடி

இன்பம் வைத்தாய் – எங்கள்

இறைவா! இறைவா! இறைவா!"[24]

அறிவியல் அறிஞர்கள் ஆய்வுகள் மூலம் கண்டவற்றையே நம் நாடு ஞானச் செல்வர்கள் உள்ளுணர்வால் அனுபவமாகக் கண்டுள்ளனர். அணுக் கோயிலின் முன் நிற்கும் விஞ்ஞானிகளும், அண்டக் கோயிலின் முன் நிற்கும் மெய்ஞானிகளும் ஒரே உண்மையைத் தான் காண்கின்றனர்.

இவற்றை ஆய்ந்து அறிவியல் ஆய்வின் மூலம் எல்லையற்ற மகிழ்ச்சியும் கண்டுள்ளனர். நம் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

விண்வெளிப் பயணம்

எண்ணற்ற அண்டங்கள் வானவெளியில் மிதந்தோடுவதை வியந்து பாராட்டி மகிழ்வர். இந்த உலகங்களுக்கு இடையே உள்ள தூரத்தை கற்பனையாலும் காண முடியாது! என்று சக்தியை வியந்து பாராட்டும் கவிஞர் பாரதியார் இந்த தூரத்தை கற்பனையில் கணக்கிட்டு மகிழ்வார்.

"அண்ட கோடிகள் வானில் அமைந்தனை

அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை

மண்டலத்தை அணுவணு வாக்கினால்

வருவ தெத்தனை அத்தனை யோசனை

கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை"[25]

ஒவ்வொரு விண்மீன் மண்டலமும் ஒவ்வோர் அகிலமாகும். ஒவ்வொரு விண்மீன் குடும்பத்திலும் ஆயிரமாயிர இலட்ச விண்மீன்கள் அடங்கியுள்ளன. அவற்றிற்கு இடையே உள்ள தூரங்கள் மிகப் பெரியவை. இந்த எல்லையற்ற விண்வெளியில் நமது கதிரவன் ஒரு சாதாரண விண்மீனாகும். அஃது இந்த எண்ணற்ற விண்மீன் குடும்பங்கள் உள்ள வெளிப்பரப்பில் ஒரு தூரத்தில் மிதந்த கொண்டுள்ளது. அஃது ஒரு சாரசரி விண்மீன் தான். நம் கதிரவனை விடக் குறுக்களவில் பல்லாயிரக் கணக்கான மடங்கு பெரிய விண்மீன்களும் உள்ளன. ஞாயிறும் விண்வெளியில் பல உலகங்கள் அடங்கிய ஒரு மாபெரும் குடும்பமாகும்.

"பூமியைச் சுற்றி ஏனைய கோள்கள் சுற்றி வருவதாகக் கருதப்பெற்ற உண்மை "கோபர்னீகஸ்" காலத்தில் கதிரவனைப் பிறகோள்கள் சுற்றி வருவதாகக் காட்டி மாற்றப் பெற்ற உண்மையானது இடம் பெறலாம்."[26]

வானியல், வானஇயல், விண்வெளி இயல், அணுவியல் போன்ற அறிவியல் துறைகளின் வரலாறுகள் தனித்தனியாக எழுதப்பெற வேண்டிய இன்றியமையாமை இருப்பினும் பொதுவாக அறிவியல் வரலாறு மிகமிக இன்றியமையாதது.

அறிவியல் வரலாற்றின் உண்மைகளைக் காண அறிவியலறிஞர்கள் மேற்கொண்ட பல்வேறு சோதனைகளையும் இந்த ஆய்வுப்பாதைகளில் அவர்கள் பட்ட துன்பங்கள், தொல்லைகள், இடர்பாடுகள் ஆகியவற்றையெல்லாம் சுவையாக சுட்டியுரைக்கலாம் என்பது ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்தாகும்.

தொழில் வளம்

பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்தலையும், தொழிற்சாலைகளை அமைத்தலையும் காட்டுவதாகும். பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கு சிறு நாடுகள் உதவிவருவது வியப்பானவையாகும். பல்வேறு தொழில்கள் மூலம் பல்வேறு உற்பத்தி பெருக சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலைகள் உருவாக வேண்டும்.

“பட்டினில் ஆடையும் பஞ்சினில் உடையும்

பண்ணி மலைகளென வீதிகுவிப் போம்

கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்

காசினி வணிகருக்கு அவை கொடுப்போம்“[27]

என்ற பாடலில் பாரதியின் கணவினைப்பற்றி அறியலாம். பல்வேறு பொருட்களின் உற்பத்தி மற்றும் தொழில் கல்வி நிலையங்கள் நிறுவுதல், தொழிற்சாலைகள் நிறுவுதல் போன்ற திட்டங்களைப்பற்றியும் தம் பாடலில் பாரதி வெளிப்படுத்தியுள்ளார்.

“ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம்செய் வோம்

ஆலைகள்வைப் போம் கல்விச் சாலைகள்வைப் போம்

ஓயுதல்செய் யோம்தலை சாயுதல்செய் யோம்

உண்மைகள் சொல் வோம்பல வண்மைகள்செய் வோம்“[28]

என்றும் புதிய பாரத்தில் சிங்களத் தீவுக்குப் பாலம் அமைத்தல் கங்கை நதியின் நீரை வழக்குப் பயன்பட வைத்தல். நிலத்தடி கனிமவளமடைதல், பண்டமாற்று போன்று தொழில் வளங்களைப் பெருக்குதலை விவரிக்கின்றார்.

“கங்கை நதியின் மிகை நீரை நடு நாட்டுக்குக் கொணர்ந்து உழவுத் தொழிலை மேம்பாட்டைச் செய்தல், நிலத்தினை அகழ்ந்து தங்கம் முதலாம் கனிமவளங்களை அடைதல், முத்துக்குளித்தல், கோதுமைக்கு வெற்றிலையைப்

பண்டமாற்று செய்தல் போன்ற வகைகளில் செல்வ வளத்தைப் பெருக்குதல்“[29] போன்ற கனவுகள் பாரதி காண்கின்றார் என்பது ந.சுப்புரெட்டியார்யின் கூற்று.

ஆதவன்

கதிரவனைப் பற்றி மூன்று பாடல்கள் காணப்படுகின்றன.

“பரிதியே! பொருள் யாவிற்கும் முதலே!

பானுவே! பொன்செய் பேரொளித் திரளே!“[30]

என்கின்றார்.

நம்முன்னோர்கள் அதிகாலை செய்யும் பணியை நிறைவுடன் முடித்து கதிரவனை வணங்குவார்கள். கல்வியினை கற்றவரும், கல்லாதவரும் “சூரிய நமஸ்காரம்“ என்ற உடற்பயிற்சி முறையை செய்து வருகின்றனர். நம்முன்னோர் வானமண்டலத்தில் உள்ள அனைத்தையும் நினைத்து “நவகிரக வழிபாடு“ மேற்கொள்வதை நினைத்து பாரதியின் பாடல் அமைந்துள்ளதோ? என ந.சுப்புரெட்டியார்யார் அவர்கள் வாயிலாக அறியலாம்.

“காதல் கொண்டவனை போலும் மண்மீதே

கண்பிறழ் வின்றி நோக்குகின் றாயே!

மாதர்ப் பூமியும் நின்மிசைக் காதல்

மண்டி னாள்இதில் ஐயமொன் றில்லை!“[31]

கதிரவனைக் காதலனாகவும் நிலமகளைக் காதலியாகவும் கவிஞர் ஏற்றிக் கூறுகிறார். “உறங்கிக்கிடந்த இயற்கை அன்னை விழிக்கிறாள். புற்கள் பாடிக் களிக்கின்றன. கடலின் ஒவ்வொரு துளியிலும் கதிரவனின் வடிவு. திரைகளால் தாளம் போட்டுக் களிக்கின்றது இது கவிஞர் சிந்தனையாகும்.“[31]

“என்ற னுள்ளங் கடலினைப் போல

எந்த நேரமும் நின்னடிக் கீழே

நின்று தன்னகத் தொவ்வோர் அனுவும்“[33]

என்ற பாடல் வாயிலாக இயற்கை வருணணையை அழகுற மிளிரச் செய்கின்றார். அறிவியல் உண்மைகளாவனவாகும்.

“தாவரங்கள் இயற்கையிலேயே சூரியனிடமிருந்து ஆற்றலைப் பெற்று நிகழும் அறிவியல் நிகழ்வே ஒளிச்சேர்க்கையாகும். ஒளியையும், வெப்பத்தையும் நேரே விழுங்குகின்றன. தாவரங்கள் மட்டுமே இவ்வாறு நேரிடையாகப் பெறும் ஆற்றலை செய்கிறது. பிராணிகள் யாவும் கதிரவனின் வெப்பத்தையும், ஒளியையும் விழுங்காமல் அவற்றை விழுங்கிக் கதிரவனின் ஆற்றலைப்பெறுகின்றன. புலி, சிங்கம் போன்ற புலாலுண்ணும் விலங்குகளோ கதிரவன் ஆற்றலை அவை பயிருண்ணும் விலங்குகளை உண்டு ஆற்றலைப் பெறுகின்றன. கைபுனைந்தியற்றாக கவின்பெறு புலவர் நக்கீரர் பெருமானும் கதிரவனை நினைந்து தம் திருமுருகாற்றுப்படையைத் தொடங்கின்றார். பாரதி

காதல் உருவில் கதிரவனை காண்கின்றார். ஆதவனிடமிருந்து தான் அனுமான் எல்லா கலைகளையும் கற்றார்.“[34]

நக்கீரர் பெருமான் தம் திருமுருகாற்றுப் படையில் கதிரவனை நினைத்து தம் பாடலை தொடங்கி கதிரவனை மதிப்பு கொள்ளச் செய்திருக்கிறார். அதேபோல் பாரதியும் கதிரவனை காதலனாகவும் நிலமகளை காதலியாகவும் கொண்டு இருவரும் சேரும் அற்புக்காலைக் காட்சியை உருவெடுத்து நயத்துடன் கவி புனைகின்றார். அனுமான் எல்லா கலைகளையும் கற்பதற்கு ஆதவன் துணையே காரணம் என்று புராண வரலாறு விளக்குகிறது. இதனால் பாரதியும் கதிரவனை “ஞானபாநு“ என்று போற்றுகிறார்.

அதேபோல் அறிவுத்தெய்வம், நெஞ்சின் கவலைகள், நோய்கள் இவற்றைப் போக்கி நீண்ட ஆயுளை அளிப்பதாக வேள்வித் தீயையும் குறிப்பிடுகின்றார். “நெருப்புத்தெய்வம்“ மனிதர்களை தேவர்களாக்குவதையும், ஆண்டவனை “பரஞ்சோதி“ என்று குறிப்பிடுவதையும் ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

“மன்று வானிபைக் கொண்டுல கெல்லாம்

வாழ நோக்கிடும் வள்ளிய தேவா!“[35]

சூரியனிடமிருந்து கிடைக்கும் ஆற்றல் மூலம் தான் உலக உயிர்களின் ஆற்றலுக்கு உதவிகரமாக உள்ளது என்பது இதன் உண்மைக் கருத்தாகும்.

இராக்கெட்

விண்வெளிப் பயணங்களுக்கு பயன்படும் இராக்கெட்டு பற்றிய சிறிய நூலை எழுதியுள்ளார். “விண்வெளிப் பயணம் தொடங்கும் முன் விண்வெளியின் எடையின்மை அனுபவம், விண்வெளியின் வெப்பம், அமுக்கம் போன்ற செய்திகளை அறிவதற்கு இராக்கெட் துணை செய்கிறது. இராக்கெட்டின் துணையால் தொலைக்காட்சி அமைப்பு, இராடர் அமைப்பு, தொலை ஒலிப்பான் அமைப்பு போன்றவைகளடங்கிய சிறிய துணைக் கோள்களை விண்வெளியில் பல்லாயிரக் கணக்கான மைல் உயரங்களுக்கு அனுப்பி பல செய்திகளை அறிதல் வேண்டும்“[36] இராக்கெட் என்பது வானத்தின் தத்தவத்தை அடிப்படையாகக் கொர்ணடு செய்யப்பட்ட ஒரு கருவி. “தானியங்கி“, “வானஊர்தியின் பொறி“, “உள்ளெரி பொறி“. காற்றே இல்லாத விண்வெளியிலும் பயணம் செய்ய அதற்குத் தேவையான உயிரியத்தை தானே சுமந்தும் செல்கிறது. காற்றின் மூலமும் பெறுகிறது. வரலாறு, அமைப்பு, கவர்ச்சி விதி, செயல்படும் விதம், குறுக்கிடும் ஒலித்தடை, வெப்பத்தடை, தடை தகர்க்கும் முறை, வழிகாட்டி அமைப்பு, கவர்ச்சி விதி, செயல்படும் விதம், குறுக்கிடும் ஒலித்தடை, வெப்பத்தடை, தடை தகர்க்கும் முறை, வழிகாட்டி அமைப்புகள், வளிமண்டல அமைப்பு வேதியியல் மண்டலம் வானவெளியின் அற்புதம் போன்றவை அடங்கிய தொகுப்பினை இராக்கெட்டு பற்றிய சிறிய நூலில் ந.சுப்புரெட்டியார் அவர்கள் படைத்துள்ளார். இந்நூலுக்கு தமிழக அரசு ரூ.1000 அளித்தது. இந்நூலை தவத்திரு அடிகளார் மீது கொண்டுள்ள பேரன்பிற்கும்

பெருமதிப்பிற்கும் இந்நூலை அவரது திருவடிகளில் சமர்ப்பித்தார். இதனால் உலகில் பல இடங்களில் பயன்பெறும் என்பது ந.சுப்புரெட்டியார் அவர்களின் நம்பிக்கையாகும்.

இளைஞர் தொலைக்காட்சி

"இளைஞர் வானொலி என்ற நூல் செவிமடுத்தியார் என்றும் தொலைக்காட்சி கண்ணம்மையார்" என்றும் ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிடுகின்றார். முதலாவது தொலைவில் நடைபெறும் நிகழ்ச்சிகளை கேட்கலாம். இரண்டாவது அதில் நிகழும் காட்சிகளைக் காணலாம். இரண்டிற்கும் மின்காந்த அலைகளே பயன்படுகின்றன.

"யுத்தம் புதிய கலைகள் – பஞ்ச

பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்

மெத்த வளரும் மேற்கே – அந்த

மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"[37]

என்ற குறைகள் தமிழ்க்காய்க்கு இல்லாதிருக்கச் செய்ய வேண்டும். இதற்கு இளைஞர்களிடமிருந்த இளமையில் இருந்தே அறிவியல் கலையறிவை வளர்க்க வேண்டும் என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் கூறுகிறார்கள்.

"தொலைக்காட்சி மூன்று நிலைகளில் நிகழ்ச்சிகளை காட்டுகின்றது.

1. நிகழ்ச்சிகளை துருவிப்பார்த்தல்

2. ஒலித்துடிப்புகளை மின் துடிப்புகளாக மாற்றுதல்

3. மின்துடிப்புகளை ஒளித்துடிப்பளகா மாற்றுதல்

முதல் இரண்டு கட்டங்களையும் ஒலிபரப்பு நிலையம் கவனிக்கிறது. மூன்றாவது கட்டம் நிகழ்ச்சிகளை ஏற்கும் கருவியில் நிறைவேறுகிறது.“[38]

ஒலி, ஒளி காட்சிகளை நாம் அறிந்து கொள்வதற்கு பல்வேறு வகையான மின்அணி நிலைகள் காரணமாகின்றன என்பதை ந.சுப்புரெட்டியார் அவர்களின் வாயிலாக அறியலாம். ஒளியின் தன்மை, கண்ணின் குணங்கள், மின்னணுக் குழல்கள், தனி மின்சாரமாதல், காமிரா, படங்கள், அலைகள் அடங்கிய தொகுப்பே தொலைக்காட்சிப் பெட்டி, அனைவரது கைகளிலும் சேரும் இந்நூல் அவர்களின் சிறந்த அறிவியல் அறிவினை ஏற்படுத்தவேண்டும் என்பது ந.சுப்புரெட்டியார் அவர்களின் ஆசையை வெளிப்படுத்திய நூலாகும்.

அறிவியல் விருந்து

யுத்தம் புதிய கலைகளுக்கு எடை போடும். இந்த காலகட்டத்தில் அறிவியல் கட்டுரைகளுக்கு அறிவியல் விருந்து என்று பெயர் வைத்தமை பொருத்தமானதேயாகும்.

1. “பொங்கலும் அணுவும்
2. அணுவின் அளப்பரிய ஆற்றல்
3. குடிவழியும் சூழ்நிலையும்

4. மின்னலும் இடியும்

5. ஞாயிறுக் குடும்பம்

6. மதிமண்டலச் செலவு

7. கதிரியக்க ஓரிடத்தாள்கள்

8. நனவிலி மனம்

9. தொல்பொருட் கலையில் புதிய ஆராய்ச்சி முறை

10. எதிர்கால அறிவியல்“[39]

போன்றவை அறிவியல் துறையில் பல்வேறு புலன்களை உள்ளடக்கியவையாகும்.

தமிழ் மொழியால் அளவற்ற காதலும், அம்மொழியில் பெரும் புலமையும் அடைந்து மிகுபுகழ் பெற்ற என் கெழுதகை நண்பர் “பேராசிரியர் அர.சு.நாராயணசாமி நாயுடு“ அவர்கள் கூற்றாக ந.சுப்புரெட்டியார் அவர்கள் கூறுவது,

“அணுவின் கூறுகளாகிய அரிசி,

அணுவின் ஆற்றலாகிய மிளகு,

குழவழியும், சூன்நிலையும் என்னும் புளி ஈருள்ளி,

மின்னலும், இடியும் என்னும் பச்சைமிளகாய்,

மதிமண்டலச் செலவு என்னும் மஞ்சள் பொடி

கதிரியக்க ஓரிடத்தான்கள் என்னும் தாளிதப் பொருள்

அளவறிந்து, பொழுதறிந்து – சேர்த்தாக்கி

புதிய ஆராய்ச்சி முறை என்னும் நெய்யிட்டு

நனவிலீயுளமாகிய மாசாலாப் பொருள் சேர்த்து

எதிர்காலத்தில் அறிவியல் என்னும் ஊறுகாயோடு

சுவைத்துண்டு மகிழ்ச்சி ஏப்பமிடச் செய்துள்ளார்

அறிவுக்கு சத்தூட்டும் நல்லுணவு இது

பழமையிலும் புதுமைகலந்து மாறுபாடில்லா

மாறுபாடில்லா வண்டி“[40]

என்று தன் நண்பரின் கூற்றாக பேராசிரியர் விளக்குகின்றார். பழமையிலும் புதுமை கலந்து அவை சுவையூட்டும் அமிர்தம் போன்ற செவிக்கும் இனிக்கும் இனிய மொழியில் அழகுற வெளிப்படுத்திய கருத்தாகும்.

பொறியியல் காட்டும் வண்ணப்படிமங்கள்

அத்தினாபுரம் நோக்கி செல்லும் பாண்டவர்கள் வழியில் பூம்பொழிலில் தங்கியிருந்த பொழுது பார்த்தன் பாஞ்சாலிக்கு பரிதியின் எழிலை விளக்குகின்றான் இயற்கை எழில் அமைந்த அற்புதக் கலவைக் காட்சியினை நம் மனத்தகத்தில் தோற்றுவித்து பூரிப்படையச் செய்கின்றன. பரிதியை பரிதிக்கோளம் மின்செய்த வட்டு, பச்சை நிறவட்டம்

“இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்

எண்ணில்லா திடையிடையே யெழுதல் காண்பாய்!“[41]

பரிதியை விளக்கும் வடிவம் கட்புலப்படிமத்தையும் நீலப்பொய்கைகள் கரிய பெரும் பூதம், தங்கத் திமிங்கலம், தாம்பல மிதக்கும் இருட்கடல் என்று மேகச் சூழலை காட்டுவதையும் வண்ண வடிவக் கட்புலம் அமைந்திருப்பதையும்,

அத்தினாபுரம் வருணிக்கும் போது வெள்ளைப் பனிவரைபோல் பல மாளிகை, முத்தொளிர் மாடங்கள் நந்தியல் வானிகள் என்பனவும் வண்ணப் படிமங்களாகும்.

“ஆணிப் பொற் கலசங்களும் – ரவி

யன்னநல் வயிரத்தின் மகுடங்களும்

மாணிக்கக் குவியல்க ளும் – பச்சை

மரகதத் திரளும் நன் முத்துக்களும்

பூணிட்ட திருமணிதாம் – பல

புதுப்புது வகைகளில் பொலிவனவும்“[42]

என்று பாரதியின் அறிவியல் சிந்தனை அண்டங்கள் குறித்த தன் அறிவியல் பார்வையைக் காட்டுகிறது. பொறியியல் அறிவு நுட்பத்தினை அழகுற வெளிப்படுத்தியுள்ளது. மேலும் கண்ணன் காண்டீபனுக்கு காட்டிய விசுவரூப தரிசனம் பரவெளி அண்ட கோளங்களை வெளிப்படையாக அமைத்துள்ளமை அறிவியல் புலமையை அழகுறச் செய்கின்றது.

அடிக்குறிப்புகள்

1. பாரதீயம் (ப-27)
2. பாரதீயம் (ப-27)
3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆய்வேடு திறனாய்வு
4. பாரதீயம் (ப-2)
5. பாரதீயம் (ப-619)
6. பாரதீயம் (ப-120)
7. குயில் 1 மதிப்பீடு (ப-85)
8. குயில் 1 மதிப்பீடு (ப-84)
9. தே.கீ. தமிழ்-3 (ப-114)
10. தே.கீ. பா.தே 7 (ப-116)
11. நி.கு 4 (ப-117)
12. பா.ச. 27 (ப-312)
13. நி.கு. 4 (ப-123)
14. நி.கு. 4 (ப-124)
15. பா.க (ப-40)
16. வாய்மொழியும் வாசகமும்
17. பா.க பா.தேசம்-11 (ப-117)
18. நி.கு. 4 (ப-481)
19. பா.க. தோ.பா.1 (ப-52)

20. பா.க. தோ.பா.2 (ப–52)

21. பா.க. தோ.பா.3 (ப–52)

22. நி.கு. (ப–31)

23. வாய்மொழியும் வாசகமும்

24. பல்சுவை விருந்து

25. பல்சுவை விருந்து

26. பா.க. 5 (8) (ப–116)

27. பா.க. 5 (9) (ப–117)

28. பாரதீயம் (ப–109)

29. பா.க. 24 (ப–39)

30. பா.க. 25(3) (ப–40)

31. பாரதீயம் – (ப–53)

32. பா.க. 25(2) (ப.40)

33. பாரதீயம் (ப–55)

34. பா.க. 25(2) (ப–40)

35. நி.கு. 4(ப–222)

36. நி.கு. 4 (ப–271)

37. பா.க. 21(9) (ப–139)

38. நி.கு. 4(ப.272)

39. நி.கு. 4 (ப–276)

40. நி.கு. 4 (ப-277)

41. பா.க. 27(151) (ப-313)

42. பா.க. 5(22) (ப-279)

ஆய்வு முடிவுரை

தற்கால வாழ்வின் மீதுள்ள விடுதலை வேட்கையாலும் பாரதி நம் நாட்டின் பழமையை வெறுக்கவில்லை. அதன் கலைகளைத் தட்டிக் கழிக்கவில்லை. தத்துவங்களை உதறித் தள்ளவில்லை. இறைஉணர்வு மிக்கவர். கீதை உணர்த்தும் அறத்தைக் கைக்கொண்டவர்.

சக்தி வணக்கதின் வழிபாட்டில் மனத்தைப் பறிக்கொடுத்தவர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு கவிதை பொழியும் போது தமிழ்ப்பண்பை நினைவில் நிறுத்திக் கவிதையில் பாய்ச்சியவர்.

மிக எளிய சொற்களைக் கையாண்டு எல்லோரும் எளிதாகப் படித்து இலக்கியம் சுவையை நுகரக் கூடிய முறையில் கற்பனை நிறைந்ததாயும் ஓசையின்பமும், ஒலிநயம் மலிந்ததாயுமுள்ள கவிதையைப் படைப்பதில் பாரதிக்கு நிகர் பாரதியே.

பாஞ்சாலி செய்த சபதம் காவியத்தின் பெயராகவே அமைந்தும் விடுகின்றது. பெண்மைக்கு – தாய்க்குலத்திற்கு ஏற்றங்காட்டிய தமிழ் இலக்கிய மரபினை நன்கு கருத்தில் கொண்டவர் பாரதி என்பது ந.சுப்புரெட்டியார் அவர்களின் கருத்தாகும்.

பாரத நாட்டின் குலதெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூட்டாத கவிஞர்கள் அருமை தன்னை நெடுநாட்களாக மறைந்திருந்த பாரதநாடு திடீரென

விழித்துக் கொண்டதும் அதன் எதிரே முதலில் தோன்றிய ஒளி கீதா சாஸ்திரத்தைக் கூறிய பார்த்தனுடைய ரதத்தை வெற்றி பெற ஓட்டிய கண்ண பிரானுடைய உருவமே என்பதற்கேற்ப விடுதலை உணர்வை மக்களிடம் ஊட்டும் திறன் அழகுற அமைந்தவையே.

நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பக்காலம், கலைச் சொற்களை உண்டாக்கிக் கொண்டு தாய்மொழியில் கற்பித்தலைத் தொடங்கவேண்டும்.

தம் வாழ்வின் அனுபவங்களையும் தாம் பயின்ற நூல்களின் நுண்பொருள்களையும் இணைத்து ஆற்றொழுக்காக படிப்போர் நெஞ்சைப் பிணிக்கும் வண்ணம் நேருக்கு நேர் நின்று பேசுவதைப் போல் எளிய இனிய தமிழில் விரிவாகவும், சுவையாகவும் எழுதுவது ந.சுப்புரெட்டியார் அவர்களுக்கு கைவந்த கலையாகும்.

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரங்கள்

1. பாரதியம் - Centenary Committee Publications, AD-13, 5th Street Anna Nagar West, Chennai-600040.

துணைமை ஆதாரங்கள்

2. கண்ணன் பாட்டுத்திறன் - சர்வோதய இலக்கியப் பண்ணை, 31/1, மேலவெளி வீதி, மதுரை-625001.

3. நினைவுக் குமிழ்கள்-2, 3 - வேங்கடம் வெளியீடுகள் AD-13 (PLOT – 3354) அண்ணாநகர், சென்னை-600040.

4. நினைவுக் குமிழ்கள்-1, 4 - பாரி நிலையம் 184, பிரகாசம் சாலை, சென்னை-600108.

5. நிங்காத நினைவுகள்-1, 2 - வேங்கடம் வெளியீடுகள் AD-13 (PLOT – 3354) அண்ணாநகர், சென்னை-600040.

6. மலரும் நினைவுகள் - தேன்மழைப் பதிப்பகம்
34, கொத்தவால் தெரு,
ஆலங்தூர், சென்னை-600016.

7. புதுமைக் கவிஞர், சுப்பிரமணிய பாரதியார் ஒரு கண்ணோட்டம் - தேன்மழைப் பதிப்பகம்
34, கொத்தவால் தெரு,
ஆலங்தூர், சென்னை-600016.

8. குயில் பாட்டு - ஆர்.அனுராதா வெளியீடுகள்
Novel Art Printers,
137, Jani Jan Khan Road,
Chennai-600014.

9. பாட்டுத்திறன் - ஸ்டார் பிரசுரம்
72, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600005.

10. பாரதியார் கவிதைகள் - சி.சுப்பிரமணிய பாரதி
குமரன் பதிப்பகம்
19, கண்ணதாசன் சாலை,
தியாகராயர் நகர்,
சென்னை-17.

11. பாரதியார் கவிதைகள் - மக்கள் பாதிப்பு
கவிதா பப்ளிகெஷன்
த.பெ.எண் – 6123,
8, மாசிலாமணிதெரு, பாண்டிபஜார்,
T.நகர், சென்னை-17.

12. சுப்புரெட்டியாரின் நூற்களஞ்சியங்கள்- வெளியீடு பதிப்பகத்தார்
அறிவுச்சுடர் பதிப்பகம்,
1,அக்ரகாரத் தெரு,
திருமலை சமுத்திரம்
பெத்தநாயக்கண் பாளையம் அஞ்சல்,
ஆத்தூர் தாலுகா, சேலம்-9.

13. பாரதி கண்ட சமுதாயம் - ர.சண்முகம்
அருண் பதிப்பகம்,
107/8 கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை-14.

14. பன்முக நோக்கில் மகாகவி பாரதியார் - புவனா பதிப்பகம்,
6/38, மூன்றாவது தெரு,
பேங்க் நகர்,
திருநகர்(விரிவாக்கம்)
வேலூர்-6.

ஆய்வேடுகள்

1. ந.சுப்புரெட்டியார்யாரின் தமிழ்ப் பணிகள்- முனைவர் பட்ட ஆய்வேடு, பதிவெண்-P9056 Aug-2015, ஆய்வாளர் க.ஜோதிமணி

2. வில்லி பாரத சபாபருவ சூதுபோர்க்- பாஞ்சாலி சபதமும் - கருக்கமும் பொதுநோக்கு ஒப்பீடும், எஸ்.மைதிலி பிரபாகரன், அஞ்சல் வழிக்கல்வி.

3. பாரதியின் பாஞ்சாலி சபதம் - தமிழச்சங்க ஆய்வேடுகள், 54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை-1.

பாவேந்தரின் பாட்டுத் திறன்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

கற்பனைத்திறன், கவிதைவளம், யாப்புநெறி,
உவமைத்திறன், வருணனைத்திறன் முதலியவை
குறித்து விரிவாக எடுத்துரைக்கும் இந்நூல்,
தமிழ்ச்சமுதாய மக்கள் அனைவரும் கற்றுத்
தெளிந்து, சுவைத்து, உணர்ந்து மகிழத்தக்கது

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939270-9-0

eBOOK ~ *மின் நூல்*

அணிந்துரை

பாவேந்தரின் பாட்டுத்திறன்

2001

வழங்கியோர்:

மு கருணாநிதி

முதல்வர், தமிழ்நாடு



மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள்: 11.3.99

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் "பாவேந்தரின் பாட்டுத்திறன்" எனும் பெயரில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளில் காணப்படும் பல்வேறு திறன்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ள நூல் கண்டு மகிழ்ந்தேன்.

"பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப் பாலித்திட வேணும்!" எனப் பாடினார் பாரதியார். அப்பாரதியின் தாசன் - பாரதிதாசன் எழுதிய பாடல்கள் ஒவ்வொன்றும் தமிழ்ச் சமுதாயத்தைப் பாலித்திடும் - பாதுகாத்திடும் தன்மையுடையதாகும்.

பேராசிரியர் சுப்பு ரெட்டியார் கல்வியியல் வல்லுநர்; ஆசிரியர் பயிற்சிக்குரிய நூல்கள் உட்பட பல்வேறு இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார். அவர், இந்நூலில் பாரதிதாசன் பாடுபொருளாகக் கொண்டவற்றைப் பட்டியல் படுத்துகிறார். கற்பனைத் திறன், கவிதைவளம், யாப்புநெறி, உவமைத் திறன், வருணனைத் திறன், முதலியவை குறித்து விரிவாக ஆராய்ந்து பாரதிதாசனின் அரிய கருத்துகளை எடுத்து மொழிகிறார்.

"தூவென்று சாதிமதம் கான்று மிழ்ந்தால்
அந்தநொடியே நமது மிடிப றக்கும்
அடுத்தநொடி திராவிடரின் கொடிப றக்கும்" (பக். 44)

- என்று தமிழரின் ஒற்றுமைக்குத் தடையாயுள்ள சாதி மதங்கள் அகற்றப்படவேண்டும் என்ற பாரதிதாசனைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

தமிழ் மண்ணில் பிறந்து - வளர்ந்து - இந்த மண்ணின் பயன்களை நுகர்ந்து - நல்வாழ்வு பெற்று வாழும் மாந்தரில் பலர் தமது

குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டிட வேண்டும் என்னும் உணர்வுமின்றி வாழ்கின்றனர். இதனை எண்ணி வருந்திய புரட்சிக் கவிஞர்,

> **"தமிழரின் தமிழ்க் குழந்தை**
> **தமிழ்ப்பெயர் பெறுதல் வேண்டும்"** (பக். 55)

என்று பாடித் தமிழர்கள் தம் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டிட வேண்டும் என்று ஊட்டிய உணர்வினை இந்நாள் தமிழர்களுக்கும் சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் சுப்பு ரெட்டியார்.

இப்படிப் பாரதிதாசன் அவர்களின் பாடல்கள் பலவற்றிலும் காணப்படும் சிந்தனைத் திறன்களைத் தொகுத்துரைக்கும் பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் அரிய முயற்சி போற்றுதற்குரியதாகும். தமிழ்ச் சமுதாய மக்கள் அனைவரும் கற்றுத் தெளிந்து, சுவைத்து, உணர்ந்து, மகிழத்தக்கது அவர் படைத்துள்ள "பாவேந்தரின் பாட்டுத்திறன்".

அன்புள்ள,

(மு. கருணாநிதி)

NSR100
KAMATCHI AMMAL FELLOWSHIP

MPhil Students in Tamil

AWARDED TO :

செ திவ்யா

(பதிவு எண்: B7811501)

(பேராசிரியரின் ஒரு நூலை மையக்கருத்தாகக் கொண்டு
ஆய்வு செய்த ஆய்வியல் நிறைஞர்)

உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும்,
தேர்ந்தெடுக்கப்பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

ஆய்வேட்டின் தலைப்பு: பேராசிரியர் ந சுப்புரெட்டியார் கண்ட பாரதிதாசன்

பேராசிரியரின் நூல்: *பாவேந்தரின் பாட்டுத்திறன்*

கல்லூரி: தமிழ்த்துறை – உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி மதுரைப் பல்கலைக்கழகம்

நெறியாளர்: முனைவர் பூ பூங்கோதை

வருடம்: 2017 – 2018

www.nasubbureddiar100.in

பாவேந்தரின் பாட்டுத்திறன்

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

“பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் கண்ட பாரதிதாசன்”

மதுரை காமராசர் பல்கலைக்கழக இளநிலை ஆய்வாளர் (எம்.ஃபில்.) பட்டத்தின்
ஒரு பகுதியாக அளிக்கப்படும் ஆய்வேடு

ஆய்வாளர்

செ.திவ்யா பி.ஏ., எம்.ஏ., பிஜிடிசிஏ., சிஜிடி.,

பதிவு எண்:B7811501

மேற்பார்வையாளர்

முனைவர் பூ.பூங்கோதை எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,பி.பிஎட்.,
டிப்.இன் காந்தியன்தாட்.,பிஜிடிசிஏ.,

தமிழ்த்துறை-உயராய்வு மையம்

செந்தமிழ்க் கல்லூரி

மதுரை– 625001.

2017– 2018

ஆய்வு முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞராய், பாரதிக்குப்பின் வாழ்ந்த கவிஞர்களுள் தகுதியும், சிறப்பும் மிக்கவராய்த் திகழ்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். பொருளுக்காக ஆட்களைப் பாடுவோரும், பொழுதுபோக்கிற்காக இயற்கையை பாடுவோரும் மலிந்திருந்த கவிதை உலகில் கொள்கையைப் பாடுபவராகவும், மக்கள் நலவாழ்வை பாடுபவராகவும், சமுதாய மறுமலர்ச்சியைப் பாடுபவராகவும் விளங்கியவர் பாவேந்தர். பாவேந்தரின் படைப்புகள் உலகத்தரம் வாய்ந்தவை.

இத்தகு பெருமைகள் வாய்ந்த புரட்சிக்கவி பாரதிதாசனைப் பற்றி பலரும் பல வகையில் ஆய்வுகளை செய்துள்ளனர். அவர்களுள் பேராசிரியர் டாக்டர்.ந.சுப்புரெட்டியார்அவர்களும் ஒருவர். அவர் ”நல்லதொரு இலக்கியச் சுவைஞர், அறிவியல் அறிவும், கலை அறிவும், கைவரப் பெற்றவர். எல்லையில்லா இலக்கியப் பயிற்சியும், எழுதி குவிக்கும் எழுத்திறனும் கொண்டு இலக்கிய உலகிற்கு பல அரிய, நூல்களை வழங்கியவர்.

இத்தகு இலக்கிய அறிவும், கலையியல் அறிவும், அறிவியல் அறிவும் வாய்க்கப்பெற்ற ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாவேந்தரின் இலக்கியத்திறனையும், அவர் இலக்கியத்தின் நுட்பமான பொருள்களையும் ஆய்ந்து எழுதிய கருத்துக்களை ஆராயும் நோக்கில் இவ்வாய்வானது அமைகிறது.

ஆய்வு நோக்கம்

பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களையும், அவரின் பாடல்களில் பொதிந்துள்ள நுட்பமான கூறுகளையும், பலரும் ஆராய்ந்து எழுதியிருப்பினும், பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாவேந்தரின்

பாடல்களில் பொதிந்துள்ள பல கூறுகளை ஆய்ந்து எழுதிய கருத்துக்களை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வுத்தலைப்பு

இந்த ஆய்வானது **"பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் கண்ட பாரதிதாசன்"** என்ற தலைப்பில் அமைகிறது.

ஆய்வு மூலம்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் எழுதியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களில், அவர் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்களை ஆராய்ந்து எழுதிய "பாவேந்தரின் பாட்டுத்திறன்" என்னும் நூல் இவ்வாய்வின் முதன்மைச் சான்றாகும்.

மேலும் பாவேந்தர் பாரதிதாசன் மற்றும் பேராசிரியர் சுப்புரெட்டியாரின் பிற நூல்கள் துணைமைச் சான்றுகளாகும்.

ஆய்வு எல்லை

பாவேந்தரின் பாடல்களை பற்றி பல ஆய்வு நூல்கள் எழுதப்பட்டிருப்பினும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாவேந்தர் பாடல்களை ஆராய்ந்து எழுதிய நூல்கள் மட்டுமே இவ்வாய்வின் எல்லையாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

பாவேந்தர் பாரதிதாசன் மற்றும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் இருவரின் வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர்கள் எழுதிய நூல்கள் பற்றி விளக்கும் சூழலில் விளக்கவியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

பாவேந்தரின் பாடல்களில் அமைந்துள்ள இலக்கிய நயங்களை விளக்கும் இடத்தும் விளக்கவியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

பாவேந்தரின் பாடல்களில் உள்ள கருத்துக்களை திறனாய்வு கண்ணோட்டத்தில் காணும் இடத்து திறனாய்வு அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

ஆய்வு பகுப்பு

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக மூன்று இயல்களாக பகுக்கப்பட்டுள்ளது.

1. வாழ்க்கைக் குறிப்புக்கள் மற்றும் எழுதிய நூல்கள்
2. பாவேந்தர் பாடல்களில் இலக்கிய நயங்கள்
3. பாவேந்தர் பாடல்களில் திறனாய்வுச் சிந்தனைகள்

என்பனவாகும்.

"வாழ்க்கைக் குறிப்புகள் மற்றும் எழுதிய நூல்கள்" என்னும் முதல் இயலில் பாவேந்தர் பாரதிதாசனின் வாழ்க்கைச் செய்திகள், பேராசிரியர் சுப்புரெட்டியாரின் வாழ்க்கைச் செய்திகள், அவர்கள் எழுதிய நூல்கள், ஆராய்ச்சிகள் விருதுகள் போன்றவை ஆராயப்படுகின்றன.

"பாவேந்தர் பாடல்களில் இலக்கிய நயங்கள்" என்னும் இரண்டாம் இயலில் பாவேந்தரின் கற்பனை ஆற்றல், உவமை, யாப்புநெறி போன்றவை ஆராயப்படுகின்றன.

"பாவேந்தர் பாடல்களில் திறனாய்வுச் சிந்தனைகள்" என்னும் மூன்றாம் இயலில், உணர்ச்சி, படிமங்கள், பாடுபொருள்கள் போன்றவை ஆராயப்படுகின்றன.

ஆய்வு முடிவுரையில் ஆய்வில் கண்ட முடிவுகள் அனைத்தும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

ஆய்வு முடிவுரையை அடுத்து இறுதியாக துணைநூற்பட்டியல் இடம் பெற்றுள்ளது.

இயல் – 1

வாழ்க்கைக் குறிப்புக்கள் மற்றும் எழுதிய நூல்கள்

முன்னுரை

நீர்ப்பரப்பில் மழை சிறு தூறலாக விழும் போது குமிழிகள் தோன்றுவதில்லை.பெருந்துளியாக விரைந்து விழும் போது மட்டுமே அழுத்த மிகுதியால் குமிழிகள் தோன்றுகின்றன.

அதேபோல் மனித வாழ்வும் சாதாரணமாக இருக்கும் பொழுது அனைவராலும் கவனிக்கப்படுவதில்லை. ஒருவரின் வாழ்வில் ஏற்படும் (அவர்கள் ஏற்படுத்தும்), அழுத்தமான நிகழ்வுகள் இவ்வுலகிற்கு அழுத்தமான தாக்கத்தினை ஏற்படுத்தும் பொழுது மட்டுமே ஒருவரின் வாழ்வு அனைவராலும் கவனிக்கப்படுகிறது.

அந்த வகையில் பாவேந்தர் பாரதிதாசன் மற்றும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் இருவரின் வாழ்வில் ஏற்பட்ட அழுத்தமான நிகழ்வுகளும், அவர்கள் ஏற்படுத்திய அழுத்தமான நிகழ்வுகளும் அவர்கள் அனுபவத்தில் எழுந்த நூல்களும் தமிழ் இலக்கிய உலகிற்கும், அறிவுலகிற்கும், அழுத்தமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

பாவேந்தர் பாரதிதாசன் மற்றும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் இருவரின் வாழ்வியல் செய்திகளும் அவர்கள் எழுதிய நூல்களும் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

பாவேந்தர் பாரதிதாசன் வாழ்க்கைக் குறிப்புகள்

பாவேந்தர் பாரதிதாசன் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ஆம் தேதி புதுச்சேரியில் கனகசபை முதலியாருக்கும், இலக்குமி அம்மையாருக்கும் மூன்றாவது மகனாகப் பிறந்தார்.பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் “கனக

சுப்புரத்தினம்“.விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கேற்ப சுப்புரத்தினம் இளமையிலேயே கவி இயற்றும் திறம் பெற்றுத் திகழ்ந்தார்.

பாவேந்தர் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் அவை நிகழ்ந்த ஆண்டுகள்

1899 – பாவேந்தர் ஆசிரியர் திருப்புளிசாமி ஐயாவிடம் தொடக்க கல்வி பயின்றார்.

1907 – புதுவை மகாவித்வான் ஆ.பெரியசாமி அவர்களிடமும் பங்காரு பத்தர் அவர்களிடமும் இலக்கண இலக்கியங்களை கற்றுத் தேர்ந்தார். புதுவை மாநிலக் கல்வே கல்லூரியில் உயர்நிலைக் கல்வி பயின்று பின்னர்த் தமிழ்ப் புலவர் வகுப்பில் சேர்ந்து கல்வி கற்று புலவராகத் தேர்ந்தார்.

1908 – பாவேந்தர் சுப்பிரமணிய பாரதியாரைக் காணும் வாய்ப்பினைப் பெற்றார். பாரதியாரின் புலமையும், எளிமையும் கவிஞரைக் கவர்ந்தன.பாரதி மீது பற்று மிகக் கொண்டு தன் பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

1920 –பழனி அம்மாளை இல்லற துணைவியாக ஏற்றார். இவர்கள் சரசுவதி, கோபதி, வசந்தா, ரமணி எனும் மக்களைப் பெற்றெடுத்தார்கள்.

1929 – பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகள் பாவேந்தரைக் கவர்ந்தன. அதன் மூலம் பெரியாரை தொடர்பு கொண்டார். “சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்“ என்று பெரியார் பாவேந்தர் புகழ்ந்தார்.

1946 – அறிஞர் வாழ்த்து, பாராட்டுக் கவிதைகள், கட்டுரைகள் கொண்ட “புரட்சிக் கவிஞர்“ எனும் தொகுப்பு நூலை முல்லை முத்தையா வெளியிட்டார். அதிலிருந்து பாரதிதாசன் புரட்சிக் கவிஞர் எனப்பட்டார்.

1954 – புதுவை சட்டமன்றத் தேர்தலில் நின்று சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்றத்திற்கு தலைமை வகித்தார்.

1964 – ஏப்ரல் மாதத்தில் திடீரென உடல் நலிவுற்றார் பாவேந்தர் அதன் பின்னர் சென்னை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தமிழன்னை பெற்றெடுத்த தவப்புதழ்வர், பாடிவந்த நிலா 1964–ஆம் ஆண்டு ஏப்ரல் 21–ஆம் நாள் இயற்கை எய்தினார்.

1990 – தமிழக அரசு பாவேந்தரின் நூல்களை நாட்டுடைமை ஆக்கியது. ஆண்டுதோறும் ஏப்ரல் 29–ஆம் நாள் தமிழக அரசு சார்பிலும், புதுவை அரசு சார்பிலும் பாவேந்தர் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது.

பாவேந்தரின் புனைப்பெயர்கள்

- பாரதிதாசன்
- அடுத்த வீட்டுக்காரன்
- சுயமரியாதைக் காரன்
- கிறுக்கன்
- வெறுப்பன்
- கிண்டற்காரன்
- கைகாட்டி
- கண்டெழுதுபவன்
- நாடோடி
- செய்தி அறிவிப்போன்

பாவேந்தர் பாரதிதாசனின் நூல்கள்

1. மயிலம் சுப்ரமணியர் துதியமுது
2. சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்

3. தொண்டர் படைப்பாட்டு
4. கதர் இராட்டினப்பாட்டு
5. தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு
6. சஞ்சீவி பர்வத்தின் சாரல்
7. சுயமரியாதைச் சுடர்
8. புரட்சிக் கவி
9. இசையமுது
10. இருண்ட வீடு
11. பாண்டியன் பரிசு
12. தேனருவி
13. குறிஞ்சித் திட்டு
14. ஏழைகள் சிரிக்கிறார்கள்
15. மானுடம் போற்று
16. தமிழுக்கு அமுதென்று பேர்

உள்ளிட்ட பல நூல்களை உலக தரம் வாய்ந்த நூல்களை பாவேந்தர் எழுதியுள்ளார்.

பாவேந்தரின் இதழ்ப் பணி

பாவேந்தர் உரிமையாளராகவும் ஆசிரியராகவும் இருந்து நடத்திய இதழ்கள் பின்வருமாறு

1. புதுவை முரசு (வார இதழ்) – 1930 முதல் 1931 வரை
2. ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் (மாதாந்திர கவிதை பத்திரிக்கை 1935)
3. குயில் (புத்தகம்) – 1946
4. குயில் (திங்கள் இதழ்) – 1948

5. குயில் (தினசரி) – 1948
6. குயில் (கிழமை இதழ்) – 1958 முதல் 1961 வரைஆசிரியராக பணிபுரிந்தது “முல்லை“

ஆண்மீகத்தில் பாவேந்தர்

பாரதிதாசன் ஆரம்பத்தில் ஆத்திரக்காரராகவே விளங்கினார். இதனால் 1933-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நார்த்திகர் மாநாட்டில் ”நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்” என்று தன்னை பிரகடனப்படுத்திக்கொண்டார். பாரதிதாசனின் முதல் கவிதை தொகுப்பான “எங்கெங்கு காணினும் சக்தியடா“ என்பது அவர் இயற்கையையும், பிறவற்றையும் தெய்வமாக கண்டார் என்பதை உணர்த்துகிறது. இவர் தமிழர் மரபு வழிபட்ட பக்திப் பாவலனாக இருந்து “மயிலம் ஸ்ரீசுப்ரமணியர் துதியமுது“ பாடியுள்ளார். விநாயகர் காப்பு, விநாயகர் துதி, சிவபெருமான் துதி, திருமால் துதி போன்ற வழிபாட்டு பாடல்களை பாடியுள்ளார்.பாரதியிடம் பாவேந்தர் கொண்ட பற்றாலும், ஈர்ப்பாலும் சக்தி வழிபாட்டைச் சார்ந்திருந்தார் என அறிய முடிகின்றது.

அரசியலில் பாவேந்தர்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அரசியலிலும் தீவிர ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்தார்.பாரதியிடம் அவருக்கு ஏற்பட்ட ஈர்ப்பின் காரணமாக அவர் தேசியவாதியாக விளங்கினார்.தேசிய பாடல்களை எழுதினார்.

காந்தியடிகள், நேரு, திலகர் போன்ற தலைவர்கள் புதுவை வந்த போது அவர்களை காணும் வாய்ப்பு பாவேந்தர்க்கு கிடைத்தது.மேலும் பாரதியார், அரவிந்தர், வ.வே.சு.ஐயர் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுடன் பாவேந்தர் நெருங்கி பழகியவர்.

புதுவையில் ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்ற போது அந்த போராட்டத்தில் கலந்து கொண்டார்.அரசியல் காரணங்களுக்காக சிறையும் சென்று வந்தார் பாவேந்தர்.

பாரதியின் மறைவுக்கு பிறகு பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் பாவேந்தரை கவர்ந்தது.1928-ஆம் ஆண்டு முதல் திராவிட கழகத்தில் உறுப்பினராக பாவேந்தர் இருந்தார்.கழகத்தின் கொள்கைகளை பரப்பும் “பகுத்தறிவு இயக்கப் பாவலராக“[3] அவர் விளங்கினார்.**1935**-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் மக்களின் முன்னணி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அப்பொழுது தேர்ந்தெடுக்கபட்ட உறுப்பினர்களில் அவரே வயதில் மூத்தவராகவும் இருந்ததால் சபாநாயகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிறுகதை ஆசிரியர் பாவேந்தர்

பாடல் துறையில் மட்டுமின்றிச் சிறுகதைத் துறையிலும் சிறந்து விளங்கியவர் பாவேந்தர்.தம்முடைய புரட்சிக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்கு சிறுகதை துறையும் அவருக்கு துணை புரிந்தது.

1955-ஆம் ஆண்டில் புதுவை ஞாயிறு நூற்பதிப்பகத்தார் கவிஞரின் சிறுகதைகளைத் தொகுத்து “பாரதிதாசன் கதைகள்“ என்று நூலாக வெளியிட்டனர். 1931-1932-ஆம் ஆண்டுகளில் புதுவை முரசு வார இதழில் வெளிவந்த 13 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது.மூடபழக்கவழக்கங்களைச் சமுதாயத்திலிருந்து ஒழிக்க விரும்பி நகைச்சுவையாக எழுதப்பட்டவையே அவை. அச்சிறுகதைகள் 1930-ஆம் ஆண்டில் “ஏழைகள் சிரிக்கிறார்கள்“ என்ற தலைப்பில் பாரதிதாசன் சிறுகதை தொகுப்பாக வெளிவந்தது.

வாழ்க்கையின் துன்ப துயரங்களைச் சுமக்கின்ற அவலம் குறைவதற்காக ஏழைகள் சிரிக்கிறார்கள், ஆயினும் அவர்கள் அறிவும், உணர்வும் பெற்றெழுந்து விட்டால் என்றும் எழுதியுள்ளார். மூட நம்பிக்கைகளை எண்ணி நகையாடி தம் கதைகள் மூலம் பகுத்தறிவுக் கனல் பாய்ச்சுகிறார் பாவேந்தர்.

செவ்வாய் உலக யாத்திரை, என்ற சிறுகதை பாவேந்தரின் கற்பனை திறனுக்கோர் எடுத்துக்காட்டாகும் பாவேந்தருடைய கதைகள் இரண்டு பக்க அளவே உடைய மிகச் சிறிய கதைகளாகும்.சிரிக்க வைப்பதாகவும், சிந்தனையை தூண்டுவதாகவும் அவை இருக்கின்றன.

நாடக ஆசிரியர் பாவேந்தர்

இளமையில் இருந்தே நாடகத் துறையில் மிகுந்த ஆர்வத்தோடு இருந்தவர் பாவேந்தர்.பள்ளி நாடகங்களில் தலைமை நடிகராகவும் நடித்தார்.

நடிப்புத் துறையில் வல்லவரான பாவேந்தர், பிற்காலத்தில், நாடக நூல்கள் பலவற்றை எழுதினார்.இரணியன் (அல்லது) இணையற்ற வீரன், நல்ல தீர்ப்பு, கற்கண்டு, படித்த பெண்கள், பிசிராந்தையார், சேரதாண்டவம் முதலிய 12 நாடக நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார் பாவேந்தர்.

ஒன்றை நன்றாக விளக்க வேண்டும் என்றால் அதனை நாடகமாக எழுத வேண்டும் என்று பாவேந்தர் தனது “படித்த பெண்கள்“ நாடகத்தின் முன்னுரையில் கூறுகின்றார். அதற்கிணங்க அவர் நாடகங்கள் அமைந்துள்ளன. பாவேந்தர் நாடகங்கள், “சமூக நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், உரைநடை நாடகங்கள், கவிதை நாடகங்கள்“ என நான்கு பிரிவுகளாக உள்ளன.

1. இரணியன் (அல்லது) இணையற்ற வீரன் என்ற நாடகம் 1934-இல் எழுதப்பெற்று நடிக்கப்பெற்றது. 1939-இல் அது நூல் வடிவம் பெற்றது. பகுத்தறிவு இயக்க கொள்கைகளைப் பறைசாற்றுவதாக இந்நாடகம் திகழ்கின்றது.
2. பழந்தமிழ் கூத்தின் சிறப்பை "நல்லதீர்ப்பு" என்ற நாடகம் புலப்படுத்துகிறது.
3. பொருந்தாத் திருமணத்தைச் சாடும் நகைச்சுவை நாடகமே "கற்கண்டு" என்னும் நாடகம் ஆகும்.
4. பெண் கல்வி பெருகுதல் வேண்டும் அவர்கள் ஆண்களுக்கு நிகராக வாழ்தல் வேண்டும் என்னும் கருத்தை விளக்குவது படித்த பெண்கள் என்னும் நாடக அமைப்பாகும்.
5. சங்க இலக்கியத்தில் காணப்படும் ஆட்டனத்தி, ஆதிமந்தி ஆகியோரின் காதல் வாழ்வை விளக்கும் காதல் நாடகமே "சேரதாண்டவம்" ஆகும்.

சங்ககாலப் புலவராம் பிசிராந்தையரின் பெருமை கூறும் நாடகமே "பிசிராந்தையார்" ஆகும். இந்த நாடகத்தில் 1976-ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி இந்நாடகத்திற்கு ஐயாயிரம் ரூபாய் பரிசளித்து பாராட்டியது.

பாவேந்தர், புரட்சிக் கவிஞர் போன்ற சிறப்புப் பெயர்களை பாரதிதாசன் பெற்றிருந்த போதிலும், அவரது கவிதைகளுக்குக் கிடைக்காத சாகித்ய அகாதமி விருது, அவரது "பிசிராந்தையார்" நாடகத்திற்கு கிடைத்திருப்பது, அவரின் "நாடக ஆற்றலை" வெளிப்படுத்துகிறது.

திரைப்படத் துறையில் பாவேந்தர்

கருத்துக்களை எளிதில் மக்களிடையே பரப்புவதற்கு திரைப்படமே மிகச் சிறந்த சாதனம் இளமையிலிருந்தே நாடகத் துறையில் அவர்

கொண்டிருந்த ஈடுபாடே, பாவேந்தர் திரையுலகிற்கு செல்வதற்கு காரணமாக அமைந்தது.

1947 முதல் 1953 வரை ஆறு ஆண்டுகள் திரைப்படத் துறையில் தீவிரமாக ஈடுபட்டார் பாவேந்தர்.

பாலாமணி அல்லது பக்காத்திருடன், கவி காளமேகம், சுலோசனா, ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி, பொன்முடி, வளையாபதி ஆகிய திரைப்படங்களுக்கும் பாவேந்தர் திரைக்கரை, உரையாடல், பாடல்கள் எழுதியுள்ளார்.

தாம் உரையாடல் எழுதிய வளையாபதி என்ற திரைப்படத்தில் தம்மைக் கேட்காமல் சில வரிகளை மாற்றி விட்டார்கள் என்பதற்காக, மாடர்ன் தியேட்டர்ஸ் என்னும் திரைப்பட நிறுவனத்துடன் நாற்பாதாயிரம் ரூபாய்க்கு செய்திருந்த ஒப்பந்தத்தை தூக்கி எறிந்தார் பாவேந்தர். இந்நிகழ்ச்சி பாவேந்தர் பணத்தை எப்பொழுதும் ஒரு பொருட்டாக மதித்தில்லை என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறாக திரைப்படத் துறையிலும் தன்னுடைய தடத்தை பதித்துள்ளார் பாவேந்தர்.

பகுத்தறிவு இயக்கக் கவிஞர் பாவேந்தர்

மூடநம்பிக்கைகளை பகுத்தறிவுச் சிந்தனைகள் மூலம் ஒழிக்க எண்ணியவர் பாவேந்தர்.சமூகத்தில் ஆண்டுகளுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த கல்வியினைப் பெண்களுக்கும் வழங்க வேண்டும்.பெண் கல்வி கற்றால் இவ்வுலகம் செம்மையோடும், சிறப்போடும் விளங்கும் என்று கூறினார்.

”புரட்சிக் கவிஞர் அவர்கள் ஒருமுறை புதுவையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிக் கொண்டிருந்தார்.யார் எதைச் சொன்னாலும் பகுத்தறிவு

கொண்டு சிந்தித்து பார்க்க வேண்டும். மூட நம்பிக்கை எதிலும் வைக்கக் கூடாது என்று வற்புறுத்திக் கொண்டிருந்தார், அப்போது பேசிக் கொண்டே இருந்தவர் திடீரென்று கூட்டத்தினரைப் பார்த்து அதோ பின்னால் பாருங்கள்! என்றார்.கூட்டத்திலிருந்த அனைவரும் ஆவலோடு திரும்பிப் பார்த்தார்கள்.பார்ப்பதற்குரிய ஒரு காட்சியும் அங்கு நிகழவில்லை.இப்படித்தான் யார் என்ன சொன்னாலும் அவர்கள் சொல்லுகிறபடியெல்லாம் நடந்து விடுகிறீர்கள்.அதனால் நன்மையா, தீமையா, இலாபமா, நட்டமா என்று சிந்திக்காத ஏமாளிகளாக இருக்கக் கூடாது என்று உணர்த்தினார் பாவேந்தர்."[1]

தொடக்க காலத்தில் பாவேந்தர் பக்தி கவிஞராக இருந்தார்.கடவுள் நம்பிக்கை கொண்ட பாடல்களை எழுதினார். 1926-ஆம் ஆண்டு "மயிலம் சுப்ரமணியர் துதியமுது" வெளிவந்தது.

பின்னர் விடுதலை இயக்கப் போராட்டத்தின் போது பத்தாண்டுகள் பாரதியாருடன் பழகுகிற வாய்ப்பு பாவேந்தர்க்கு கிடைத்தது.அப்பொழுது அவர் தேசிய கவிஞராக மாறினார்.அவரது கவிதை நடையும் எளிமையாக மாறியது.

ந.சுப்புரெட்டியார்

எழுத்தாளரும், பேராசிரியரும் ஆவார்.இவர் எழுதிய 135 நூல்களையும் தமிழக அரசு நாட்டுடைமையாக்கியுள்ளது.

வாழ்க்கைக் குறிப்புகள்

ந.சுப்புரெட்டியார் தமிழ்நாடு, திருச்சி மாவட்டம் பெரகம்பி என்ற ஊரில் எளிய வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்தார். திருச்சி தூசையப்பர் கல்லூரியில் வேதியியல் இளங்கலைப் பட்டமும், சென்னை

பல்கலைக்கழகத்தில், முதுகலைப் பட்டமும், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

நா.சுப்புரெட்டியாரின் 135 நூல்களை தமிழக அரசு நாட்டுடைமையாக்கி உள்ளது. அவற்றுள் சில பின்வருமாறு

1. அகத்திணைக் கொள்கைகள்
2. அணுவின் ஆக்கம்
3. அறிவியல் விருந்து
4. அறிவுக்கு விருந்து
5. குயில்பாட்டு ஒரு மதிப்பீடு
6. சைவமும் தமிழும்
7. நமது உடல்
8. பாவேந்தரின் பாட்டுத்திறன்
9. வாய்மொழியும் வாசகமும்
10. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
11. சோழ நாட்டு திருப்பதிகள்
12. திருக்குறள் தெளிவு
13. அறிவியல் நோக்கில் இலக்கியம், தத்துவம், சமயம்
14. தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை
15. பல்சுவை விருந்து

உள்ளிட்ட நூல்கள் உட்பட 135 நூல்கள் அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் நா.சுப்புரெட்டியாரின் நாட்டுடைமையாக்கப்பட்ட சில நூல்களை பற்றி சில குறிப்புகள் பின்வருமாறு

குயில்பாட்டு ஒரு மதிப்பீடு

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகக் கொள்ளத் தக்கவர் மகாகவி பாரதி.இவர் தன்னுடைய பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தை பாவித்திட எண்ணினார். அந்த மகாகவி நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் மானுடத்தையும் மனிதாபிமானத்தையும் தம்முடைய பாடல்களுக்கு உள்ளடக்கமாக்கி கொண்ட தமிழுக்கு உலக பார்வையை வழங்கினார்.

பாரதியாரின் எல்லா நூல்களுமே சிறந்தவை என்றாலும் குறிப்பிடத்தக்க மூன்று உண்டு.

1. குயில் பாட்டு
2. கண்ணன் பாட்டு
3. பாஞ்சாலி சபதம்

அக்குயில்பாட்டின் அழகில் நெஞ்சை பறிகொடுத்த அறிஞர்கள் பலர் அவர்களில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரும் ஒருவர் குயில் பாட்டின் கொள்கை அழகில் உள்ளம் பறிகொடுத்த சுப்புரெட்யார் குயில்பாட்டின் அழகுகளை எல்லாம் திரட்டி நூலாக்கி தமிழுக்கு தந்துள்ளார்.

பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் பாரதியாரின் நூற்றாண்டு விழா நினைவாக சில நூல்களை எழுதி வெளியிட்டார்.அவற்றுள் குயில்பாட்டு என்ற நூலும் ஒன்று.குயில் பாட்டு ஒரு மதிப்பீடு என்று முடியும் இறுதி இயலும் பேராசிரியர் திறனாய்வு நோக்கில் குயில்பாட்டை அணுகியுள்ளார் என்பதற்கு சான்றாகும்.

”குயில்பாட்டைப் படிப்போர்க்குச் சலிப்பே தோன்றாது.அதுபோலக் குயில்ப் பாட்டைப்பற்றிப் பேராசிரியர் எழுதிய நூலும் சலிப்பைத்

தராது.பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து புதுத்தமிழ் இலக்கியம் வரை பேராசிரியர் பழத்தறிந்தவர் என்பதை அறிய முடிகின்றது."[2]

நினைவுக் குமிழிகள்

"வரலாறு, அறிவியல் வரலாறு, நாட்டு வரலாறு போன்ற தலைப்புகளில் சீரிய கருத்துக்களைக் கூறியுள்ளதோடு பல்வேறு தலைவர்கள், அரசியல் அறிஞர்கள் காந்தி, நேரு, உ.வே.சா., இராஜாஜி போன்றவர்கள் எழுதிய தன் வரலாறு நாட்டிற்கே வழிகாட்டியாக அமைந்தது என்றால் அது மிகையல்ல."[3]

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்களும் தன் வரலாறு "நினைவுக் குமிழிகள் (ஐந்து தொகுதிகள்)" எழுதியுள்ளார். வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

நடந்ததை நடந்தவாறே எழுதுவது தான் வரலாறு. இந்நூலாசிரியர் வாழ்க்கைக்கு இன்றியமையாததான அறிவியல், வேளாண்மை, மருத்துவம், நிலையாமை, அரசியல் போன்ற தலைப்புகளை தேர்ந்தெடுத்து நூல்களை எழுதியுள்ள பேராசிரியர் தன்னுடைய வரலாறையும் சிறப்புற எழுதியுள்ளார்.தன் வரலாறு எழுதுவதற்கு மிகுந்த தன்னம்பிக்கை வேண்டும்.தன்னம்பிக்கையால் முடியாத செயல் என்று எதுவுமில்லை.தன்னம்பிக்கை உடையோர் மனத்திட்பமும் செயல்திறனும் அறிவுத் தெளிவும் உடையவர்களாக விளங்குதல் இயல்பேயாகும். அவ்வகையில் எழுந்த பேராசிரியர் அவர்களில் "நினைவுக் குமிழிகள்" படித்துப் பயன்பெறுதவற்குரியனவாகும்.

அகத்திணைக் கொள்கைகள்

"அகத்திணையாய்வு, பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்க்குப் பழகிய துறையேயாகும். தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை காதல் ஓவியங்கள்,

முத்தொள்ளாயிர விளக்கம் போன்ற இவருடைய முந்தைய நூல்கள் இப்பொருள் சார்ந்தவை எனினும் இந்நூல் அனைத்து அகக்கூறுகளையும் தன்னுள் அடக்கியும், வனப்புற விரித்துக் காட்டும் பெருநூலாகும்.”[4]

இந்நூலைக் கற்பவர் தொன்மை முதல் இன்று வரை எழுந்த அகத்திணைக் கோட்பாட்டின் தொகைகளையும், மறுப்புகளையும் ஒருங்கே கற்க முடியும். நூலின் தலைப்புகள் மரபான வரிசையான கோவைத் தலைப்புகளாக இருந்தாலும் ஒவ்வொரு பகுதியின் கீழும் விரிந்த விளக்கமும், பரந்த மேற்கோளும் முரண் அறுக்கும் சான்றுகளும் என பல தகவல்களை நல்குகின்றன.

இராக்கெட்டுகள்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் பல துறை நூல்களை எழுதியுள்ளார்.அவற்றுள் அறிவியல் துறையும் ஒன்று.அறிவியல் சார்ந்த பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் “இராக்கெட்டுகள்“ என்ற நூலும் ஒன்று.உலக முன்னேற்றத்தில் அறிவியலின் பங்கு மிக மிக இன்றியமையாதது.அதுபல துறைகளாக பரந்து உள்ளது.அவற்றுள் மனிதன் விண்வெளியினை ஊடுருவித் திங்கள் மண்டிலத்தை நோக்கி விரைந்து செல்லும் முயற்சியும் ஒன்றாகும்.இத்துறையில் மேலைநாடுகள் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டு முன்னேறிக் கொண்டு வருகின்றன.

”இவற்றில் “இராக்கெட்டுகளின்“ பங்கு இன்றியமையாதது. இராக்கெட்டு எனினும் “சீறுவானம்“ என்னும் ஒன்றே. சீறுவாண முறையை அடிப்படையாக வைத்துப் பெரிய அளவில் இயக்கப்படும் ஒரு கருவியே இராக்கெட்டு.இஃது எப்படி கண்டுபிடிக்கப்பட்டது?இதன் கதை என்ன?இதனை இயக்குவது எங்ஙனம்?இதன் அமைப்பு என்ன?ஏவுகணைகள் என்றால்

என்ன?இன்ன பிற செய்திகளைச் சுருக்கமாகவும் விளக்குகிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.”[5]

கல்வி உளவியல்

“உளவியல் அண்மைக்காலத்தது சென்ற நூற்றாண்டிலும் அதற்கு முன்பும் மெய்ப்பொருளியலின் ஒரு பகுதியாகக் கருதப் பெற்ற உளவியல் துறை சென்ற நூற்றாண்டில் தான் தனியாகப் பிரிந்தது. “அறிவியல்“ என்ற சிறப்பும் பெற்றது. ஆனால், கல்வி உளவியல் இருபதாம் நூற்றாண்டில் தான் அறிவியல் நிலையை அடைந்தது.”[6]

நமது உடல்

”நமது உடலைப் பற்றி நாம் ஓரளவு அறிந்து கொள்வது இன்றியமையாதது.எல்லோரும் எளிய முறையில் அறிந்து கொள்வதற்கு ஏற்றவாறு தமிழ்மொழியில் உடலைப் பற்றி நூல்கள் இல்லை என்றே கூற வேண்டும். அக்குறையை ஓரளவு போக்கும் வகையில் ந.சுப்புரெட்டியார் அவர்களின் நமது உடல் என்ற நூல் அமைந்துள்ளது.”[7] அறிவியலறிஞர்கள் கண்டறிந்து விளக்கியுள்ள உடலைப் பற்றி எத்தனையோ அறிய செய்திகள் உள்ளன.அவற்றையெல்லாம் அறிந்து கொள்வதற்கு இந்நூல் அடிப்படையை நல்கும்.சாதாரண மக்களுக்கும், பள்ளி மாணாக்கர்களுக்கும் இந்நூலே போதுமானது.

வைணவமும் தமிழும்

“வைணவமும் தமிழும்“ என்ற இந்நூல் மிக எளிய நடையில் வைணவத்தின் கூறுகள் அனைத்தையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

“இந்நூலில் அமைந்துள்ள முதல் இயலில் தொல்காப்பியம் முதல் பற்பல பண்டைத் தமிழ் இலக்கியங்களில் வைணவம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளவை அனைத்தும் ஒருங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. “திருக்குறள் வைணவத்தையே பகருகின்றது” என்று பேராசிரியர் அகச்சான்றுகளுடன் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.”[8]

தந்தை பெரியார் சிந்தனைகள்

”தமிழ் மூதறிஞரும், அறிவியல் இலக்கிய ஆர்வாருமான பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் “தந்தை பெரியார் சிந்தனைகள்“ என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவுகள் நூலாக உருப்பெற்றிருக்கிறது.

இந்நூலில் மொத்தம் 194 தலைப்புகளில் கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் அருமையான பல நூல்களை எழுதியிருக்கிறார் என்றாலும், தந்தை பெரியாரை பற்றிய இந்த நூல் பலவகையிலும் சிறப்பு பெறுகிற நூல் ஆகும்.”[9]

தந்தைப் பெரியாரைப் பற்றி அவரது சிந்தனைகளை குறித்து ஆய்வு செய்வது என்பது கடினமான காரியமாகும்.ஏனெனில் தந்தை பெரியார் இந்த மண்ணில் பல்வேறு வகையான சிந்தனை விதைகளை விதைத்திருக்கிறார். ஆனால் தந்தை பெரியார் இந்த விதைகளை விதைப்பதற்குச் சந்தித்த எதிர்ப்புகள், ஏளனங்கள், ஏசல்கள் இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு எதிர்த்து இக்கருத்துக்களை விதைப்பதற்குரிய வலிமையை தமிழ் மண்ணில் தந்தை பெரியார் மாத்திரமே பெற்றிருந்தார். இதனால் தான் பெரியார் என்று புகழப்பட்டார்.

எனவே தான், தந்தை பெரியாருடைய கருத்துக்களை, சிந்தனைகளை எடுத்து ஆய்வு செய்வதென்பதிலேயே பல சிக்கல்கள் தோன்றுவது இயல்பு.ஆனால் பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் பெரியாரை பற்றி அருமையாக ஆய்வு செய்து இந்நூலினை எழுதியிருக்கிறார்.

”பேராசிரியர் டாக்டர் சுப்புரெட்டியார் அவர்கள் ஆழ்ந்த தமிழறிவு படைத்தவர் விஞ்ஞான நூல்களைக் கற்றவர்.தொன்மை எது, பழமை எது என்று பேதத்தைப் புரிந்தவர்.தத்துவங்கள் சில நேரங்களில் நடைமுறை உண்மைகளோடு மோதுகின்ற பேதத்தை உணர்ந்தவர். பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம், கலை, இலக்கியம், அறிவியல் என்ற பல அழைக்கப்படுகின்ற செயற்பாடுகளின் ஒட்டுமொத்த கலவை தான் மனித வாழ்க்கை என்பதிலே நம்பிக்கை உள்ளவர், இவைகளுக்கிடையே சமரசம் காண வேண்டும் என்று கருதியவர்.

ஆனால் தந்தை பெரியார் மனித வாழ்க்கைக்கு முன்னேற்றத்திற்கு தடை என்று தோன்றுகின்ற எல்லாவற்றையுமே தகர்த்தெரிய வேண்டும் என்று எண்ணுவர்.”[10]

இந்த சிந்தனை முரண்பாடுகளுக்கு இடையே தந்தைப் பெரியார் சிந்தனைகள் பற்றி ஒரு அற்புதமான ஆய்வை, பயனுள்ள ஆய்வை தமிழ் மக்களுக்கு தெரிவிப்பதற்காக பேராசிரியர் சுப்புரெட்டியார் எழுதியதே “தந்தை பெரியார் சிந்தனைகள்“ என்னும் நூல் ஆகும்.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் பெற்ற பட்டங்களும் பதவிகளும்

பேராசிரியார் ந.சுப்புரெட்டியார் அவர்கள் எம்.ஏ.பி.எஸ்.சி.எல்.டி., வித்துவான், பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர்.

- ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப்பள்ளி நிறுவனர், தலைமையாசிரியராகவும், (1941, 1950) இருந்தார்.
- காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவராக (1950–1960) பணியாற்றினார்.
- பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் நிறுவன பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் (1960–1977) வரை பணியாற்றி ஓய்வு பெற்றார்.
- 1978 சனவரி 14–இல் சென்னையில் குடியேறிப் பதினைந்து மாதங்கள் (1978 பிப்ரவரி முதல் – ஜீன் 1979) வரை தமிழ்க்களஞ்சியத்தின் முதன்மை பதிப்பாசிரியராகவும் பணியாற்றினார். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் மூன்று மாதங்கள் மதிப்பியல் பேராசிரியராக, (1989 மே முதல் 1990 அக்டோபர் முடிய 18 திங்கள்) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் – காஞ்சித் தத்துவ மையத்தில் தலைவராகவும் பணியாற்றி 1200 பக்கத்தில் “வைணவச் செல்வம்“ என்ற பெரிய ஆய்வு நூலை உருவாக்கி வழங்கியவர். முதற்பகுதி 1995–இல் 575 பக்கத்தில் வெளியானது. பிறகு இரண்டாம் பகுதி வெளியானது. 1996 பிப்ரவரி முதல் சென்னை பல்கலைக்கழகத் தெற்கு, தென்கிழக்கு ஆகிய நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவனத்தில் மதிப்பியல் இயக்குநராகவும், பணியாற்றியவர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் மதிப்பியல் பேராசிரியராகவும் இருந்தவர்.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் ஆராய்ச்சிகளும் நூல்களும்

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவங்களை ஆய்ந்து டாக்டர் (பிஎச்.டி.,) பட்டம் பெற்றவர்.அந்த ஆய்வு நூல் ஆங்கிலத்தில் 940 பக்கங்களில் திருவேங்கடவன் பல்கலைக்கழக வெளியீடாய் வந்துள்ளது.

எம்.ஃபில்., பிஎச்.டி., மாணாக்கர்களை உருவாக்கியவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டவர்.பெரும்பாலானவை நூல் வடிவம் பெற்றுள்ளன.

ஆசிரியம், கல்வி உளவியல்(5), இலக்கியம்(22), சமயம் தத்துவம்(35), வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு(13), திறனாய்வு (21), அறிவியல் (20), ஆராய்ச்சி (6) என பல நூல்களை எழுதியுள்ளார்.

இவர்தம் அறிவியல் நூல்களுள் மூன்றும், சமய நூல்களுள் நான்கும், தமிழக அரசுப் பரிசுகளையும், அறிவியல் நூல்களுள் ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசினையும் பெற்றுள்ளன.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் பெற்ற விருதுகள்

”இவர்தம் அறிவியல் நூல்களைப் பாராட்டிக் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் “அருங்கலைக்கோன்“ என்ற விருதை (1968)இல் வழங்கியுள்ளது.”

இவர்தம் வைணவ நூல்களைப் பாராட்டிப் பண்ருட்டி வைணவ மாநாடு “ஸ்ரீ சடகோபன் பொன்னடி“ என்ற விருதினை 1987-இல் அளித்துள்ளது.

இவர்தம் தமிழ்ப் பணியைப் பாராட்டித் தமிழக அரசு “திரு.வி.க.“ விருதினையும் 10,000 வெண்பாற் காசுகளையும் 1987-இல் வழங்கியது.

இவர்தம் தமிழ்ப் பணியைப் பாராட்டி மதுரை காமராசர் பல்கலைக்கழகம் “தமிழ்ப் பேரவைச் செம்மல்“ என்ற விருதினை 1991-இல் வழங்கியது.

இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை கல்வி, இலக்கியம், அறிவியல் என்ற மூன்று துறைகளில் இவர்தம் பணியைப்

பாராட்டி சென்னைக் கம்பன் கழகம் “பேராசிரியர் இராதாகிருஷ்ணன்“ விருதினையும் 1000 வெண்பாற்காசுகளையும் 1994-இல் வழங்கியது.

ஆழ்வார்கள் ஆய்வு மையம் இவர்தம் வைணவ வெளியீடுகளைச் சிறப்பிக்கும் முறையில் “ஸ்ரீ இராமாநுஜர்“ விருதினையும், 25,000 வெண்பாற்காசுகளையும் 1996-ஆம் ஆண்டு வழங்கி சிறப்பித்துள்ளது.

இவர்தம் இயற்றமிழ்ப் பணியைப் பாராட்டித் தமிழ் இயல், இசை, நாடக மன்றம் (அரசு) “கலைமாமணி“ என்ற விருதுடன், 3சவரன் தங்கப் பதக்கத்தையும் வழங்கி சிறப்பித்துள்ளது.

இவர்தம் வைணவப் பணியை பாராட்டி தினத்தந்தி “சி.பா.ஆதித்தனார்“ விருதையும் ஒரு இலட்சம் வெண்பொற்காசுகளையும் 2001-இல் வழங்கி சிறப்பித்துள்ளது.

முடிவுரை

பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர் எழுதிய நூல்களையும் நோக்கும் பொழுது அவர் தமிழ் இலக்கிய உலகிலும், தமிழ்ச் சமூகத்திலும் அழிக்க முடியாத தடத்தை பதித்துச் சென்றுள்ளார் என்பது எவராலும் மறுக்கமுடியாத மறைக்க முடியாத உண்மை.

பாவேந்தர் பாரதிதாசன் அளவிற்கு அனைவராலும் அறியப்படாதவராக பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் இருந்தாலும் அவர் எழுதியுள்ள நூல்களையும், அவற்றின் தரத்தையும் பார்க்கும் பொழுது, அவர் தமிழ் இலக்கிய உலகிற்கும், அறிவுலகிற்கும் பல அரிய பொக்கிஷங்களான நூல்களை வழங்கி அளப்பறிய தொண்டாற்றியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. பாவேந்தர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு பக்கம்.27.
2. குயில்பாட்டு ஒரு மதிப்பீடு பக்கம்-10.
3. நினைவுக் குமிழிகள் தொகுதி-2 பக்கம்-12.
4. அகத்திணைக் கொள்கைகள் பக்கம்-7.
5. இராக்கெட்டுகள் – பக்கம்-5.
6. கல்வி உளவியல் பக்கம்-10.
7. நமது உடல் பக்கம்-6.
8. வைணவமும் தமிழும் பக்கம்-9.
9. தந்தை பெரியார் சிந்தனைகள் பக்கம்-7.
10. தந்தை பெரியார் சிந்தனைகள் பக்கம்-8.

இயல் – 2

பாவேந்தர் பாடல்களில் இலக்கிய நயங்கள்

முன்னுரை

நயம் என்ற சொல் “அழகு“ என்று பொருள்படும். இலக்கிய நயம் பாராட்டுதல் என்பது இலக்கியத்தில் அமைந்துள்ள அழகை சுட்டிக் காட்டுதல் ஆகும்.

படிக்க, படிக்க இன்பம் தருவது சிறந்த இலக்கியம் ஆகும்.கற்பனை, சொல்லாட்சி, உவமை ஆகியன இலக்கியத்திற்கு சுவை ஊட்டுவன. அந்த வகையில் மேற்கண்ட இலக்கியச் சுவை ஊட்டும் கூறுகள் பாவேந்தர் பாடல்களில் எவ்வாறு அமைந்து அழகு ஊட்டுகின்றன என்பதை பேராசிரியர் கண்டு எழுதிய கருத்துக்களை ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

சொல்வளம்

சீதையின் அழகை வருணிக்கப் புகுந்த கம்பன் பொன்னின் சோதி, போதின் நாற்றம், தேனின் தீஞ்சுவை என்று ஒவ்வொன்றாகச் சொல்லி மனநிறைவு கொள்ளுகின்றான். இறுதியில் செஞ்சொற்கவியின்பம் என்று சொல்லி மனநிறைவு கொள்கின்றான். ”செஞ்சொற்களால் அமைந்த கவிதையே இன்பத்தைத் தரும்.” ஒலிநயம் அமைந்த சொற்களின் கட்டுக்கோப்பே கவிதையாகும் என்பர் “ஜான்சன்“ என்ற திறனாய்வாளர். “உள்ளத்திலுள்ளவற்றை உணர்ச்சி பொங்கத் தெள்ளத் தெளிந்த சொற்களில் எடுத்துரைப்பது தான் கவிதை என்று உரைப்பர் கவிமணி“.கவிதைப் படைப்புக்கு செஞ்சொற்களே இன்றியமையாதவை. இத்தகைய சொல்வளம் பாவேந்தரிடத்தில் எவ்வாறு சிறந்து அவரது கவிதைகளை சிறப்பிக்கின்றது என்பதை ஆராய்ந்த பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் கருத்துக்கள் பின்வருமாறு

சொற்களின் கலப்பு

சொற்களின் ஆட்சியால் மட்டிலும் சொல்வளம் நிரம்பி விடுவதில்லை.சொற்கள் ஒன்றோடொன்று காதல் மணம் புரிந்து கலந்து வாழும் காட்சியும் இச்சொல்வளத்தில் அடங்கும்.

இவ்வாறாக பாவேந்தர் பாடல்கள் முழுவதும் பல அரிய இனிய செஞ்சொற்றொடர்களை தமது இலக்கியங்கள் முழுவதும் நமக்கு கொடையாக அளித்துள்ளார்.

அவற்றுள் சில பின்வருமாறு,

“கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்,

மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்”[1]

காதலியின் கடைக்கண் பார்வைக்கு காதலர்கள் அடிமை என்பதை மேற்க்கண்ட சொற்களால் கூறுகிறார் பாவேந்தர்.

“கட்டிக் கரும்பு“, “கண்ணாடிப் பாத்திரத்தைக் கல்தரையில் வைப்பது போல்” இவை சஞ்சீவி பர்வதத்தில் வரும் செஞ்சொற்கள்.

”பானல்விழி மங்கை“, “இருட்காட்டை அழித்த நிலா“, “தேனிதழாள்“, “பானல்விழி மங்கை“, “பாளைச் சிரிப்பு“, “காதல் நெருப்பு“, “வேல்விழி“, “அச்சடித்த பதுமை“, “எழுதாத சித்திரம்“. இவை புரட்சிக் கவியில் கண்டவை. “கிளியேந்தல் போலேந்தி“, “கைத்தூண்டிற் சிறுமீன்“, ”தேனடையும் ஈயும் போல்“, “நெய்யாலே மூண்டெழுந்த நெருப்பு“, “வல்லூறு குறிவைத்த புறா“, “கிளி மொழியாள்“, “முப்பழத்தின் சாறுக்கு இணையான மொழியாள்“. இவை பாண்டியன் பரிசில் வரும் செஞ்சொற்றொடர்கள்.

பாவேந்தரின் காதலை மையமாகக் கொண்ட செஞ்சொற்டொர்களால் அமைந்த காதல் பாடல்கள்

"நீர்தேங்கும் செய்யாற்றின் ஓடம், துன்பம்
நினைத்தேங்கும் அன்னத்தை நீலி யைப்பூந்
தார்தாங்கும் தட்டம்போல் தன்பால் தாங்கத்
தடக்கையால் துடுப்பசைய ஓட்டுவார்கள்"[2]

வேலன் அன்னத்தை காதலிக்கின்றான் என்பதை உணர்த்தும் பாண்டியன் பரிசு பாடல். காதலன் காதலியை வர்ணிக்கும் அற்புதப் பாடல் பின்வருமாறு,

"தேனைப்போல மொழியுடையாள் அன்றலர்ந்த
செந்தா மரைமலர்போல் முகத்தாள்; கெண்டை
மீனைப்போல் விழியுடையாள் விட்ட திர்ந்த
மின்னைப் போல் நுண்ணிடையாள்....."

என்று அழகிய சொற்களால் பாடல்களை அமைந்துள்ளார் பாவேந்தர்.

துன்பநிலையை வெளிப்படுத்துவதில் வெளிப்படும் பாவேந்தரின் சொல்வளம்

இடுகாட்டில் பிணத்தின் அழகற்ற நிலை கண்டு, பெண்ணுலகை வெறுத்துரைக்கும் பாடல் பின்வருமாறு;

"பேன்நாறி வீழ்குழலைத் தேனா றென்றும்
மீளைஒழு கும்விழியை நீல மென்றும்
மேல்நாறும் சளிமூக்கை எட்பூ என்றும்
....
கெடும்படியே சொல்லிவைத்தார் புலவர், நேரில்
கிழக்கினையும் மேற்கென்று கிளத்து வார்போல்"[3]

காதலியை வர்ணிக்கும் போது அவளை காதல்ரசம் சொட்ட சொட்ட காதல் நிரம்பி வழியும் சொற்களால் எழுதிய பாவேந்தர், இடுகாட்டில் பிணத்தின் அழகற்ற நிலையை விவரிக்கும் பொழுது உடல் உறுப்புகளின் உவமைத்

தன்மையையும் அழகு நிலையாமையையும் உணர்த்தவும் சிறந்த சொற்களை பயன்படுத்தியுள்ளார்.

உணர்ச்சிக்கேற்ற சொற்கள்

தமிழியகத்தைச் சார்ந்த ஒரு தொண்டர் மேடையின் மீது நின்று கொண்டு உணர்ச்சி மிக்க சொற்பொழிவை நிகழ்த்துகின்றார். அவர் பேசிய பேச்சில் மொழி பற்றிய பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிய பல செய்திகளைப் பாங்குறக் கூறும் பொழுதெல்லாம் அவற்றிற்கு ஏற்றவாறு சொற்களும் ஒலிகளும் வருவதை காண முடியும். அவரே தம் இல்லத்தினுள் சென்று தம் காதலியுடன் கொஞ்சிப் பேசும் பேச்சிலும், தம் குழந்தையுடன் நெகிழ்ந்து பேசும் பேச்சிலும் இனிய சொற்களும், குழைவான சொற்களும், ஒலிகளும் வெளிப்படுவதைக் காண முடியும்.

உணர்ச்சியுடன் பேசும் உரையாடலிலேயே இவை வருவதாயின் உணர்ச்சிக்கு வடிவம் தரக்கூடிய கவிதைகளின் இவை எவ்வளவு இன்றியமையாதவை என்பது பெறப்படும்.

இவ்வாறாக பாவேந்தர் பாடல்களிலும் உணர்ச்சிகள் நிரம்பியுள்ளன.அவர் உணர்ச்சிக்கேற்ற சொற்களை பயன்படுத்துகின்றார்.

சமூக சீர்திருத்தத்தையும், தொழிலாளர் இயக்கத்தையும் ஆதரிக்கும் கவிஞர் பின்வருமாறு எழுகிறார்.

”சாதிமர பேதங்கள் மூடவழக் கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டை யுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம், பின்னர்
ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்.”[4]

பாவேந்தரின் வெறுப்பு மற்றும் சினத்தை வெளிப்படுத்தும் பாடல்கள்

இந்தி எதிர்ப்பு பற்றி பேசும் பாடல்களில் வெறுப்பும் சினமும் பொங்கி வருகிறது.

”இந்திக்குக் காட்டுக
கொதிப்பை வெறுப்பை!
என்நாட்டார் உணரட்டும்
தமக்குள்ள பொறுப்பை!
வந்தவர்க கெல்லாம் நாம்
இடம்தர மாட்டோம்
வறியவரும் போரில்
புறங்காட்ட மாட்டோம்”[5]

என்ற பாடலில் கட்டாய இந்தி கல்வி மற்றும் இந்தித் திணிப்பில் கவிஞருக்கு இருந்த வெறுப்பையும், சினத்தையும் உணர முடியும்.

சொற்களின் ஒலியால் பெறும் பொருள்

”ஒரு சொல்லில் கற்பனையாற்றல் காணப்பொறினும், அல்லது அஃது ஒரு நிகழ்ச்சி அல்லது படத்தை அப்படியே நினைவிற்கு கொண்டு வரினும் அச்சொல் தோன்றுமிடத்தில் கவிதையும் பளிச்சிடும். இத்தகைய சொல் தன்னுடைய ஓசைத்தன்மை, பொருள் விரிக்கும் தன்மை ஆகிய இரண்டால் தன் செயலை ஆற்றுகின்றது.ஒரு சொல்லுக்குள்ள இவ்விரண்டு தன்மைகளும் கவிதையில் தான் தெளிவாக விளங்கும்.இவ்விரண்டு தன்மைகளை மொழியியலாளர் ஓசையாற்றல் என்றும், பொருளாற்றல் என்றும் கூறுவர்.ஓசையளவிலும் சொல் பெரிய செயலை புரிகின்றது.இசையுடன் கவிதையை படிக்கும் பொழுது கவிதை எந்த உணர்ச்சிக்கேற்றவாறு அமைந்திருக்கிறதோ இசையும் அந்த உணர்ச்சிக்

கேற்றவாறு அமைந்திருக்கும்.கவிதையும் அதன் பொருளும் விளங்காவிடினும் அது தக்க ஓசையுடன் படிக்கப்பெற்றால், அஃது இன்ன உணர்ச்சியைக் கொண்டு எழுந்தது என்று கூறிவிட முடியும்."[6]

இவ்வுண்மையை பழந்தமிழா் நன்கு அறிந்திருந்தனா் என்பதைப் பேராசிரியா் பாவுக்கு கூறிய இலக்கணத்தால் அறிய முடியும்.

"பாவென்பது, சேட்புலத்து இருந்த காலத்தும், ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணா்தற்கேதுவாகிப் பரந்து பட்டுச் செல்வதோா் ஓசை"[7] என்று கூறியுள்ளாா்.

பாவேந்தா் பாடல்களில் ஓசையின்பம்

"ஆள நினைப்பவா் யாருக்குமே – நாம்

ஆட்பட்டிருந்த ழிந்த நிலை

தாள முடியாத போா்களினால் – பிற

சமய மதங்களின் வோ்களினால்...

....

செத்தனா் செத்தனா் நமைமிதித்தோா் – இனிச்

சிறும் புலிகள் நாம் வெல்பவா் யாா்?"[8]

என்ற பாடலை இசையுடன் படித்தால் அவை தமிழா்களிடையே வீர உணா்ச்சியை ஏற்படுத்துவது உறுதி.

கவிதை மதிப்புடைய சொற்கள்

கவிதையில் பயின்று வரும் சொற்களைத் தனித்தனியாக எடுத்துப்பாா்க்கும் பொழுது, அவை தரும் பொருள் வேறு, அவை ஏனைய சொற்களுடன் உறவு கொண்டு மனத்தில் பாடும்பொழுது தரும் பொருள்

வேறு. எனவே கவிதையின் முழுக் கருத்தையும் உள்ளங்கொள்ளாமல் சொற்பொருளை மட்டும் ஆராய்தல் பெருந்தவறு. கவிதையில் பயின்றுவரும் சொற்களுக்கென்று தனி ஓசையும் இல்லை, பொருளும் இல்லை. பல சொற்கள் கவிதையில் உறவு கொள்ளும் பொழுது தான் அவை பொருட்சிறப்பைப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக ”தேன்“, “பால்“ என்ற சொற்கள் அனைவரும் அறிந்தவையே. அகர முதலியிலும் இவற்றிற்குப் பொருள் பெற்றிருக்கும். ஆனால் கவிஞன் ஒருவன் இவற்றைத் தன் கவிதையில் கையாளும் பொழுது அவை தமக்கே உரிய பொருளையும் அதற்கு மேல் ஒரு சிறப்பு பொருளையும் காட்டும்,

”உண்டாலே தேன் மலரின் தேன் – இவள்

கண்டாலே தித்திக்கும் தேன்!

வணடால் கெடாத தேன்

வையம் காணாத தேன்

மொண்டால் குறையாத தேன் – நான்

மொய்த்தேன் பேராசை வைத்தேன்!”[9]

காதலுக்குக் காதலியான தேன், பார்க்கும்போதே இனிக்கின்றதாம்.

”குன்றத்துக் கொம்புதேன் முல்லை வாழைப்பழத்தேன்

மன்றத்து மாப்புலவர் செந்தமிழ்த்தேன், என்ற முத்தேன்

உண்டாலேதேன்! இம்மணிமேகலை ஒருத்தி

கண்டாலே தித்திக்கும் தேன்”

குறிஞ்சி நிலத்திலிருந்து கிடைக்கும் கொம்புத்தேன், மருதம், முல்லை நிலத், முல்லை நிலத்திலிருந்து கிடைக்கும் வாழைப்பழத் தேன் இவை வாயிட்டு நுகர்ந்தால் தான் இனிக்கும். ஆனால் மணிமேகலை என்ற அழகியோ கண்டாலே இனிப்பவள்.

மேற்கண்ட பாடல்களின்வரும் தேன் என்ற சொல் அதற்கான பொருளை உணர்த்தி கவிதையில் பல சொற்களுடன் இணைந்து வரும் பொழுது சிறப்பு பொருளையும் உணர்த்துகிறது.

பால் என்ற சொல் கவிதையில் இடம் பெறும் பொழுது அளிக்கும் சிறப்பு பொருள்

ஒரு பால்காரனின் அன்பு ”பால்“ என்ற சொல்லிலும் காட்டப்பெறுகின்றது.

”கண்ணன்பால் மிக அன்பால்

வேலைக் காரி

கையிற்பால் செம்போடு

தெருவிற் சென்றான்,

திண்ணன், பால் வாங்கென்றான்

கரியனும் பால்

....

கலப்பாலே இனிப்பதென்று

கசப்பால் சொன்னாள்”[10]

இதில் “பால்“ என்ற சொல் அடிதோறும் நடனமாடி ஓர் ஆடலணங்கு வண்ண ஒளியில் தென்படுவது போல் பல்வேறு பொருள்களை தந்து படிப்போரை மகிழ்விக்கின்றது.

இன்னும் கவிஞர் காதலன் ஒருவன் பேச்சாக

”பாடல் அவள்; நான் நல்லுரை“

“வளவயல் நான்; அவள் சம்பாநடவு“

வாழியினால் எழுதினாள் ஒப்பந்தம்

வெண்ணகையால் இட்டாள் கையெழுத்தும்“[11]

என்று பாவேந்தர் கூறுகிறார்.

”சாதாரண சொற்கள் கூட கவிதையில் இடம்பெறும் பொழுது ஒரு தனிப்பட்ட மதிப்பினை பெற்று விடுகின்றது.

இம்மதிப்புடைய சொற்கள் உள்ளவைதாம் கவிதைகள், அம்மதிப்பு இல்லாதவை செய்யுட்கள்.இந்த மதிப்பை திறாய்வாளர்கள் கவிதை மதிப்பு என்று குறிப்பிடுவர்.இங்ஙனம் சொற்களை கையாளும் முறையே சொல்வளம் அல்லது சொல்லாட்சி என்பது.

சொற்களை கையாள்வதில் தான் கவிஞனின் கவிதை மதிப்பு அடங்கியுள்ளது.அந்த வகையில் கவிஞர் எழுதும் பொழுது கவிதை சிறப்பு தன்மையை பெற்று விடுகின்றது.சொற்கள் சரியாக பொருந்தினால் அதில் பொதிந்துள்ள பொருளும், உணர்ச்சியும் வெளிப்படும்.அனைவரும் புரிந்து கொள்ளவும் முடியும்.”[12]

இந்த வகையில் பாவேந்தரின் சொல்வளம், சொல்லாட்சி மிகச் சிறப்பை அவருடைய கவிதைகளுக்கு நல்குகின்றது.

யாப்புநெறி

ஒலிகள் அளவாலும், தன்மையாலும், முயற்சியாலும் வேறுபட்டு ஒழுங்காக அமைந்து, வந்த அமைப்பே திரும்ப திரும்ப வந்து செவிக்கு இன்பம் பயப்பதை ஒலிநயம் என்பர்.இந்த ஒலிநயம் செயற்கை முறையன்று, அது தேவையின் பொருட்டு இயல்பாக வளர்ந்த ஒன்று.கவிதையில் பயிலும் இந்த ஒலிநயத்தை வளர்த்து வாய்ப்பாடுகளாக்கி ஒரு வகை செயற்கை அமைப்பை தந்தனர் நம் முன்னோர். இந்த வாய்ப்பாடுகள் அமையும் முறையையே “யாப்பு“ என்றும் பெயரிட்டனர். “வரையறுக்கப்பட்ட ஒலிநயமே யாப்பாகும்.“ கவிதையில் சொற்கள் யாப்பு முறைப்படி ஒருவித

வரிசையில் அமையுங்கால் இவை ஒன்றோடொன்று இணங்கி புதிய முறையில் செல்வாக்குப் பெற்றுத் தாம் இருக்கும் இடத்தையொட்டிப் புதுவேத்தையும், புது பொருளையும் பெறுகின்றன.

இந்த யாப்பு முறைகளில் அமைந்த பாடல்களே “வெண்பா, ஆசிரயப்பா, கலிப்பா, வஞ்சிப்பா“ முதலிய பெயர்களைப் பெறுகின்றன. இடைக் காலத்தில் தாழிசை, துறை விருத்தம் என்ற பாவினங்கள் தோன்றி பாக்களில் ஏறி புதுவகைப் பாடல்களின் வளர்ச்சிக்கு வழி வகுத்தன.பிறகாலத்தில் பல புதிய வகைப் பாடல்களும் தோன்றின.

”யாப்பினும் பொருளினும்
வேற்றுமை உடையது”[13]

என்ற நூற்பா அடியின் இலக்கணத்தினால் பேராசிரியர் என்ற உரையாசிரியர் பாவினங்களை அமைத்துள்ளார். இந்த அடியின் புறனடையாக அமைந்தவையே “சிந்து, கும்மி“ முதலிய பிற்காலப் பாடல்கள்.

சங்க காலத்தில் ஆசிரியப்பாக்கள் மிகுதியாக வழங்கின. சங்கம் மருவிய காலத்தில் வெண்பாக்கள் செல்வாக்கு பெற்றன.இடைக்காலத்தில் சந்தப் பாடல்கள் பெருகின. சிந்து, கும்மி பாடல்கள் உருவாகி நிலைபெற்றது பிற்காலத்தில்.இவ்வாறாக ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொரு பா வகைகள் தோன்றி வளர்ந்தன.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒரு வகை பா மிகுதியாக பாடப்பட்டாலும் பிற பாடல்கள் அறவே பாடப்படாமல் இல்லை.அவையும் பாடப்பட்டன.

இந்த வகையில் பாவேந்தர் (பாக்களுக்கெல்லாம் அரசர்) என்று பாராட்டி புகழப்படும் பாரதிராசன் தன்னுடைய பாடல்களில் **"39 வகையான பாக்களை** பயன்படுத்தியுள்ளார்.

"இது டாக்டர் இரா.திருமுகன் ஆய்ந்து கண்ட முடிவு".இது பாவேந்தர் கையாண்ட பாவகைகளை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் நுணுக்கமாக ஆய்ந்துள்ளார். பாவேந்தரின் பாவகைகளை பற்றிய பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் கருத்துக்கள் பின்வருமாறு

பாவேந்தர் கையாண்ட வெண்பா வகைகள்

குறள் வெண்பா

வெண்பாவின் பொதுவிலக்கணம் பொருந்தி முதலடி நான்கு சீருடையதாய் இரண்டாவது அடி மூன்று சீருடையதாய் இரண்டடிகளை கொண்டு வருவது குறள் வெண்பா.

நேரிசை வெண்பா

வெண்பாவின் பொதுவிலக்கணம் பொருந்த இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று ஒரு விகற்பத்தாலும் இரு விகற்பத்தாலும் அமைந்து நான்கடி கொண்டதாய் வருவது,

(எ.கா.) "ஆனால்நீ போய்வா அழைச்சிப்போ பையனையும்

ஓநாயில் லாதஇடம் ஓட்டு."

"பொங்கற் புதுநாளில் ஒற்றுமை பொங்கிடுக

தங்கிற்று வாழ்வின் ஒளி"

இவை "வீரத்தாய்" மற்றும் "நாள்மலர்களில்" பாவேந்தர் குறள் வெண்பாவின் இலக்கணப்படி எழுதிய பாடல்கள், யாப்பு இலக்கணப்படி பிறழாது எழுதியுள்ளார்.

”சாதிமதக் கட்டைவண்டி தன்னிலே செல்லுகையில்

கோதையும் சேயும் குளத்தூர்ப்போய் – ஓதியே

அன்புற்றார் வாழ்ந்த அறிவுமண் முடித்தே

இன்புற் றிருந்தார்கள் நன்கு“[14]

இவ்வாறாக நேரிசை வெண்பாவின் இலக்கணம் பொருந்த பாடல்களை இயற்றியுள்ளார்.

இன்னிசை வெண்பா

நேரிசை வெண்பாவைப் போலவே தனிச்சொல் இல்லாமல் அமையுமாயின் அஃது இன்னிசை வெண்பா எனப்படும்.ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தாலும் இது வரப்பெறும்.

(எ.கா.) ”வேடன் தமிழ்க்கண்ணி வீச நமதுளமாம்

மாடப் புறாவை மடக்கிக் கவர்ந்ததற்கு

நன்றி எனவுரைத்தார் மாவரசர் நற்றலைவி

ஒன்றுபா டென்றாள் உவந்து“[15]

பஃறொடைவெண்பா

வெண்பாவின் பொதுவிலக்கணம் பெற்று நேரிசை வெண்பாவைப் போலவோ, இன்னிசை வெண்பாவைப் போலவே அமைந்து நாலடியின் மிக்க பல அடிகளாக வருவது இதுவும் ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தாலும் வரப்பெறும்.

“அன்பு முதிர்ந்தவரே ஐயா விரைவில் நீர்

மன்னர் மகன்விரும்பும் மாங்கனிகள் ஐந்தாறு

....

தித்திக்கும் மாம்பழங்கள் தேடிக் கொணர்ந்தேன் நான்

பத்துக்கு மேலிருக்கும் பாராய் இளங்கோவே”

கலிவெண்பா

“பூக்காரியின் மகளைப் பூங்காவில் நம்பிள்ளை

நோக்கிய நோக்கின் நிலையினை நான் போய்க்கண்டேன்

கீழ்மகளை பிள்ளைமனம் கிட்டிற்றா? அல்லதவள்

....

துடுக்கடைந்தால் என்செய்யக் கூடும்? –வெடுக்கென்று”[16]

பாவேந்தர் நூல்களில் காணப்பெறும் ப:்றொடை வெண்பா என்ற யாப்புக் குறிப்புகள் பாவேந்தரால் குறிக்கப் பெற்றனவா?பிறரால் குறிப்புக் பெற்றனவா?என்பது அறிய கூடவில்லை.ஒரே அமைப்புடைய பாடலுக்கு சில இடங்களில் ப:்றொடை வெண்பா என்ற குறிப்பும் உள்ளன.எனவே இப்பாவகைள் குறித்து இலக்கண நூல்கள் நுவலும் விளக்கங்களை காண்பது அவசியம்.

ப:்றொடை வெண்பாவின் வேரெல்லை “ஏழடி“ என்றும் “பன்னிரண்டடி“ என்றும் “அடிகள் அளவில்லை“ என்றும் மூன்று கருத்துக்கள் இலக்கண ஆசிரியர்களிடம் உள்ளன. ஏழடியும், பன்னிரண்டு அடியும் கொள்வோர் அவற்றினும் மிகுந்து வரும் பாடல்களை கலிவெண்பா என்று கூறுவர்.ஒரு பொருள் பற்றி வருவது கலிவெண்பா என்றும் (எ.கா.) கந்தர் கலிவெண்பா, அல்லாதது ப:்றொடை வெண்பா என்றும் கொண்டனர்.தனிச்சொல் பெறுவதும் பெறாததும் இவற்றுள் வேறுபாடாக கூறப்பெறவில்லை.

இக்கொள்கைகளின் அடிப்படையில் பாவேந்தர் யாப்புக் கொள்கைகளை நோக்கினால் அவை எந்தக் கோட்பாட்டிற்கும் பொருந்துமாறில்லை. பன்னிரண்டு அடிக்கு மேற்பட்ட அவரது பாடல்களில் இரண்டடிக்கொருமுறை

தனிச்சொல் பெற்று வருவனவற்றில் “கலிவெண்பா“ என்றும் குறிப்புகள் உள்ளன. தனிச்சொல் இன்றி வருவனவற்றில் பஃறொடை வெண்பா என்றும் குறிப்புகளை காண முடிகின்றது.

பன்னிரண்டு அடிப்பாடலும் “கலிவெண்பா“ என்று குறிக்கப் பெற்றுள்ளது. பல பாடல்களில் எந்த குறிப்பும் இல்லை தனிச்சொல்லை வைத்துப் பாவேந்தர் இவற்றிடையே வேறுபாடு கொண்டாரா என்பது தெளிவாக கூறமுடியவில்லை.பாவேந்தர் பாடல்களில் 15 விழுக்காடு வெண்பாக்களாக உள்ளன.

பன்னிரண்டடிக்கு மேற்படாத பஃறொடை வெண்பாக்களை பாரதிதாசன் கவிதைகள் – முதற் பகுதி, இரண்டாம் பகுதி ஆகிய நூல்களிலும்; பன்னிரண்டடிக்கு மேற்பட்டவற்றை பாரதிதாசன் கவிதைகள் 1,2,34 குடும்பவிளக்கு, இசையமுது, எதிர்பாராத முத்தம், முல்லைக்காடு ஆகிய நூல்களிலும் காண முடியும்.

இவை பாரதிதாசன் பாடல்களை உற்றுநோக்கி அவர்தம் வெண்பா பாடல்களை ஆய்ந்து பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் கூறியுள்ள கருத்துக்கள்.

ஆசிரியப்பா வகைகள்

பாவேந்தர் தம் பாடல்களில் கையாண்ட ஆசிரியப்பா வகைகள் பின்வருமாறு

நேரிசையாசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பொருந்தி ஈற்றயலடி முச்சீரான் வரப்பெறுவது நேரிசை ஆசிரியப்பாகும்.

”குளக்கரை தன்னில் கொம்பு கொண்டு, பல

விளக்கும் அழகனை வேலன் அணுகி

...

மன்னன் மகனின் துணையாள்

என்றான், வேலன் வணக்கம் என்றான்"[17]

குறிஞ்சி, பன்மணித்திறள், முல்லைக்காடு உள்ளிட்ட பல நூல்களின் இவ்வகைப் பாக்களை பாவேந்தர் பயன்படுத்தியுள்ளார்.

நிலைமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பொருந்த எல்லா அடியும் தம்முள் அளவொத்து நாற்சீராய் வருவது.

(எ.கா.)

"இந்நாள் தமிழில் இருக்கும் எண்களை

அந்நாள் அரபியர், ஆங்கில மக்கள்

எடுத்தாண் டார்கள்! இதனை ஆராய்க!

தமிழில் ஒன்றும் இல்லை என்றும்"[18]

இவ்வகை தேனருவி, ஒரு தாயின் உள்ளம் மகிழ்கின்றது.தமிழுக்கு அமுதென்று பேர் உள்ளிட்ட நூல்களில் பயன்படுத்தியுள்ளார்.

பாவேந்தர் இவ்வகையை குறைவாகவே பயன்படுத்தியுள்ளார். பாவேந்தர் கையாண்ட ஆசிரிய விருத்த வகைகள் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் பார்வையில் பின்வருமாறு,

ஆசிரிய விருத்தம்

அளவொத்த கழிநெடிலடி நான்கினால் வருவது.அளவொத்தல் என்றால் நாலடியில் எந்தச் சீர் எவ்வகைச் சீராக அமைந்துள்ளதோ, அந்தச்சீர் அவ்வகைச் சீராகவே எல்லா அடிகளிலும் வருவது.

அறுசீர் விருத்தம்

பாவேந்தர் மூன்று வகையான விருத்தங்களைப் பயன்படுத்தியுள்ளார்.

1. அரையடிக்கு விளம்+மா+தேமா என வருவது

“இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரிந் திருத்தல் போல
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுனும், அவற்றின் வாழ்வில்........”

இவ்வகைப் பாடல்களைப் பாரதிதாசன் குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, காதல் நினைவுகள், கடற்மேற் குமிழிகள் உள்ளிட்ட நூல்களில் பயன்படுத்தியுள்ளார்.

2. நான்கு காய்+மா+தேமா
3. அரையடிக்கு இரண்டு மா+காய் என வருவது

இவ்வகை அறுசீர் விருத்தங்களை பயன்படுத்தியுள்ளார்.

எழுசீர் விருத்தம்

இவ்வகை பாவேந்தரிடம் மிகக் குறைவாகவே உள்ளது.

விளம்+மா+விளம்+மா+இரண்டு விளம்+மா என வருவது

(எ.கா.)

”எண்ணமும் சொல்லும் இரண்டிலா வாழ்க்கை

எழுதரும் தொழிலியல் அறிவு

உண்மையின் உழைப்பு திண்ணிய பொறுமை

ஒவ்வொரு நாளுமே உலகம்"[19]

இவ்விலக்கணத்தில் சிறிது சிதைந்த எழுசீர் விருத்தங்கள் "பன்மணித்திரள், நாள் மலர்கள், புகழ் மலர்கள்" ஆகிய நூல்களில் காணப்படுகிறது.

எண்சீர் விருத்தம்

பாவேந்தரிடம் இரண்டு வகையான எண்சீர் விருத்தங்களே அதிகமாக காணப்படுகின்றன.

1. அரையடிக்கு இரண்டு காய்+மா+தேமா என வருவது

(எ.கா.)

"சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்

திருவிளக்கில் சிரிக்கின்றாள் நாரெடுத்து

நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்

நாடகத்தைச் செய்கின்றாள், அடடே செந்தோள்"[20]

முல்லைக்காடு, நாள் மலர்கள், புகழ் மலர்கள், கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட நூல்களில் இவ்வகை ஆசிரிய விருத்தக்கங்கள் காணப்படுகின்றன.

1. அரையடிக்கு மூன்று காய்+மா என வருவது

(எ.கா.)

"நாட்டினிலே குடியரசு நாட்டிவிட்டோம் இந்நாள்

நல்லபல சட்டங்கள் அமைந்திருத்தல் வேண்டும்

காட்டோமே சாதிமணம்! கலப்பு மணம் ஒன்றே

நல்வழிக்கு கைகாட்டி! கட்டாயக் கல்வி"[21]

சந்த விருத்தங்கள்

தாள நடைகளுக்கு ஏற்றவாறு அமைந்த விருத்தங்கள் சந்த விருத்தங்கள் எனப்படும்.

“மும்மை, நான்மை, ஐம்மை, எழுமை, ஒன்பான்மை“ என்று தாளநடைகள் ஐந்து வகைப்படும்.

சந்தமற்ற பாக்களுக்கு அடிப்படை அலகு அசை என்றால் சந்தப்பாக்களுக்கு அலகு “சந்த மாத்திரை“ ஆகும்.

சந்த மாத்திரை அமையும் முறை

குறில் – ஒரு மாத்திரை, நெடில் தனித்து வரினும், ஒற்றடுத்து வரினும் –இரண்டு மாத்திரை; அடி, அரை இறுதிகளில் வரும் குறில்கள் இரண்டு மாத்திரை பெறும்.சந்த விருத்தச் சீர்களிடையே மாத்திரைகள் அளவில் ஒற்றுமை காணப்படும்.

எழுசீர்ச் சந்த விருத்தம்

(எ.கா.)

”கடவுள் கடவுள் என்றெ தற்கும்
கதறு கின்ற மனிதர்காள்!
கடவுள் என்ற நாம தேயம்
கதறி டாத நாளிலும்.....”[22]

இதன் ஒவ்வோர் அடியிலும் முதல் ஆறு சீர்கள் மும்மூன்று மாத்திரையும், இறுதிசீர் ஐந்து மாத்திரையும் பெறும்.இதே சீர்மை எல்லா அடிகளிலும் காணப்படும். "தகிட" என நடக்கும் மும்மை நடைத்தாளம் இதற்குரியது.

எண் சீர்ச் சந்த விருத்தம்

மும்மை நடைக்குரிய "தகதாம்திமி" என்ற சந்தம் முன்னும் "தகதிம்" என்ற சந்தம் இறுதியலுமாக வருவது அரையடி. அது இரட்டித்து வருவது ஓரடி. இத்தகைய விருத்தங்கள் "பாரதிதாசன் கவிதைகள்-1" என்ற நூலில் இரண்டு உள்ளன.

(எ.கா.)

"வலியோர்சிலர் எளியோர்தமை
வதையேபுரி குவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையாம் என நினைவா?..............."[23]

பன்னிருசீர்ச் சந்த விருத்தம்

(எ.கா.)

"குடியேறும் ஆரியப் பாதகர்கள் சூழ்ச்சியால்
கொலையுண்ட தமிழர் நெஞ்சும்;
குறுநெறிச் சங்கரன் புத்தநெறி மாற்றிடக்
கொல்வித்த தமிழர்நெஞ்சும்"[24]

இதன் ஓர் அரையடியில் முதல் ஐந்து சீர்களும் ஐந்து மாத்திரை பெற்றும், ஆறாம் சீர் ஏழு மாத்திரை பெற்றும் வரும்.இதுவே மற்றைய அரையடிக்கும் பொருந்தும். இத்தகைய சந்தத்தின் ஒவ்வொரு சீரும் "தகதிகட" என ஐம்மை

நடை நடக்கும். இத்தகைய பாடல்கள் பாரதிதாசனின் பாடல்கள் -1,2 ஆகிய நூல்களில் உள்ளன. அவற்றில் சில சீர்களில் மாத்திரை அமைப்பு செப்பமாக இல்லை. ஐந்து மாத்திரைச் சீர்க்குரிய இடத்தில், 6,7 மாத்திரைச் சீர்கள் வருகின்றன.

தரவுக் கொச்சக் கலிப்பா

கலித்தளை பெற்று நான்கடியான் வருவது இவ்வகைப்பா.கலித்தளைக்கு பதிலாக வெண்டளை பெற்று வருவதும் உண்டு.

(எ.கா.)

”தன்னலத்துக் கப்பால் தனித்தமணி வீட்டினிலே
இன்னார் இனியார் எனயாதும் பாராமல்
பொன்னைப் புதிதாய் வறியோன்கொள் இன்பத்தை
மன்னியருள் சாவே எனைத் தழுவ வாராயோ!”[25]

கட்டளைக் கலித்துறை

இவ்வகை தேவார திவ்வியப்பிரபந்த காலம் முதல் இன்று வரை ஓரளவு செல்வாக்குடன் வளர்ந்து வருவது. அப்பர் தேவாரத்திலும், நாலாயிரப் பனுவலிலும் இது “திருவிருத்தம்“ என்று திருநாமம் பெற்றுள்ளது.

கட்டளை கலித்துறையில் 1,5-ஆம் சீர்களில் மோனை அமைதல் வேண்டும். அவற்றொடு 3-ஆம் சீரிலும் அமைந்தால் ஓசை சிறப்பாக அமையும்.ஆனால், பாவேந்தரின் கட்டளைக் கலித்துறைகளில் 5-ஆம் சீரில் அமையாத அடிகள் பல உள்ளன.ஒரே பாடலில் இரண்டு அடிகளிலும் இவ்வாறுள்ளமையைக் காண முடிகின்றது.

”வாழி மணப்பெண் நகைமுத்து

நல்ல பெண் வாழி!" என்றே

ஆழி முழக்கென யாரு

முழக்க, அடியெடுத்தே

யாழின் நரம்பிசை ஏழும்,

சிலம்பும் சிலம்புஉடன்

தோழி நடத்த நடந்தாள்இல்

நோக்கிஅத் தூமொழியே"[26]

என்ற பாடலில் எல்லா அடிகளிலும் மோனை சரியாக அமைந்துள்ளது.இன்னும் கட்டளைக் கலித்துறையில் ஈற்றடி மூன்றாம் சீர்ச் சொல் பக்குவிட்டு முற்ச்சீரொடு ஒன்றி ஒழுகிய ஓசைத்தாய் வந்தால் சிறக்கும் என்பர் வீரசோழிய உரைகாரர்.

சிந்துக்குத் தந்தை

பாரதிதாசனால் "சிந்துக்கு தந்தை" என பாராட்டபட்டவர் பாரதியார். அதனால் அவர் தான் சிந்துப் பாடல்களை முதன்முதலாக உருவாக்கினார் என்று பொருள் இல்லை.சிந்து வகைகளை சிறப்பாகவும், மிகுதியாகவும் கையாண்டவர் என்பதே இதற்கு பொருள்.

சிந்துகள் இயற்றமிழ் பாக்கள் அல்ல; அவை இசைத்தமிழ்ப் பாக்கள்.சிலப்பதிகாரக் காலத்தில் நாட்டுப்புற இலக்கியமாக அமைந்து மணம் வீசிய சிந்து வடிவங்கள் செவ்விலக்கியங்களில் இடம் பெறத் தொடங்கியது தேவார காலத்தில் தான்.இவை சித்தர் காலத்தில் சிறப்புற வளர்ச்சி பெற்றன.பள்ளு, குறவஞ்சி நாடகங்களில் "நாடகத் தமிழாகி நடை பயின்றன.அண்ணாமலை ரெட்டியார் காலத்தில் வீறு பெற்று விளங்கின.

இவ்வளவுக்கும் பிறகு தான் பாரதியார் இவ்வகைக்குப் பெருவாழ்வு தந்தார்.பாவேந்தர் அதன் புகழ் பரப்பினார்.அவர்தம் பல நூல்களில் இவ்வடிவம் கொஞ்சி விளையாடுகின்றது.

கடுவெளிச்சித்தர் “ஆனந்த களிப்பு“ பாடி இருப்பினும் அவருக்கு பின்னர் வந்த தாயுமான அடிகள் காலத்தில் அவர் பெயராலேயே “தாயுமானவரின் ஆனந்தக் களிப்பு“ என வழங்கியது. முன்னரே காவடிச்சிந்து இருந்தாலும், அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து என்று பெயர் பெற்றது.இதுபோலவே பாரதியாரும் சிந்துக்கு தந்தை என போற்றப்படுகிறார்.

காவடிச்சிந்து

முருகன் கோவிலுக்குத் தோளில் காவடி சுமந்து செல்லும்போது பாடும் பாட்டு காவடிச் சிந்து.ஈடும் எடுப்புமற்ற காவடிச் சிந்துகளை முதல் முதலாகப் பாடியவர் அண்ணாமலை ரெட்டியாரே, பாவேந்தர் காவடிச் சிந்தனைகளைக் காதலித்துப் பல நூல்களிலும் பாடியுள்ளார்.

”பாவேந்தரின் காவடிச் சிந்துகளில் சில தாள நடைகளுக்கு ஏற்றவாரு அவ்வளவு சிறப்பாக அமையவில்லை என்பார் டாக்டர் ரெ.திருமுருகன்.இவை காவடிச் சுமப்போர் பாடுவதற்கு இயற்றப்பட்டவை அல்ல என்று இதற்குக் காரணமும் கூறப்படுகிறது.பாரதியாரின் சிந்தனையிலும் இதே நிலை தான் உள்ளது.”[27]

பாவேந்தரின் “சுப்பிரமணியர் துதியமுது, இசையமுது, தேனருவி, பன்மணித்திரள்“ இவ்வகை சிந்து வகைப் பாடல்களை காண முடியும்.

நொண்டிச் சிந்து

நொண்டி நாடகங்களில் பயன்படுத்தப் பெற்ற சிந்துவகை “நொண்டிச் சிந்து“ எனப் பெயர் பெற்றது. நொண்டி நாடகத்தில் நொண்டி ஒருவனே

கதைமாந்தன ஒரே நடிகன். அவன் பாடும் சந்தச் சீரும் நொண்டி என்ற அவன் பெயருக்கேற்றவாறு “நொண்டிச் சீராக“ தடைபடுவது போல் (விட்டிசைத்தல்) அமைந்திருக்கும்.

நொண்டி நாடகமே ஓர் இசைப் பிரபந்தம்

இதிலுள்ள சிந்துகள் யாவும் பாடுதற்காகவே ஏற்பட்டவை சந்தத்தின் அமைப்பு முதலிலாயினும், ஈற்றிலாயினும் சொற்கட்டுகளின் மூலமாக விளக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சிந்திலும் நொண்டியான சீர் முதல் அடியிலாயினும், இரண்டாம் அடியிலாயினும் அல்லது ஈற்று அடியிலாயினும் காணப்படும்

”திருவு லாகிய வகுதை நகர்வொரு
கருணை வாருதி தருமகு ணநிதிச்
செய்தக் காதியென் றெய்தக் காமனை
யே.......கொண் டாடிடவே”

இது கடவுள் வணக்கப் பாடல்.இதில் நொண்டிச்சீர்கள் தெளிவாகக் காட்டப் பெற்றுள்ளன.நடிப்பதற்கே என்று எழுந்தமையால் நொண்டிச் சீர்கள் தெளிவாக அமைக்கப் பெற்றுள்ளன.

நாலடிக்கும்மி

(எ.கா.)

”கோயில் என்ன குளத்தில் என்ன
கும்பிடல் யாவும் வெளிவேடம் – என்று
வாயில் உரைத்தொரு நாகரிகம் – இங்கு

வந்து குதித்தது பாரதமே

வாயினில் மந்திரம் ஞானம் வளர்ப்பது

வம்பெனச் சொல்லடி பாரதமே”[28]

பாவேந்தரின் கும்மிப்பாட்டு என்ற வகையில் அமைந்த பாடல்களை

”கதர் இராட்டினப்பாட்டு, பாரதிதாசன் கவிதைகள்-1, இசையமுது-1, முல்லைக்காடு, தேனருவி, பண்மணித்திரள் உள்ளிட்ட நூல்களில் காண முடியும்.

ஏற்றப்பாட்டு

”கெண்டை விழி யாளே – அடி

கிள்ளை மொழி யாளே

கொண்டை யிலே பூவும் –உன்

கோணை நெடுவாக்கும்”

பெரும்பாலும் மா+தேமா+தேமா என்னும் சிந்தடிகளால் இரண்டடிரண்டு அடிகள் எதுகையோ, மோனையோ பெற்று அமைந்திருக்கும்.இடைச்சீர் ஒரு நிரையசை சீராகவும் வரும்.

ஏற்றத்தால் பயிற்கட்கு நீர் இரைத்த காலத்தில் இரைத்த சால் கணக்கை எண்ணிக் கொண்டே பாடுவது உழவர்களின் வழக்கம் பாவேந்தர் ஏற்றப்பாட்டே இயற்றியுள்ளார்.“பாரதிதாசன் கவிதைகள் – தொகுதி 3இல் இவ்வகை பாடல்களை காண முடியும்.

ஆசிரியத் தாழிசை

மூன்றடி ஓர் எதுகை பெற்று வந்தவனாக நான்கு பாடல்கள் பண்மணித்திரளில் காணப்படுகின்றன.இவை எந்தப் பாவகையிலும்

அடங்கவில்லை ஒருபுடை ஒப்புமை நோக்கி இவற்றை ஆசிரியத் தாழிசையில் அடக்குவது தகும்.

(எ.கா.)

”செந்தமிழ் காத்தான் திருக்குறளில் ஆர்வத்தான்
இந்தி சுமக்கின்றான் தில்லிர் கிளிக்கின்றான்
இந்தாடி தோழி இவனா தமிழ் மறவன்?“[29]

இதுவரை காட்டப்பெற்ற எடுத்துக்காட்டுகளால் பாவேந்தர் பாரதிதாசன் பழைய மரபை அதிகம் போற்றுவராக அறிய முடிகின்றது.பாவேந்தர் முழு நூலை நோக்கினால் அவை பழைய பாவகைகளால் ஆனவை என்பது தெளிவாகும்.

”பாண்டியன் பரிசு“ முழுவதும் எண்சீர் விருத்தங்களால் இயன்றது.
”இருண்ட வீடு” நேரிசையாசிரியப்பாவால் இயன்றது.
”தமிழியக்கம்“ அறுசீர் விருத்தத்தால் ஆனது

“கண்ணகி புரட்சிக் காப்பியத்தில்“ (ஒரு வண்ணப்பா தவிர) அனைத்தும் எண்சீர் விருத்தங்கள்.

”காதலா?கடமையா” என்ற நூல் ஆசிரியப்பாக்களால் அமைந்தது.

”மணிமேகலை வெண்பா” (ஓர் இன்னிசை வெண்பா தவிர) அனைத்தும் நேரிசை வெண்பாக்கள்.

“தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு என்ற சிறிய நூல் மட்டுமே முழுவதும் சிந்துப்பாடல்களால் அமைந்தது.

கதைபொதித் தொடர்நிலைச் செய்யுட்கள் பாரதிதாசன் குறும்பாக்களை எழுதியுள்ளார்.நீண்ட தொடர்நிலைப்பாடல்கள் பல தலைப்புகளில்

கதையொன்றை உள்ளடக்கி தொடர்நிலைச் செய்யுட்களாகவும் கவிஞர் பாடியுள்ளார்.சஞ்சீவி பர்வத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய், போர் மறவன், எதிர்பாராத முத்தம் போன்றவைக் கதைபொதித் தொடர்நிலைச் செய்யுட்கள் ஆகும்.

இவற்றை கவிஞரும், அல்லது அவருடைய இப்படைப்புகளைத் திறனாய்வு செய்த அறிஞர்களும் “காப்பியங்கள்“ என்றே அழைக்கின்றனர். காப்பியம் என்ற சொல் நிலவுடைமைச் சமுதாயத்தின் முக்கிய வாகனத்திற்குரியது.இதில் புனைவுத் தன்மை மிகுதி ஆளுவோரை மக்கள் மனதில் நிலைநிறுத்த இக்காயத் தலைவர்கள் இலட்சியத் தன்மையோடு படைக்கப்பட்டிருகின்றனர். மேலும் தமிழில் சிலப்பதிகாரமோ, மணிமேகலையோ, “காவ்யதர்ஷா“ வின் படி இல்லை. அவற்றிற்குத் தமிழ் தன்மை உண்டு.கம்பராமாயணம் தான் தண்டியின் பெருங்காப்பிய நிலைக்கு உதாரணம்.இராமன் சோழமன்னனின் பிம்பம்.சடையப்ப வள்ளல் போன்ற நிலக்கிழார்களை ஆதரிக்க வேண்டிய கட்டாயம் கம்பனுக்கு உண்டு.அறம், பொருள், இன்பம், வீடு நான்கையும் பெருங்காப்பியம் வற்புறுத்தும்.ஏதேனும் மூன்றைச் சிறுகாப்பியம் கூறும்.

பாரதிதாசன் வாழ்ந்த காலம், முதலாளித்துவம், தன் முகங்காட்டத் தொடங்கிய காலம்.நிலவுடைமைச் சமூகம் சரியத் தொடங்கிய காலம். கருததுலகம் மறைந்து செயல் உலகப் பிரதிநிதிகளான “பாடுபடுவோர்“ இலக்கியத்தில் புகுந்த காலம். இதனைத் தமிழ் நாவல்களில், உரைநடைகளில் தெளிவாக காண முடியும்.பாரதிதாசன், அவ்வுடல் உழைப்பாளிகளைக் கவிதைகளில் முன்னிலைப்படுத்துகிறார்.எனவே காவியம் என்ற நிலவுடைமைச் சார்பான சொல்லாடல், கவிஞரின் மேற்கூறிய படைப்புகளுக்கு பொருந்தாது.

சிலம்பு தொடங்கி சீறாப்புராணம் உரை, மதத்தோடு தொடர்புடையனவாகவே காவியங்கள் தமிழில் உள்ளன.பாரதியார் கூட பாஞ்சாலி சபதத்தில் கடவுள் வணக்கம் சொல்கிறார்.

பாரதிதாசன் தான் கதைப்பொதிப் பாடல்களை மதத்திலிருந்து பிரித்தெடுத்த முதல் கவிஞர் ஆவார்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

இப்படைப்பின் தலைவன் குப்பன், தலைவி வஞ்சி என்னும் பெண்மணி.குப்பனின் காதலி வஞ்சி. வஞ்சிக்குப் பல நாள் ஆசை சஞ்சீவி மலையிலுள்ள இரண்டு மூலிகைகளைக் காதலன் பறித்துத் தர வேண்டும் என்பதும் அதனை அவள் உண்ண வேண்டும் என்பதும் வஞ்சி விடாப்பிடியாக பறித்து தரச் சொல்கிறாள்.அம் மூலிகைகளை தின்றால் இரு பலன்கள் ஏற்படும்.ஒன்றைத் தின்றால் இவ்வுலக மக்கள் பேசுவதை கேட்க முடியும்.மண்ணுலகக் காட்சியை எல்லாம் கண்ணெதிரே ஓரிடத்தில் காணமுடியும்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரல தலைவன் குப்பன், சாதாரண மனிதன், பகுத்தறிவு இல்லாதவன், புராணங்களில் நம்பிக்கை உள்ளவன்.ஆனால் தலைவி வஞ்சி இதற்கு நேர்மாரானவள்.எதையும் யாரையும் ஆராய்ந்து பகுத்தறிவுக்கொண்டு தானும் தெளிந்து ஆணுக்கும் அதனைப் புகட்டுவாள் பெண் என்பதை வஞ்சி மூலம் கவிஞர் காட்டுகின்றார்.

இக்கதை பொருள் பொதித் தொடர்நிலைச் செய்யுளில் கவிஞரின் உணர்ச்சிமிகு மொழியை பிரதிபலிக்கிறது.

கற்பனைத் திறன்

நேரடியாக ஒரு பொருளையோ, ஒரு செயலையோ பார்த்து அதற்கு “எழுத்து வடிவம்“ தருவது எளிது ஆனால் கற்பனையில் நேரடியாக பார்க்காத பொருளையும் நேரடியாக அனுபவியாத செயலையும் மனத்தால் அனுபவித்து அதற்கு வடிவம் கொடுப்பது என்பது எளிதன்று. ஆனால் கவிஞனுக்கு கற்பனை ஆற்றல் இன்றியமையாதது.கற்பனையால் தான் பல கவிதைகள் உருவெடுக்கின்றன.

கவிதையின் பிற பண்புகளுக்கெல்லாம் அடிநிலமாக விளங்குவது அதுவே.அந்த வகையில் பாவேந்தரின் கவிதைகளில் சிறந்து விளங்கும் ஒரு கூறாக கற்பனை விளங்குகின்றது.

இயற்கை பற்றிய பாவேந்தரின் கற்பனை

”தங்கத்தை உருக்கிவிட்ட
வானோடை தன்னிலே ஓர்
செய்கதில் மாணிக்கத்துச்
செழுபழம் முழுவதும் மாலை”[30]

என்பது கவிஞர் காட்டும் மாலைநேரக் குன்றம் குறிஞ்சிநிலக் காட்சியே கொஞ்சு தமிழ் காட்சியாக அமைகின்றது.தங்கத்தை உருக்கி விட்டாற் போல் துலங்கும் வானத்து ஓடையில் செங்கதிர் மூழ்கும் நேரம் மாலைக்காலம்.அது மூழ்கும் இடம் குன்றம் பச்சைமா மலையில் பவளம் போர்ந்தது போன்று மாலைக் கதிர் குன்றத்தை மறைக்கின்றது.

இந்தக் கற்பனை சொல்லோவியம் படிப்போர் மனத்தில் கல்மேல் எழுத்துப் போல் நிலையாக பதிந்து விடுகின்றது.மதியப் பொழுதை கற்பனையால் வடிவம் தந்து வர்ணிக்கிறார் பாவேந்தர்.பெரும்பாலானகவிஞர்கள் சூரியன் உதிக்கும் அழகிய காலை நேரத்தையும், கதிரவன் மறையும் மாலை நேரத்தையும், அமைதி நிலவும்

இரவுப் பொழுதையுமே தங்களுடைய கவிதைகளில் அதிகம் வர்ணித்து எழுதுவர். ஆனால் பாவேந்தர் பாரதிதாசன் அதிகமானோரால் பாடப்படாத மதியப் பொழுதையும் தமது கற்பனைத் திறன் கொண்டு அதற்கு வடிவம் கொடுக்கிறார்.

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோலம் முழுதும் காட்டி விட்டால் காதற்
கொள்கையிலே இவ்வுலகம் சாமோ!...."

இளவேனிற் காலத்தில் வானத்தில் காணப்படும் முழுமதியத்தின் அழகு அவ்வளவு அழகான, இதமான காட்சி அன்று.ஆனால் பாவேந்தரோ, தன்னுடைய கற்பனை ஆற்றலை வெளிக் கொணர்ந்து, அம்மதியக் காட்சிக்கு வடிவம் தந்து அனைவரையும் ரசிக்கச் செய்கிறார்.

கற்பனை வகைகள்

உளவியலாளர் கற்பனையைப் பலவாறாக பாகுபாடு செய்து விளக்குவர்.அவற்றை 1.படைப்புக் கற்பனை 2.இயைபுக் கற்பனை 3.கருத்து விளக்கக் கற்பனை என்று பாகுபாடு செய்வர்.

இவற்றின் அடிப்படையில் பாவேந்தரின் பாடல்களை நோக்குகிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள்.

படைப்புக் கற்பனை

கவிஞன் ஒருவன் தான் பல சமயங்களில் கண்ட பண்புகளை ஒருவிதக் கட்டுப்பாடுமின்றித் தானாகத் தேர்ந்தெடுத்து அவற்றினைத் தொகுத்துப் புதியதொரு வடிவினைப் படைப்பது படைப்புக் கற்பனை என்பர் வின்செஸ்டர்.

இதற்கு எடுத்துக்காட்டாக பாவேந்தர் பாடலில் ஒன்று

பெண்மகவு, குழந்தைக்குப் பெயரிடும் நிகழச்சியைக் கூறுவது (குடும்ப விளக்கு)

"அப்போது நகைமுத் தம்மை
அணிமணி ஆடை பூண்டு
முப்பாங்கு மக்கள் காண".............
....
"கரும்பட்டு மெய் மயிரிபோய்க்
காற்றோடும் ஆடக் கண்டோர்
விரும்பட்டும் என்று சின்ன
மின்நெற்றிக் கீழ் இரண்டு"
....
"தமிழரின் தமிழ்க்கு குழந்தை
தமிழ்ப்பெயர் பெறுதல் வேண்டும்
....
அமிழ்தென்று பெயர் அமைப்போம்
அமிர்தம்மை நாளும் வாழ்க"[31]

இந்த பாவேந்தரின் வரிகள் படைப்புக் கற்பனைக்கு சிறந்த உதாரணம். குழந்தைக்கு பெயர் சூட்டும் நிகழ்ச்சியில், பாத்திர படைப்புகள், தான் முன் கண்ட மனிதர்களையெல்லாம் நினைவில் கொண்டு பாவேந்தர் தன் கற்பனை ஆற்றலால் பாத்திரங்களை படைக்கிறார்.

மேலும் குழந்தையின் அழகையும் பல்வேறு அழகிய பொருளுடன் ஒப்பிட்டு அழகிய குழந்தையாக படிப்போர் மனதில் பதிய வைக்கிறார்.மேலும் தமிழின் இனிமையையும், பெருமையையும் பதிவு செய்கிறார்.

இயைபுக் கற்பனை

உணர்ச்சி, கருத்து, காட்சி, சூழல் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றால் முற்கண்டது போன்றதே இது என்று இரண்டையும் இணைத்து அழகுணர்வோடு ஆக்கிக்காட்டுவது “இயைபுக் கற்பனை“.புற உலகில் காணும் நிகழ்ச்சி அகத்தில் அடங்கிக் கிடக்கும் உணர்ச்சியைத் தூண்டுகின்றது என்றாலும் உள்ளநுபவமே (Inner Experience) அத்தகைய உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்கின்றது.எனவே கற்பனை ஆற்றலைத் தூண்டுவதற்கு உள்ளநுபவமே தூண்டு கோலமாக அமைகிறது என்பது தெளிவாகின்றது. இத்தகைய கற்பனையைத் தான் இயைபுக் கற்பனை என்கிறார் வின்செஸ்டர்

பாவேந்தர் பாடல்களில் இயைபுக் கற்பனை

பாவேந்தர் பாடல்களில் காணப்படும் இயைபுக் கற்பனையை ஆய்கிறார் ந.சுப்புரெட்டியார்.

”என்னகாண் புதுமை! தங்க
இழையுடன் நூலை வைத்துப்
பின்னிய ஆடை, காற்றில்
பெயர்ந்தாடி அசைவ தைப்போல்
நன்னீரில் கதிர் கலந்து............”[32]

கவிஞர் முன்னமே தங்க இழையையும் நூலையும் இணைத்து பிண்ணிய ஆடையையும் அதாவது தங்கத்தால் செய்யப்பட்ட ஆடை காற்றில் அசைவதை கண்டுள்ளார்.இதனை கடல்நீரின் பரப்பில் கதிரவன் ஒளிப்பட்டுத் தெறிக்கும் காட்சியுடன் இயைத்துக் காண்கின்றார்.

இயற்கையில் தாம் கண்ட உண்மைகளைப் பொதுவுடைமை கொள்கையுடன் இணைத்துக் காட்டுவதில் இயைபுக் கற்பனையைக் காண முடிகின்றது.

”மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம் இதைத் தன்
கண்மீதில் பகலில் எல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்பளித்த
விரிவானம் பாராய் தம்பி!”[33]

பகலில் கவிஞர் தொழிலாளர் நிலையைக் காண்கின்றார்.உழைப்பவரெல்லாம் வறியராய் உள்ளனர். இதனைக் கேட்டால் புண்மிதில் அம்பு பாய்ச்சும் செல்வர்களைக் கண்டு சினமாகிய வெப்பத்தால் வானத்தில் விண்மீனாய்க் “கொப்பளித்ததாகக்“ கூறுவதில் இயைபுக் கற்பனையைக் காண முடிகின்றது.

”வந்தே றிகளால் நொந்தழு வார்போல்
கோடைக் கொடுமையில் வாட லானோம்
புரட்சியின் புழுக்கத்தின் பின்
பொதுவுடை மைபோல் புகுந்தது மாரியே!

எங்கிருந்தோ வந்தவர்கள் கோடைபோல் வாட்டுகின்றனர்.கோடைக்குப் பின் மாரி வந்து கோடை வெப்பத்தைத் தணிப்பது போல் பொதுவுடைமை வந்தேறிகளின் கொடுமையை இல்லாமல் செய்து விடுகின்றது. இது அற்புதமான இயைபுக் கற்பனை!

கருத்து விளக்கக் கற்பனை

இயற்கைக் காட்சிகளைக் கண்ணுற்ற கவிஞன் தான் கண்டவற்றை அப்படியே கூறாது அக்காட்சிகளால் தன் உள்ளத்தில் கிளர்த்தெழும் உணர்ச்சிகளை மட்டிலும் சித்தரித்தால் அதனைக் கருத்து விளக்கக் கற்பனை. ஒரு நிகழ்ச்சியிலிருந்தோ (அ) ஒரு பொருளிலிருந்தோ அதன் ஆன்மீக மதிப்பை (அ) உட்குறிப்பை மட்டிலும் கண்டு, அவையடங்கிய பகுதிகளையோ, அன்றி தன்மைகளையோ எடுத்துக் காட்டுவது கருத்து விளக்க கற்பனையாகும் என்பார் வின்செஸ்டர். இத்தகைய கற்பனை கவிதைக்கு உண்மையான உணர்வைத் தருகின்றது.கவிதைத் துறையில் மேதையாக உள்ளவர்கள் தாம் காணும் காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் அப்படியே வருணிப்பதில்லை.வருணிப்பதைவிடப் பொருளுணர்வதில் தான் அவர்களுடைய கவனம் அதிகமாகச் செல்லும். இத்தகைய கற்பனையை பாவேந்தர் பாடல்களில் காண்கிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்

”ஏறி நின்று பாரடா எங்கும்
எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பைப்
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!

....

அறிவை விரிவுசெய் அகண்ட மாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைத்துக் கொள் உன்னை சங்கம மாக்கு!”[34]

இதில் மானிடம் ஒன்று என்றும், தன்னை அதனிடம் ஐக்கியப் படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், உண்ணும் உணவும், உடுத்தும் உடையும் பொதுவென்றும், இப்பரந்த மனப்பான்மையை குள்ள மனிதருக்கும் உணர்த்த வேண்டும் என்றும் கருத்துக்களை கற்பனையாக விளக்குகிறார்.

பொதுவாக கற்பனை மனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றது என்பது உளவியலளாரின் கருத்து. மனத்தின் உரம் அதன் கற்பனை ஆற்றலில் உள்ளது என்றும் அத்தகைய நல்லுணர்வைத் தருவது கவிதை என்றும் “ஆபர்குரோம்பி“ என்ற திறனாய்வாளர் கருதுகிறார்.

இத்தகைய கற்பனை பாவேந்தர் பாடல்களில் மிகுந்து அவர் பாடல்களுக்கு மேலும் அழகு சேர்க்கின்றன.

உவமைத் திறன்

கவிதைக்கு அழகு செய்வன அதில் அமையும் அணிகள்.ஒரு கருத்தை மொட்டையாகச் சொல்வதை விட அழகாகச் சொல்வது கேட்போருக்கு இன்பம் பயக்கும்.

”யாக்கை நிலையற்றது“ என்ற உண்மை எல்லார்க்கும் பொது. இதனைக் கற்றவர், கல்லாதவர், பேதையர், மேதையர் என அனைவரும் அறிவர், மன்பதைக்கே பொதுவான உண்மை இது. இதனை “நீர்மேல் குமிழி“ போன்றது என்று கூறுவர்.

இவ்வாறு ஒரு பொருளை மற்றொரு பொருளினோடு ஒப்பிட்டுக் கூறும் பாங்கில் அமைவதை “உவமையணி“ என்று குறித்தனர் முன்னோர்.

உவமை

கண்முன் காணப்பெறும் பொருள்களை ஒப்பிட்டு பார்க்கும் பண்பு மனிதர்களிடத்தில் இயல்பாகவே அமைந்துள்ளது.மேலோட்டமாக பார்க்கும் பொழுது பொருட்கள் வெவ்வேறு போல் தோன்றினாலும், உண்மையில் அவற்றிடையே ஏதேனும் ஒற்றுமை இல்லாமற் போகாது.

கவிதையில் உவமையாக வரும் பொருள் சிறப்புடையதாகவும், உயர்ந்த கருத்தை தருவதாகவும் இருத்தல் வேண்டும்.எந்த காரணத்தினாலும் உயர்ந்த பொருளை தாழ்ந்த பொருளோடு உவமித் உயர்ந்த பொருளை தாழ்ந்த பொருளோடு உவமித்தல் ஆகாது.மேலும் உவமேயப் பொருள் முழுவதும் ஒத்திருக்க வேண்டும் என்ற நியதியும் இல்திருக்க வேண்டும் என்ற நியதியும் இல்லை.ஏதாவது ஒரு பகுதி மட்டிலும் ஒத்திருந்தால் போதுமானது சிறந்த உவமை பொருளின் தன்மையை தெளிவாக விளங்க வைப்பதுடன் அதனைச் சிறப்பிக்கவும் செய்யும் என்பது உண்மை.

உவமை நன்கு பயன்படுத்தப்பெற்ற பிறகு உவமையின் குறுக்கம் தோன்றத் தொடங்கியது. இக்குறுகத்தையே இலக்கண நூலார் “உவமைத் தொகை“ என வழங்குவர். “போல“, “புரைய“ என்பன போன்ற உவம உறுபுகள் வெளிப்படையாகக் காணபடுங்கால் “உவம விரி“ என்றும் இவை தொக்கி வரும் பொழுது உவமைத் தொகை என்றும் வழங்கப்பெறுகின்றன.

(எ.கா.)

”தாமரை அன்ன முகம்“ என்பது உவமவிரி “தாமரை முகம்“ என்பது உவமைத் தொகை.

உருவகம்

நாளடைவில் உவமப் பொருளையும் உவமிக்க பெறும் பொருளையும் வேறு வேறாக காணாமல் ஒன்றிலேயே மற்றொன்றினைக் காணும் முறை தோன்றியது. “தாமரை முகம்“ என்பது மாறி “முகத் தாமரை“ என்று கூறத் தொடங்கினர்.

மேற்க்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் பாரதிதாசனின் பாடல்களில் அமைந்துள்ள உவமைகளை ஆய்கிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.

பாவேந்தரின் உவமைகள்

பாரதிதாசனின் உவமைகள் தனித்தன்மை வாய்ந்தவை. காலம்காலமாக புலவர்கள் கையாண்ட உவமைகளைச் சற்றுப் புதிய போக்கில் அமைப்பதிலும் இதுகாறும் எவரும் கையாளாத பாங்கில் உவமைகளை புதிய நோக்கில் அமைத்து பாவேந்தர் எழுதுகிறார். பாரதிதாசன் பாடல்களில் அமைந்த சிறந்த உவமைகளில் சில பின்வருமாறு

உதாரன் – அமுதவல்லியின் காதலைத் தோழியர் மூலம் அறிந்த வேந்தன் இந்த உண்மையை மறைந்திருந்து காண முயன்று கன்னிமாடத்தருகே காத்திருக்கிறான் யாரும் அறியாமல்! வந்த உதாரன் அமுதவல்லிக்குக் கைலாகு தந்து, காதல் மொழிகளைப் பேசினதும், காத்திருந்த நங்கை வேல் விழியை வீசினதும், முத்தம் விளைத்த நடைமுறையையும் காண்கின்றான் அரசன் கடுகடுக்கிறான்.

அப்பொழுது அரசன் கொண்ட மனஉளைச்சலை மிகச்சிறந்த உவமைகள் மூலம் எடுத்துரைக்கிறார் பாவேந்தர்.

”மண்டையிலே கொட்டியது ஆயிரந்தேள்
போல மனமுடைந்து
மாளிகைக்குச் சென்றான்”[35]

என்று அரசன் கொண்ட சினத்தை காட்டுகிறார்.ஆயிரந்தேள் ஒரே சமயத்தில் கொட்டி மன உளைச்சல் தருவதுபோல் அரசன் துன்புறுகின்றார் என்கின்றார்.

காதலன்-காதலி உறவு மிகவும் அற்புதமானது.இளமையில் மட்டும் அல்லாது முதுமை காலத்திலும் ஒருவர் மற்றொருவர்பால் கொண்டிருக்கும் கவர்ச்சி இறைவனால் ஏற்படுத்தப்பெற்ற காதல் உணர்ச்சி.படைப்பு நடைபெறுவதற்கு ஆருயிர்களிடம் வழங்கப்பெற்ற அற்புத ஆற்றல் நாயக-நாயகி உறவு ஆழ்வார் அற்புதமாகக் காட்டப்பெற்றிருப்பதைக் காண முடியும்.காதலர்களின் உடல் அழகு தான் முதன்மையானது.கண்ணம்மா என் காதலி-6 என்ற பாட்டில் பாரதி கூறுவார்.

”தோயுமது நீ எனக்கு – தும்பியடி நானுனக்கு

வீணையடி நீ எனக்கு – மேவும் விரல் நானுனக்கு

வெண்ணிலவு நீ எனக்கு – மேவுகடல் நானுனக்கு”[36]

என்றெல்லாம் ஆசை மொழிகளை அடுக்கி மகிழ்கின்றார்.புரட்சிக் கவியில் வரும் உதாரன் – அமுதவல்லியின் உறவும் இத்தகையது தான்.உதாரன் அமுதவல்லிக்கு சித்தரித்த ஆணழகன்.அமுதவல்லி உதாரனுக்கு மடமயில்.

புரட்சிக் கவியில் வரும் சிறந்த உதாரணங்கள்

உதாரன் கொலைக்களத்திற்குக் கொண்டவரப் பெறுகின்றான். ”பேரன்பு கொண்டவரே, பெரியோரே“ என்று தொடங்கி உருக்கமான பேருரை உணர்ச்சி வழியும் உரை (ஜீலியஸ் சீசர் என்ற செகப்பிரியரின் ஆங்கில நாடகத்தில் வரும் அந்தோனியாரின் உரை போன்றது)

”ஆழ்க என்றன் குருதியெலாம் அன்புநாட்டில்

ஆழ்க என்றான்! தலைகுனிந்தான் கத்தியின்கீழ்!”[37]

இவற்றையெல்லாம் அமுதவல்லி கேட்டவண்ணம், பார்த்த வண்ணம் இருக்கிறாள் கண்ணீர் வடித்த வண்ணம்.கவிஞர் கூறுவர்.

”படிகத்தைப் பாலாமி ஷேகம் செய்து

பார்ப்பதுபோல அமுதவல்லி கண்ணீர் வெள்ளம்

அடிசோர்தல் கண்டார்கள் அங்கி ருந்தோர்.

அவள் உடல் பழகத்தால் செய்யப்பெற்றது போல் உள்ளது என்றும் அவள் வடித்த கண்ணீர் உடலின்மீது வழியும் போது பாலால் முழுகிட்டது போல் இருக்கின்றது என்றும் இதனைக் கூடியிருந்தோர் கண்டார்கள் என்றும் அற்புதமான உவமையை கூறுகிறார் பாவேந்தர்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் சிறந்த உவமை

சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் குப்பனும் வள்ளியும் சந்திக்கின்றனர்.முத்தங்கள் பற்றிய காதல் உரையாடல் நடைபெறுகின்றது.முத்தத்தை எதிர்பார்த்து தவிக்கும் குப்பன் “அவளை அநுமன் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கியதைப் போல பறந்தான் பாங்கியை தூக்கியே! இதனை கவிஞர்,

”கிட்டரிய காதற் கிழத்தி இடும்வேலை

விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ!

கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்

மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்”[38]

என்று காதலி காட்டும் கண்ணின் கடைப்பார்வையில் மயங்கும் காதலனுக்கு மாமலையும் ஓர் கடுகாக தெரியும் என்கின்றார்.குப்பன் வள்ளியைத் தூக்கிக் கொண்டு விட்டெறிந்த கல்லைப் போல் மலையின் உச்சியை நோக்கி பாய்கின்றான்.விட்டெறியும் கல்லின் வேகம் சுமையுடன் பாய்ந்து செல்லும் குப்பனுக்கு அற்புதமான உவமையாக அமைகிறது.

முடிவுரை

“கவிஞன் என்பவன் சொற்களை கட்டுபவன் அல்லன் சொற்களால் காட்டுபவன்“ என்ற வகையில், படித்த உடனேயே மனத்திற்குள் சென்று அமர்ந்து கொள்ளும் எளிமையான சொற்கள், அறிய கருத்துக்களையும் எளிமையாக எடுத்துரைக்கும் பாங்கு, ஒவ்வொரு செல்லிலும் சந்த இசைநயம் இயல்பாக ஒலிக்கும் திறன், யாப்பமைதி, வளமான கற்பனைகள், பொருத்தமான உவமைகள், சங்க இலக்கிய புலமை போன்ற இலக்கிய நயங்களை கொண்டு பாவேந்தர் பாடல்கள் பகுத்தறிவு, சமூக சீர்திருத்தம் போன்ற கருத்துக்களை சுவையுடன் எடுத்துரைக்கின்றன.

அடிக்குறிப்புகள்

1. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
2. பாண்டியன் பரிசு – இயல் 52.
3. மேலது., இயல் 87.
4. பாரதிதாசனின் கவிதைகள் தொகு. 1
5. வேங்கையே எழுக – பக்கம் 94.
6. பாவேந்தரின் பாட்டுத்திறன் பக்கம் – 70.
7. தொல்-பொருள்.
8. வேங்கையே எழுக – பக்கம் 103.
9. காதல் பாடல்கள் – பக்கம் 39.
10. மேலது., பக்கம் 145.
11. மேலது., பக்கம் 29.
12. பாவேந்தரின் பாட்டுத்திறன் பக்கம். 97.
13. தொல்காப்பியம் பொருள்
14. காதல் பாடல்கள் பக்கம் 58.
15. குடும்ப விளக்கு பக்கம் 79.
16. கடல்மேற் குமிழிகள் – பக்கம் 50.

17. மேலது பக்கம் 40.

18. நாள் மலர்கள் – பக்கம் 62.

19. புகழ் மலர்கள் – ஜி.டி. நாயுடு – 2.

20. அழகின் சிரிப்பு – அழகு 2.

21. கடல்மேற் குமிழிகள் – பக்கம் 38.

22. பா.தா.க. பகுதி 1 பக்கம் 133.

23. மேலது தொகுதி 1 – 172.

24. மேலது இரண்டாம் தொகுதி – பக்கம் 138.

25. தமிழச்சியின் கத்தி – 32.

26. குடும்ப விளக்கு பக்கம் 122.

27. பாவேந்தரின் பாட்டுத்திறன் பக்கம் 99.

28. தேசிய கீதம், நீச நாகரிகம்

29. பன்மணித்திரள் 19.

30. அழகின் சிறப்பு – பக்கம் 14.

31. பா.தா.க. தொகுதி 1

32. குடும்ப விளக்கு பக்கம் 152.

33. அழகின் சிரிப்பு பக்கம் 30.

34. பா.தா.க. தொகுதி 1

35. புரட்சிக்கவி பக்கம் 26.

36. மேலது

37. மேலது

38. சஞ்சீவி பர்வதத்தின் சாரல் – பக்கம் 4.

இயல் – 3

பாவேந்தர் பாடல்களில் திறனாய்வுச் சிந்தனைகள்

முன்னுரை

இலக்கியத்தின் மீது அல்லது இலக்கியம் பற்றி எழுதுவது திறனாய்வு.அந்த இலக்கியத்தை, இலக்கியத்தின் பல்வேறு பண்புகளைத் திறனாய்வு விளக்குகிறது.இலக்கியத்தில் என்ன இருக்கிறது?எப்படி இருக்கிறது?என்று கூறுவதோடு அதனுடைய திறன் அந்த இலக்கியத்தில் மொத்தமாக எவ்வாறு வெளிப்படுகிறது என்பதையும் திறனாய்வு விளக்குகிறது. அந்த வகையில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசனின் இலக்கியங்களை திறனாய்வு கண்ணோட்டத்தில் கண்டு, பாவேந்தரின் பாடல்களை எவ்வாறு மதிப்பீடு செய்கிறார் என்று இவ்வியல் விளக்குகிறது.

திறனாய்வு விளக்கம்

மனத்தாலும் அறிவாலும் அறியப்படும் ஒரு பொருளை அழகுற உணர்த்தும் படைப்பாக்கம் அல்லது கலைத்திறன் என்பது இலக்கியம் எனப்படுகிறது.இத்தகைய இலக்கியம் தன்னகத்தே பல பண்புகளையும், பல

செல்நெறிகளையும், பல கருத்து நிலைகளையும் கொண்டிருக்கிறது.அதனை ஆராயவும், விளக்கவும் திறனாய்வு உதவுகிறது.

“இலக்கியம் என்பது வாழ்க்கையின் விமர்சனம் என்கிறார் மாத்யூ ஆர்னால்டு“.இலக்கியம் வாழ்க்கையை பேசுகிறது எனில், அவ்விலக்கியம் வாழ்க்கையை எவ்வாறு பேசுகிறது என்று திறனாய்வு விளக்குகிறது.

இத்திறனாய்வு பல அணுகு முறைகளையும், வகைகளையும் கொண்டிருக்கிறது.

திறனாய்வு வகைகள்

திறனாய்வு வகைகள் என்பவை திறனாய்வுசெய்யப்படுவதற்கு உரிய வழிமுறைகள் இவை இவை என்று விளக்கும் அடிப்படையில் அமைகின்றன.

உதாரணமாகப் பல இலக்கியங்களிலிருந்து அவற்றின் சில பண்புகளைப் பிழிந்தெடுத்து அடையாளங் காட்டுவது ஒரு வகை குறிப்பிட்ட ஒரு கொள்கை அல்லது ஒரு பண்பு நிலையை அளவுகோலாகக் கொண்டு அதனை பல இலக்கியங்களோடு பொருத்தி பார்த்தல் இன்னொரு வகை.

திறனாய்வு செய்வதற்குரிய வழிமுறை அல்லது செயல்முறையை கூறுவது திறனாய்வின் வகை என்று அறியப்படுகிறது.

திறனாய்வின் வகைகள் பல எனினும், அவற்றுள் மிகவும் அடிப்படையானவை அல்லது முக்கியமானவை பின்வருமாறு,

1. பாராட்டு முறைத் திறனாய்வு
2. விளக்கு முறைத் திறனாய்வு
3. ஒப்பீட்டு முறைத் திறனாய்வு
4. பகுப்பு முறைத் திறனாய்வு

5. முடிபு முறைத் திறனாய்வு
6. உருவவியல் திறனாய்வு

மேற்கண்ட திறனாய்வு கொள்கைகளை அடிப்படையாக கொண்டு ந.சுப்புரெட்டியார் அவர்கள் திறனாய்வு நோக்கில் கண்டு எழுதிய பாவேந்தர் பாடல்கள் பற்றிய கருத்துக்கள் பின்வருமாறு,

உணர்ச்சி (மெய்ப்பாடுகள்)

சுவை எனினும் மெய்ப்பாடு எனினும் ஒன்றே. மெய்ப்பாடு என்பது "வெளிப்படுவது" என்று பொருள்படும். சுவை உணர்ச்சியே விருப்பு வெறுப்பு முதலியவற்றைத் தந்து கண்ணீர் அரும்பல், உடல் சிலித்தல் முதலிய மெய்க்குறிகளுடன் வெளிப்படுவதாதலின், சுவைக்கு "மெய்ப்பாடு" என்ற பெயர் பொருத்தமுடையதாகின்றது.

சுவை – விளக்கம்

இலக்கியங்களில் காணப்படும் உணர்ச்சிகளை ஆராய்வது என்பதும் திறனாய்வின் ஒரு கூறாகும்.

சுவை என்பது அது காணப்படும் பொருளால் காண்போரகத்தின் வருவதோர் விகாரம் என்று கூறுவார் இளம்பூரணார்.இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு என்பன "அறுசுவைகள்".இவை நாவாகிய பொறி வழியே ஒருவாறு உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளாகும்.இவ்வுணர்ச்சிகளைத் தரும் பொருள்கள் முறையே கரும்பு, வேம்பு, பலி, உப்பு, கடுக்காய், மிளகு போன்றவைகள்.கரும்பினை நாவாகிய பொறியால் போன்றவைகள்.கரும்பினை நாவாகிய பொறியால் சுவை உணருமிடத்த இனிப்புச் சுவை தோன்றுகின்றது.அதன் காரணமாக விருப்பு தோன்றுகிறது.இங்ஙனம் வேம்பினைச் சுவைக்கும் போது வெறுப்புத் தோன்றுகிறது.இங்ஙனம் உள்ளத்தில் தோன்றும் விருப்பு, வெறுப்புகளே

உள்ளக் குறிப்புகள் எனப்படுகின்றன.இதன் காரணமாக முகமலர்ச்சி மிகச் சுளிப்பு முதலிய மெய்க்குறிகளைக் கொண்டு பிறர் அறியுமாறு தோன்றுகின்றன.

சுவைகளின் தொகை

தொல்காப்பியர் சுவைகளை நகை, அழுகை, இளிவரல், வியப்பு, அச்சம் பெருமிதம், வெகுளி, உவகை என எட்டுவகையாக வரையறைப்படுத்துகின்றார்.

பாவேந்தர் பாடல்களில் சுவைகள்

வெகுளிச்சுவை

இஃது உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்று நான்கு பற்றிவரும்.பாண்டியன் பரிசில் கதிர்நாட்டின் மீது வேழ நாட்டரசன் படை எடுத்து வருகின்றான்.இரண்டு அரசர்களிடையே கடும்போர் நடைபெறுகின்றது.தன் அண்ணனின் வஞ்சகச் செயலை எண்ணிக் கடுஞ்சினங் கொண்டு அண்ணனைத் தேடிப் போர்க்களம் புகுகின்றாள்.அரசமா தேவி.

”அண்ணன் எங்கே! அன்பிலாக் கொடியன் எங்கே
ஆட்சியினை யேவிரும்பி உடன்பிறந்த
பெண்ணாளை வஞ்சிக்க எண்ணி வந்த
....
நகைப்பாலே நெருப்பாக்கிப் புருவம் ஏற்றி
நாற்புறத்து வாயிலையும் சுற்றி வந்தாள்!”[1]

இப்பாடல் வெகுளிச் சுவையை வெளிப்படுத்துகின்றது.இஃது உறுப்பறையை நிலைக்களன்களாகக் கொண்டுள்ளது.

உவகைச் சுவை

உவகை செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்ற நான்கை நிலைக்களனாகக் கொண்டு பிறக்கும்.தோழியிடம் தன் தலைவனைக் கண்டு அவனுடன் புணர்ந்து பெற்ற மகிழ்ச்சியைக் கூறுகின்றாள் தலைவி.

"பட்டிமகன் போனவாரம்

கடற்கரை ஓரம் – எனைக்

கிட்டிவந்தான் கெஞ்சிநின்றான்

ஒருமணி நேரம்................

கட்டழித்தாள் தொட்டிழுத்தான்

கட்டி அணைத்தான்"[2]

மேற்கண்ட பாடல் உவகைச் சுவையை வெளிப்படுத்துகிறது.

நகைச்சுவை

நகை என்பது சிரிப்பு.நகை தோன்றும் இடங்கள் பல.அது எள்ளல், இளமை, பேதமை, மடன் என்ற நான்கு நிலைக்களன்கள் வழியாக பிறக்கும்.பாண்டியன் பரிசில் நீலியும் அன்னமும் பேசிக் கொண்டிருக்கையில் நரிக்கண்ணன் மகன் பொன்னன் வருகிறான்.தன் காதலை வெளியிடும் வகையில் அன்னத்திடம் உளறிக் கொட்டுகிறான்.

"மணந்துகொண்டால் என்னிடமே இருக்க வேண்டும்.

மரியாதை யாய்நடந்து கொள்ள வேண்டும்

பிணம்போல் எப்போதும் தூங்க வேண்டா

பிச்சைக் காரர்வந்தால் அரிசிபோடு!"[3]

பொன்னப்பன் ஓர் அடி முட்டாள்! அன்னத்தின் மீது காதல் கொள்ளுகின்றான்.அவளோ அவனைச் சீந்தவில்லை.அவனுடைய பேதமையுடைய பேச்சு நகைச்சுவையை விளைவிக்கின்றது.

அச்சச்சுவை

அச்சம் என்பது பயம் அணங்கு, விலங்கு, கள்வர், இறை என்ற நிலைக்களன்கள் வழியாக இச்சுவை பிறக்கும். (அணங்கு-பேய், பூதம்) நரிக்கண்ணனின் வஞ்சகத் திட்டப்படி "எட்டி" என்பான் பூத வேடமிட்டு அதிகாலையில் தென் மலையின் மீதேறி பெருங்கூச்சலிட்டான். விரைவில் ஊரெல்லாம் அச்சம் பரவிவிட்டது.அவரவர் கற்பனைகளை அவிழ்க்கத் தொடங்கினர்.

"அத்தெருவில் அவ்வீட்டில் பூதம் என்றும்
அதுபூதம் இதுபூதம் எனப்பு கன்றும்
தொத்துகின்ற வௌவால்போல் மரத்தின் மீது
தூங்குகின்ற பூனைபோல் பரண்கள் மீதும்

....

முன்னிற்கும் பூதமாய் எங்கும் கண்டே!"[4]

இப்பாடல் அச்சச்சுவையை வெளிப்படுத்துகின்றது.

இளிவரல் சுவை

இளிவரல் என்பது இழிபு அதாவது மானக் குறைவு.இந்தச் சுவை மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்பவற்றின் நிலைக்களன்களாகப் பிறக்கும்.

"சீ என்று பிணம் எறிந்து விரைத் தெழுந்து
சிதையுடலை மறுமுறையும் உற்று நோக்கி
ஏ! இதற்குத் தானா இவ் வழியுடற்கா?
இருள் கண்டால் விழிமூடும்! நோயும் அஞ்சும்"[5]

மேற்கண்ட பாடல் இளிவரல் சுவையை வெளிப்படுத்துகிறது.

தொல்காப்பியர் குறிப்பிடும் மேலும் சில மெய்ப்பாடுகளையும், பாவேந்தர் பாடல்களில் பயின்று வருவதை காணமுடிகிறது.

பாவேந்தர் பாடல்களில் படிமங்கள்

”இயற்கைப் பொருட்கள் இன்பமயமான அமைதி நிலையில் அடங்கிக் கிடக்கின்றன.அவை நம்முடன் பேசுவது கூடத் தம் இன்பத்திற்கு இடையூராகி விடும். அவற்றின் அமைதி நிலையை கலைக்காமலிருப்பதே குலைக்காமலிருப்பதே நமக்கு ஒரு பேறாகும்..அந்த அமைதி நிலையில் நாம் கலந்து கொள்ள வேண்டும்.அங்ஙனம் கலந்து கொள்ளும் இயல்பு உடையவனே கவிஞன்.அவன் இயற்கையோடு பழகும் திறன் வாய்ந்தவன்.இயற்கையை அவன் தழுவும் விதமே தனி.உறங்கும் குழந்தையைத் தாய் அணைவதை நாம் கவனித்திருக்கின்றோம்.குழந்தையை மார்போடு தழுவிக் கொள்வாள்.என்றாலும்.குழந்தையின் உறக்கம் கெடுவதிலை.

அடுத்துக் கணத்தில் அவளும் தன்னை மறந்து விடுவாள்.அவ்விதமே கவிஞனும் இயற்கையை தன் இன்பகரமான அமைதி நிலை கலையாமல் தழுவுகிறான்.தன்னையும் உடனே மறந்து விடுவான்.அந்த இன்பப் பெருக்கில் மிதப்பான்.அதிலிருந்து வெளியே வந்தவுடன் இன்ப வெறி பிடித்தவன் போல் சிலசமயம் பாடுவான்.சில சமயம் ஆடுவான்.இவை எல்லாம் கலைகள் ஆகின்றன.அவன் அனுபவித்த இன்பப் பெருக்கில் ஒன்றிறண்டு திவலைகள் அவன் பாடிய பாட்டிலும் ஆடிய கூத்திலும் இல்லாமல் போகாது. அதைப் பார்த்தே நாம் கலைகள்! என்று கொண்டாடி உள்ளம் பூரிக்கின்றோம்.இதுவே முருகியல் நிலை.இதுவே உலகத்திற்கு மூலமாய் நிற்கும் இன்பப் பெருக்கில் ஒன்றுபட்டு வாழ்வதாகும்.

இதுவே கவிதை பற்றிய, கலை பற்றிய, கவிஞன் பற்றிய பேராசிரியர் நா.சுப்புரெட்டியாரின் கருத்து."[6] இதை அவர் பாரதிதாசன் கவிதைகளில் பொருந்திக் காண்கின்றார்.

பாரதிதாசன் பாடல்களில் இத்தகைய அனுபவ நிலையைக் காணமுடிகின்றது.இயற்கையையும், பிறவற்றையும் அவர் அனுபவித்ததைப் போலவே அவர் பாடல்களின் மூலம் நம்புலன்களின் துணை கொண்டு நாமும் அனுபவிக்க முடியும்.

கவிஞர் தன் அனுபவத்தை தேர்ந்தெடுத்த சொற்களால் உணர்வூட்டி நமக்கு தருகிறான்.படிமங்கள் (Images) சிந்தனை இவற்றின் குறியீடுகளாகச் சொற்கள் பணிபுரிகின்றன. கவிதை படிமங்களின் மூலம் நம் புலன்களை தொடுகின்றன. அதனால் கவிதைகளில் படிமங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

செலுத்தப் பெறும் புலன்களுக்கேற்ப படிமங்கள் வகைப்படுத்தப் பெறுகின்றன.நாம் பெறுவது கட்புலப்படிமங்கள்.இவற்றில் வண்ணப் படிவங்களும், வடிவப் படிமங்களும் அடங்கும். செவிப்புலப் படிமங்கள், சுவைப்புல படிமங்கள், நாற்றப் புலப் படிமங்கள் ஊறு (அ)தொடு புலப் படிமங்கள். இவற்றைத் தவிர இயக்க நிலைப் படிமங்கள், மரபுநிலைப் படிமங்கள் என்பவையும் உள்ளன.

இவை தனியாகவும், ஒன்று இரண்டு பலவுமாக இணைந்தும் கலவைப் படிமங்களாகவும் கவிதையில் அமைகின்றன.மேலும் குறியீடுகளாக அமையும். குறியீடுகளாக அமையும் சொற்கள் "கட்டுண்ட" படிமங்களையும், விடுதலைப் படிமங்களையும் உண்டாக்கிப் படிப்போரிடையே ஒத்துணர்வுத் துலங்கலையும் ஒட்ட உணரும் துலங்களையும் எழுப்புகின்றன. இவற்றால் கவிதைய நுட்பவம் – முருகுணர்ச்சி கொடு முடியை எட்டுகின்றது.இந்தக்

கருத்துக்களை அடிப்படையாக கொண்டு பாரதிதாசன் பாடல்களை ஆராய்கிறார் பேராசிரியர் நா.சுப்புரெட்டியார்.

கட்புலப் படிமங்கள்

விண்ணில் தோன்றும் முழு நிலாவினை நோக்கி இவ்வாறு பாடுகின்றான்.

அழகிய நங்கையொருத்தி தன் உடல் முழுவதையும் நீலவான் ஆடைக்குள் மறைத்துக் கொண்டு முகத்தை மட்டிலும் காட்டுகின்றாள்.அதுவே நிலா.அது கட்புலப் படிமம். இந்தப் பாடலில் இதனைத் தவிர, வானச் சோலையிலே பூத்த தனிப்பூ, சொக்க வெள்ளிப் பாற்குடம், காலை வந்த செம்பரிதி கடலில் முழ்கிக் கலைமாரிக் குளிரடைந்த ஒளிப் பிழம்பு போன்ற ஏனைய கட்புலப் படிமங்களும் ஒருங்கிணைந்து ஓர் அற்புதக் கலவை காட்சியினை நம் மனத்தகத்தில் தோற்றுவித்து அதை பு-ூரிப்படையச் செய்கின்றன.

இன்னும் இதே கவிதையில்

"பழகும் இருட்டினில் நானிருந்தேன் – எதிர்
பால்நில வாயிரம்போல் – அவள்
அழகு வெளிச்சம் அடித்த தென்மேல்
அடியோன் செய்த தொன்று மில்லை."[7]

என்ற பகுதியிலும் கட்புலப் படிமங்கள் காணப்படுகின்றன.பின்வரும் பாடல்களில் நிற, வடிவக் கட்புலப் படிமங்கள் அமைந்துள்ளன.

"ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்

ஆனஉன் மெல்லுடல்"[8]

இவற்றில் நிற படிமங்கள் காணப்படுகின்றன.

பாரதிதாசன் கவிதைகளில் முருகு (அ) அழகு நிரம்புள்ளன.அதற்கு உதாரணமாக பின்வரும் கவிதையினை கூறுகிறார்.

"காலையிளம் பரிதியிலே அவனைக் கண்டேன்
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன் அந்தச்
சோலையிலே மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப்பட்டாள்"[9]

இக்கவிதையில் காலை இளம்பரிதி கடற்பரப்பு, ஒளிப் புனல், சோலை, மலர், மேற்றிசையில் இளகுகின்ற மாணிக்கச் சுடர், ஆல்ஞ்சாலை, கிளியின் கூட்டம் இவற்றில் உள்ள சொல் (அ) தொடர்களால் உணர்த்தப் பெறும் வண்ண வடிவக் கட்புலப் படிமங்களை காண முடிகின்றது.

இரவு காட்சி இனிதாக காட்டப்பெறும் பின்வரும் பாடலில் கட்புலப் படிமங்கள் பொதிந்துள்ளன.

"மேற்றிசைக் கதிர்ப்ப ழத்தை
விருந்துண்டு நீல ஆடை
மாற்றுடை யாய்உ டுத்து
மரகத அணிகள் பூண்"[10]

பேசும் பொற் சித்திரமாக வளரப் போகும் பச்சைக் கிளியின் மேனியழகினைக் காட்டும் பாங்கில் கட்புலப் படிமங்கள் அமைந்துள்ளன.

"எள்ளினஞ் சிறிய பூவை
எடுத்துவைத் திட்ட மூக்கும்

வள்ளச்செந் தாம ரைப்பூ

இதழ்கவிழ்ந் திருந்த வாய்ப்பின்

அள்இரண் டும்சி வப்பு.....”[11]

குழவியின் எள்ளுப்பூ போன்ற மூக்கின் கட்புல வடிவப் படிமங்களிலும் தாமரை இதழ் போன்ற சிவப்பு உதடுகளின் கட்புல வண்ணம் படித்திலும் உள்ளம் பறிபோகின்றது.

செவிப்புல படிமங்கள்

பாவேந்தரின் முருகியில் நோக்கு செவிப்புலப் படிமங்களைப் படைப்பதிலும் செல்லுகின்றது.

“கேளோடும் கிளம்பிவரும் பன்றி – நிலம்

கிண்டுகிழங் கேஎடுத்த தன்றி – மிகு

துளிபடத் தாவுகையில்

ஊளையிடும் குள்ளநரி........”[12]

என்ற பாடற் பகுதியில் நரி ஊளையிடும் நிகழ்ச்சி காட்டப்பெறுகின்றது.இதிலுள்ள செவிப் புலப் படிமத்தால் நரி ஊளையிடும் ஒலி படிப்போர் மனதில் கேட்கின்றது.

கலவை நிலைப் படிமங்கள்

ஒரு சில பாடல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட படிமங்கள் அமைந்து பொலிவூட்டி முருகுணர்ச்சியை மிகுவாக்கின்றன.

”புறப்பட்ட மங்கைதன, புங்கொடி என்பவள்

நிறப்பட் டாடை நெகிழ்தந்தது காற்றில்

பாதச் சிலம்பு பாடிற்று! நிலாமுகம்

சீதளம் சிந்திற்றாம்! செவ்விதழ் பின்னிற்றாம்”[13]

பூங்கொடியின் வருகையைச் சித்தரிக்கும் இவ்வடிகளில் நிறப்பட்டாடையிலும் நிலா முகத்திலும் செவ்விதழ் மின்னுவதிலும் கட்புலப் படிமங்களும் அதன் நெகிழ்ச்சியில் இயக்கப் புலப் படிமமும், சிலம்பு பாடுவதில் செவிப்புலப் படிமமும் முகம் சீதளம் சிந்துவதில் தொடு புலப் படிமமும் அமைந்து பூங்கொடியின் அழகிற்கு பொலிவூட்டுவன காணமுடியும்.

அழகு என்பவளிள் இருப்பிடங்களைக் காட்டும் கவிதை. இது,

“சிறுகுழந்தை வாழியினிலே ஒளியாய் நின்றாள்
திருவிளக்கிற் சிரிக்கின்றாள், நாரெ டுத்து
நறுமலரைத் தொடுமாளின் ஊரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள், அடடே செந்தோட்........”[14]

இதில் கட்புலப் படிமங்களும், இயக்கபுலப் படிமங்களும் அமைந்து இருப்பதை காண முடியும்.

அண்டங்கள் கோடி கோடி அனைத்தையும் தன்னகத்தில் கொண்ட ஒரு பெரும் புறத்தில் கூத்தாடுகின்றது காற்று.அது தென்றலாய் உருவெடுப்பதை அடியிற் காணும் பாடல் பகுதியில் காண முடியும்.

”பொதிகைமலை விட்டெழுந்து சந்தனத்தின்
புதுமணத்தில் தோய்ந்துபூந் தாதுவாரி
நதிதழுவி அருவியின்தோள் உந்தித் தெற்கு
நன்முத்துக் கடலையின் உச்சி தோறும்.”[15]

இப்பாடற் பகுதியில் நாற்றப்புலப் படிவம், தொடு புலப் படிமம் இயக்கப் புலப் படிமம், செவிப் புலப்படிமம், சுவைப் புலப்படிமம் ஆகியவை அமைந்துள்ள நேர்த்தி எண்ணி எண்ணி மகிழதக்கது.

மின் வெட்டுப் போன்ற மணிமொழிப் படிமங்கள்

மேற் கண்ட படிமங்களைத் தவிர பல்வேறு இடங்களில் கவிஞரின் சொற்களிலும், சொற்றொடர்களிலும் மின்வெட்டுக்கள் போன்ற பல்வேறு படிமங்கள் பாங்குற அமைந்திருப்பதையும் கண்டு மகிழ முடியும்.

அவற்றுள் சில பின்வருமாறு, செப்புச் சிலை போல் நிற்றல் (குப்பன்), வாடாத பூ முடித்த வஞ்சி (வள்ளி), நெஞ்சம் மூலிகை இரண்டின் மேல மொய்த்திருத்தல், மூளிகையில் ஆசை மோதிடுதல் அச்சுப்பதுமை (வள்ளி), கிட்டரிய காதற் கிழத்தி இடும் வேலை விட்டெறிந்த கல்லைப் போல் மேலேறிப் போதல், தேன் சுரக்கப் பேசுதல், சாக்குருவி வேதாந்தம், கனிமுத்தம், கடுகளவும் ஆடாமல் கண்ணாடிப் பாத்திரத்தை கல்தரையில் வைத்தலை போல வெல்லத் தமிழ்நாடு, தென்றலில் மெல்லச் சிலிர்க்கும் (சிரிக்கும்) முல்லை, கள்ளியும் பாளை போல் கண்ணீர் விட்டு, மாவின் வடு போன்ற விழி, காலை மலரக் கவிதை மாய்ந்தது. தையற் சடுகுடு பொறி, தணல் நிகர் மாம்பழத்தில் தமிழ் நிகிர் சுவையைக் கண்டான் உள்ளத்தில் கவிதை வைத்தே உயிரினால் எழுப்பினாள். கிளிப் பேச்சுக் கிள் விரிவாழைப் பூவின் கொப்பூழ் கன்னற பிழிவே கனிச்சாறே கண்ணுறங்கு, சேவல் கூவிற்று! வானம் சிரித்தது.இந்தச் சொற்றொடர்களில் பொதிந்திருக்கும் பல்வேறு வகை படிமங்கள் படிப்போர் மனத்தைக் கொள்ளை கொள்கின்றன.

கவிதை அனுபவம்

நம் உடல் தூண்டல்-துலங்கல் என்ற உளவியல் தத்துவப்படி இயங்குகிறது.உள்ளமும் அதற்கேற்பத் துலங்குகிறது.வெளி உலகிலிருந்து தூண்டல்கள் புலன்களைத் தாக்கும் போது அவற்றிற்கேற்பப் புலன்கள் துலங்குகின்றன.அதாவது அப்புலன்கள் அத்தூண்டல்களால் கிளர்ச்சியடைகின்றது.அதனால் ஏற்படும் உணர்ச்சியை மனம்

அனுபவிக்கின்றது.எடுத்துக்காட்டு மல்லிகைப்பூவின் வாசனை.இப்படியே பிற புலன்களின் மூலம் பெறும் தூண்டல்களால் மனம் அந்தந்தப் பொருள்கள் தரும் சுவைகளைப் பெற்று அவற்றில் ஈடுபடுகின்றது.

இவ்வாறு வெளியுலகத் தூண்டல்களால் அடிக்கடி மனம் பெறும் அனுபவம்.பெருமூளையில் பதிவாகி விடுகிறது.உலகை இன்ப மயமாகக் கண்டு உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்கள் கவிஞர்கள்.அதற்கு உள்ளத்தில் கனிவு வேண்டும்.

பாவேந்தரின் பாடல்களில் பாடுபொருள்கள்

கவிதையில் இன்ன இன்ன பொருள்தான் இருக்க வேண்டும்.இன்ன பொருள் தான் கவிதையில் அமைய வேண்டும் என்ற ஒரு நியதி – ஒரு வரையறை இல்லை.

திருக்குறளின் பெருமையைப் பற்றிக் கூறும் மதுரைத் தமிழ் நாகனார் என்ற சங்கப் புலவர்,

“எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்”[16]

என்று கூறியுள்ளார்.“பலவகைப்பட்ட நூல்களாலும் சொல்லப் பெற்ற எல்லாப் பொருள்களும் இந்நூலில் அடங்கியுள்ளன.இதனிடத்தில் இல்லாத யாதொரு பொருளும் எந்நூலகத்தும் இல்லை” என்பது இதன் பொருள்.வள்ளுவர் நூலுக்குச் சொன்ன கருத்தே கவிதைக்கும் பொருந்தும்.கவிதைக்கு உரிய பொருளாகக் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையும்.

”வண்டி அற்புதப் பொருளாம் – வண்டி
மாடும் அற்புதப் பொருளாம்
வண்டி புட்டும் கயிறும் – என்றன்
மனத்துக் கற்புதம் பொருளாம்.”[17]

என்று எல்லாப் பொருளுமே கவிதை பாடுவதற்கு உரியவனவே என்று கூறியுள்ளார்.பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தர் குண்டுசி முதல் குமரிமுனை வரை எல்லாப் பொருளும் கவிதைக்குரியவை என்று உணர்த்தியுள்ளார்.

இவற்றையெல்லாம் நோக்கினால் உலகில் உள்ள “எறும்பு முதல் எரிமலை“ வரை அனைத்துமே கவிதைக்கு பாடுபொருளாக அமையும்.அந்த வகையில் பாவேந்தர் தம் கவிதைகளில் கடவுள் முதல் பகுத்தறிவுச் சிந்தனைகள் என்று பலவற்றையும் பாடுபொருளாக கொண்டு பாடியுள்ளார்.

கடவுள்

இது பாடுபொருளாகப் பாவேந்தர் கவிதைகளில் எவ்வாறு இடம் பெறுகின்றது என்பதை நோக்குவதற்கு முன் அடிப்படையாகச் சிலவற்றை கருத வேண்டும்.

”மின்சுற்றில், நேர்முனை, எதிர்முனை இயல்பாக இருப்பதைப் போல், இறை வழிபாட்டிலும் இறை மறுப்புக் கொள்கை உருவாக்கியது என்று கருத முடிகிறது.

கடவுள் உண்டு

கடவுள் இல்லை

என்ற இரண்டு வாக்கியங்களை நோக்கினால் இந்த இரண்டிலும், “கடவுள்“ என்பது எழுவாய் “உண்டு“, “இல்லை“ என்பன பயனிலைகள்.இரு கொள்கையினரும் மனத்தில் ஏதோ ஒரு பரம்பொருளை நினைக்கின்றனர். அல்லது “உண்டு“ என்பார் கருத்தில் இடம் பெறுவதாகவும் கொள்ள முடியும். ஆகவே இரண்டு கொள்கையினரின் உள்ளத்திலும் “கடவுள்“ என்ற பொருள் இடம் பெற்றுவிட்டது. இதுவே “கடவுள்“ என்ற ஒரு பொருளையும் நிலைநிறுத்தி விடுகிறது. வாய்கள் மட்டிலும் தத்தமக்கு ஒத்துவரும் அல்லது சிந்தனையில் எழும் பல சான்றுகளைப் பொருத்தமாக அமைத்துக் கொண்டு பேசுகின்றனர்.ஆனால் தனவிலி மனத்தால் இருவரிடமும் கடவுள்

இமயமலைபோல் அசையாது வீற்றிருக்கின்றது.உருவ வழிபாட்டின் பரிணாமங்களின் காரணமாக பல்வேறு மூடக் கொள்கைகள் காளான்கள் போல் உற்பத்தி ஆகின்றன. இவற்றின் விளைவாக “பகுத்தறிவு இயக்கம்“ தோன்றியது. சாதியும், சமயமும் கடவுள் கொள்கையில் புகுந்து மனிதன் மனத்தில் இருந்த அமைதியினைக் குலைக்கத் தொடங்கவே, இத்தகைய குலைவுக்குக் காரணம் கடவுள் கொள்கைதான் என்று கருதலாயினர் பகுத்தறிவுவாதிகள். உலகின் பல பகுதிகளிலும் இத்தகைய எதிர்ப்புக் கொள்கைகள் தலைக்காட்டத் தொடங்கின.”[18]

தமிழகத்தில் தந்தை பெரியார் தலைமையில் “சுயமரியாதை இயக்கம்“ என்ற ஓர் இயக்கம் உருவாகி வானுற வளர்ந்தது. இது பாவேந்தர் உள்ளத்திலும் இடம் பெற்று பல கவிதைகள் தோன்றக் காரணமாயிற்று.

இறை நம்பிக்கையில் மக்கள் உழைப்பில் சிறிதும் நம்பிக்கையின்றிச் சாரற்ற சக்கையாய்க் கிடக்கின்றனரே என்று இறை கொள்கையை சாடுகின்றார் பாவேந்தர்.

கடவுள் நம்பிக்கையை பல இடங்களில் சாடுகின்றார் பாவேந்தர்.

“ஏற்றப்பாட்டு“ என்ற தலைப்பில் இளைஞர்கட்குத் தன்மானக் கொள்கையின் அடிப்படைக் கருத்தாகிய பகுத்தறிவுப் பாதையைக் காட்டுகின்றார்.

“பச்சை விளக்கமும் – உன்
பகுத்தறிவு – தம்பி
பச்சை விளக்காலே – நல்ல
பாதை பிடிதம்பி!
பத்துடனே மூன்று – நீ
பகுத்தறிவைப் போற்று”[19]

என்று பகுத்தறிவை உள்ளத்தில் ஊசியைப் போல் குத்தி புகுத்துகின்றார்.

அதே போன்றே “ஆண்குழந்தைத் தாலாட்டில்“ கடவுள் கொள்கையை சாடுகின்றார்.

“எல்லாம் அவன் செயலே“ என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்
காப்பார் கடவுள் உமை கட்டையில்நீர் போகுமட்டுமே
வேப்பீர் உழைப்பீர் என உணர்க்கும் வீணர்க்கும்”[20]

என்று கடவுள் பெயரைச் சொல்லி தவறு இழைக்கும் வீணர்களை சாடுகின்றார் பாவேந்தர்.

“பெண் குழந்தை தாலாட்டில் கடவுள் நம்பிக்கையை எதிர்த்து எழுதுகிறார் பாவேந்தர்.”

“எல்லாம் கடவுள்செயல் என்று துடைநடுங்கும்
பொல்லாங்கு தீர்ந்தும் புதுமைசெய வந்தவளே
வாயில் இட்டு தொப்பை வளர்க்கும் சதிக்கிடங்கைக்
கோயில் என்று காசுதரும் கொள்கை தவிர்ப்பவளே”[21]

என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் கடவுள் கொள்கையை சாடுகின்றார்.

இவ்வாறாக பகுத்தறிவுச் சிந்தனையை வற்புறுத்தி மூடநம்பிக்கைகள் நிறைந்த கடவுள் கொள்கையை எதிர்த்தும், மறுத்தும் பாவேந்தர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

கடவுள் இல்லை என்னும் பாவேந்தரின் கவிதைகளில் “கடவுள்“ இருக்கிறார். “கடவுள்“ இல்லை தான் ஆனால் அதனை வற்புறுத்த அவர் “கடவுள்“ என்னும் சொல்லை பயன்படுத்தி இருக்கிறார்.

இதன் மூலமாக பாவேந்தரின் கவிதைகளில் “பாடுபொருளாக கடவுள் இருக்கிறார்“ என்று பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் குறிப்பிடுகிறார்.

சமயம்

“கடவுள் இல்லை“ என்று துணிந்து எழுதும் பாவேந்தர் கடவுள் நம்பிக்கை உள்ளோர் அனைவரும் சங்கமிக்கும் இடமாக விளங்கும் “சமயத்தை பற்றி கூறாது விட்டுவிடவில்லை அவர் சமயத்தையும் பல இடங்களில சாடுகின்றார்.“

”ஒரு மதமும் வேண்டாம் – தம்பி
உண்மையுடை யார்க்கே
பெருமதங்கள் என்னும் – அந்தப்
பேய்பிடிக்க வேண்டா..........
இந்த உலகின் எண்ணிலா மதங்கள்
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்”[22]

என்பன சமயம் பற்றிய பாவேந்தரின் கண்டன குரல்கள். இவ்வாறாக “கடவுள்“ பாவேந்தரின் கவிதைகளில் பாடுபொருளாக அமைவதை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகின்றார்.

பாடுபொருளாக இயற்கை

கவிதை என்றாலே முதலில் அனைவரின் நினைவிற்கும் வருவது இயற்கையே.இயற்கை பற்றி பாடாத கவிஞனே இல்லை என்று கூட கூறமுடியும். சிலரை “கவிஞர்களாக மாற்றுவதே இயற்கை தான்“ என்று

கூறினாலும் மிகையாகாது.இத்தகைய இயற்கையை பாடுபொருளாக கொண்டு பாவேந்தர் பல சிறப்பான கவிதைகளை இயற்றியுள்ளார்.

வான்

ஐந்து பூதங்களில் ஒன்று “வான்“ இதனை “ஆகாயம்“ என்றும் வழங்குவர். இதனை பாவேந்தர் பாடுபொருளாக அமைத்து பாடுகின்றார்.

“விரித்த வானே, வெளியே – எங்கும்
விளைந்த பொருளின் முதலே
திரிந்த காற்றும் புனலும் – மண்ணும்
செந்தீ யாவும் தந்தோய்”[23]

என்றும் வான் பற்றி எழுதியுள்ளார் பாவேந்தர்.

நிலவு

இயற்கை என்றாலே முதலில் கவிஞர்களின் நினைவிற்கு வருவது நிலா தான். நிலவின் அழகை ரசித்து, மயங்கி அதனை தன் கவிதைகளின் பாடுபொருளாக கொண்டு பாடாத கவிஞர்கள் மிகக் குறைவே.

அந்த வகையில் பாவேந்தரும் நிலவின் அழகை ரசிக்காது விட்டுவிடவில்லை.

”வில்லடித்த பஞ்சு
விட்டெறிந்த தட்டு
முல்லைமலர்க் குவியல்
முத்தொளியின் வட்டம்.............
மெல்ல இங்கு வாராய்

வெண்ணிலாவே நேராய்!”[24]

இவை நிலவை பற்றிய பாவேந்தரின் கவிதைகளில் சில துளிகள்.

ஞாயிறு

உலக உயிர்களின் ஆதாரமாக திகழும் ஆதவனைப் பற்றியும் பாவேந்தர் பாடுகின்றார்.

“ஒளிப்பொருள் நீ! நீ ஞானத்

தொருபொருள் வாராய்!

களிப்பினில் கூத்தைச் சேர்க்கும்

கனற்பொருளே, ஆழநீரில்................

வெளிப்பட எழுந்தாய்”[25]

இவ்வாறாக கதிரவனை பாடுபொருளாக்குகின்றார் பாவேந்தர்.

வானவில்

ஒளியின் தன்மையைக் காட்டும் ஒப்பற்ற இயற்கை ஓவியமாம் வானவில் இதனை பாவேந்தர் தன் கவிதைகளில் பாடுபொருளாக்குகிறார்.

“கதிர் எழுந்தது, மழை பொழிந்தது

காணும் திசையிலே!

....

செம்மை வண்ணம் செங்கொடி போல்

சிரித்தந்த விழுந்து

அம்மையின்கை பச்சைவளையல்

அங்குத் தெரிந்தது!

